கிராம நலம்

MADRAS

ப்ரல் '62

சமத்துவத்துக்கு ஒரே வழி

"நீங்கள் என்னை ஆலோசகனுகக் கருதி அணுகுவதானுல், நான் உங்களுக்கு அளிக்கக் கூடிய யோசனை ஒன்றுதான். அதாவது, நீங்கள் இங்கே சமத்துவத்தைக் கொண்டு வர விரும்பினுல், அதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அது என்ன வென்றுல், நீங்கள் கிராமத்திற்குச் சென்று அங்கு ஏழைகளோடு ஏழையாய் வாழ வேண்டும்; கிராம மக்கள் வாழ்க்கையோடு உங்கள் வாழ்க்கை, கலந்து போக வேண்டும். நீங்கள் அவர்களோடு சேர்ந்து, தினமும் எட்டு மணி நேரம் உழைத்துப் பாடுபடவேண்டும். உங்கள் தேவைகளுக்கு அங்கே உண்டாக்கப்படும் பொருள்களையே, உபயோகிக்க வேண்டும். கிராம மக்களுக்கு எழுத்தறிவு வரச் செய்ய வேண்டும் ; தீண்டாமையைப் போக்க வேண்டும் ; பெண்களை முன்னேற்ற வேண்டும்."

மகாத்மாவின் மணி மொழி

கிராம நலம்

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே;
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தால், பின் நமக்கெது வேண்டும்?"

—பாரதியார்.

மாடி 7 | ஏப்ரல் 1962 | படி 7

ஏழை மாணவர்களுக்கு பள்ளிக்கூடங்களில் மதிய உணவு அளிக்கும் முயற்சி, தமிழ் நாட்டில் ஆரம்பமாகி, ஒரு மாபெரும் இயக்கமாக வளர்ந்துள்ளது. கடந்த சில ஆண்டுகளாக, தமிழ் நாட்டின் ஆயிரக் கணக்கான பள்ளிக்கூடங்களில், இந்தத் திட்டம் வெற்றிகரமாக நடைபெற்றுவருவது யாவரும் அறிந்ததே. இந்தத் திட்டத்தின் வெற்றியை, அகில இந்தியத் தலைவர்களும், உலகப் பிரமுகர்களும் பாராட்டியிருப்பதோடு, மற்ற மாநிலங்களும் பின்பற்ற வேண்டும் என்றும் அறிவுரை கூறியுள்ளனர்.

ஏழை எளியவர்களின் கஷ்ட நஷ்டங்களை உணர்ந்து, எதிர்கால சமுதாயத்தின் நன்மைக்கான திட்டங்களை உருவாக்குவதே, மக்கள் அரசாங்கத்தின் நடைமுறைக் கொள்கை ஆகும். குறிப்பாக, ஆரம்பக் கல்வி நிர்வாகம் முழுதும், பஞ்சாயத்து யூனியன்கள் கவனிக்க ஏற்பாடாகி இருப்பது எல்லோருக்கும் தெரியும். அதையடுத்து, கிராமப் பள்ளிக்கூடங்களில் நடைபெறும் மதிய உணவுத் திட்டம், கிராமப் பஞ்சாயத்துத் தலைவரின் மேற்பார்வையில் நடைபெற, இப்போது அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது. (விவரம்: 'கிராம நலம்', மார்ச் மாத இதழ்—பகுதி 2-ல், XIV-ம் பக்கம் பார்க்கவும்.)

அதன்படி, மதிய உணவுத் திட்டத்துக்காக, குழந்தை ஒன்றுக்கு, ஒரு வேளை சாப்பாட்டுக்கு 2 ந.பை. என்ற வீதத்தில், பஞ்சாயத்து நிதியிலிருந்து மானியம் வழங்கவும், இதற்கென பஞ்சாயத்துத் தலைவரை முக்கியஸ்தராகக் கொண்ட ஒரு பொதுக்குழு அமைக்கவும், அரசாங்க உத்தரவு அதிகாரமளிக்கிறது. பஞ்சாயத்தின் அதிகார வரம்புக்கு உட்பட்ட எல்லாப் பள்ளிக்கூடங்களிலும், மதிய உணவு வினியோகக் குழுவின் தலைமைப் பொறுப்பை, பஞ்சாயத்துத் தலைவரே ஏற்றுக்கொள்ளவேண்டும். பஞ்சாயத்தில் உறுப்பினர்களாய் உள்ள மாதர்களும், இந்தப் பொதுக்குழுவில் இடம் பெற வேண்டும். இத்தகைய பொதுக்குழு ஒன்றை, ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஏற்படுத்துவதன் மூலம், மதிய உணவுத்திட்டம் சிறப்பான முறையில் நடைபெற வகை செய்யப்பட்டுள்ளது.

"புதிய பஞ்சாயத்து ஆட்சியின் விளைவாக, சமுதாய நலத் திட்டம் ஒவ்வொன்றையும், கிராம அளவில், பொறுப்பேற்று நிறைவேற்றும் பாதுகாவலர்களாக, பஞ்சாயத்துத் தலைவர்கள் விளங்குவார்கள்" என்ற கருத்தை, அமைச்சர்கள் சட்டசபையில் பல தடவை விளக்கியுள்ளனர். ஏழை மாணவர்க்கு மதிய உணவு அளிக்கும் திட்டம், மிகச் சிறந்த பொதுநலப் பணி. எதிர்கால சமுதாயத்தின் விளைபயிராக விளங்கும் இளங் குழந்தைகளின் வயிற்றுப் பசியைத் தீர்க்கும் பொறுப்பு, மிகவும் புனிதமானது; கனிந்த உள்ளத்தோடு, கண்ணும் கருத்துமாய் கவனிக்க வேண்டிய சேவை. புகழ் தரத்தக்க இந்த அறப்பணியை மேற்கொள்ளும் வாய்ப்பு, இப்போது எல்லாப் பஞ்சாயத்துத் தலைவர்களுக்கும் கிடைத்துள்ளது. இந்தப் புனிதக் கடமையை, அவர்கள் செம்மையான முறையில் நிறைவேற்றுவார்கள் என்று நம்புகிறோம்.

ஆசிரியர்.

சிறந்த பணியாற்றும் பஞ்சாயத்துக்கள்

சென்ற மாத "கிராம நல"த்தில் நான் வெளியிடங்களுக்குச் செல்லும்போது எனக்குச் சொல்லப்படும் நல்ல வேலைகளைப்பற்றிய அறிக்கைகளை அவ்வப்போது மற்ற பஞ்சாயத்துத் தலைவர்களும் அறிந்துகொள்வதற்காகக் "கிராம நல"த்தில் வெளியிட வேண்டுமென்ற என்னுடைய விருப்பத்தைத் தெரிவித்திருந்தேன். சமீபத்தில் திருப்பரங்குன்றம் பஞ்சாயத்து யூனியனுக்குச் சென்றிருந்தபோது, அவனியாபுரம் பஞ்சாயத்துத் தலைவர், அந்தக் கிராமத்தில் செய்திருந்த சில வேலைகளை எனக்குக் காட்டினார். அந்தக் கிராமத்தில் மிகவும் நல்ல முறையில் வேலைகள் செய்யப்பட்டிருப்பதையும், இன்னும் செய்யவேண்டிய வேலைகளுக்கான ஏற்பாடுகளைப்பற்றி பஞ்சாயத்து சபை திட்டம் போட்டிருப்பதையும் பார்த்தபோது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி ஏற்பட்டது. அந்தப் பஞ்சாயத்து செய்த வேலை விவரங்களைப்பற்றிய அறிக்கையை அவர் எனக்கு வாசித்துக்காட்டினார். அந்த அறிக்கையைக் கையில் வாங்கி வந்தேன். அதை மற்ற பஞ்சாயத்துத் தலைவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காக இந்த இதழில் பிரசுரம் செய்ய ஏற்பாடாகியிருக்கிறது.—

கோ. வேங்கடாசலபதி,

கிராம அபிவிருத்திக் கமிஷனர்.

அவனியாபுரம் பஞ்சாயத்தின் ஆக்கப் பணிகள்

திருப்பரங்குன்றம் பஞ்சாயத்து யூனியனில் உள்ள அவனியாபுரம் நகரப் பஞ்சாயத்தில் 13,300 பேர்கள் வசிக்கின்றனர். இந்த பஞ்சாயத்துக்குட்பட்ட அவனியாபுரம், வில்லாபுரம், அயன்பாப்பாக்குடி ஆகிய கிராமங்களில் அபிவிருத்தி வேலைகள் பல செய்யப்பட்டு நல்ல முன்னேற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

முதலாவதாக விவசாயத்துறையில் மூன்று வருடங்களில் இங்குள்ள வயல்களனைத்திற்கும் சீர்திருந்திய விதைகள் கிடைக்கும்படியாக, 350 மணங்கு நெல் விதையும், 50 மணங்கு சிறு தானிய விதைகளும் வினியோகிக்கப்பட்டு, விதைப் பண்ணைகள் மூலம் பெருக்கப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டுள்ளன. இரசாயன உரம் தவிர பஞ்சாயத்துக்குச் சொந்தமான உரக்களத்தின் மூலமும் தனிப்பட்டவர்கள் 30 போஸ்ட் உரக் குழிகள் மூலமாகவும் வருடம் ஒன்றுக்கு 460 டன் கம்போஸ்ட் உரம் தயாரிக்கப்படுகிறது. இவைகளைத் தவிர 116 ஏக்கரில் பசுந் தாளும் பயிர் செய்யப்படுகிறது.

இப் பஞ்சாயத்திற்குட்பட்ட பகுதியில் வட்டார வளர்ச்சி அலுவலகம் மூலமாக, 100 சீர்திருந்திய வகைக் கலப்பைகளும், 5 இடை உழவுக் கருவிகளும், 5 மருந்து தெளிக்கும் கருவிகள், ஒரு மருந்து தூவும் கருவி, ஒரு தழை அமுக்கும் கருவி, ஒரு பர்மியச் சட்டம் ஆக 113 கருவிகள் உபயோகிக்கப்பட்டுள்ளன.

மேலும், ஜப்பானிய முறையில், நெல் 300 ஏக்கரிலும், சீர்திருந்திய முறையில் சிறுதானியங்கள் 40 ஏக்கரிலும், கருப்பு 25 ஏக்கரிலும் நடப்பட்டுள்ளன. இதுவரை 600 ஏக்கரில் பூச்சிகளை நாசம் செய்யும் மருந்துகள் தெளிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக மகசூல் குறிப்பிடத்தக்க அளவு கூடியிருக்கிறது.

கால்நடை.—திருப்பரங்குன்றம் பஞ்சாயத்து யூனியனிலேயே இங்குதான் கால்நடைகள் அதிகம். இங்குள்ள மொத்தக் கால்நடைகள் 5629. அதில் பால் மாடுகள் மட்டும் 1,480 ஆகும். தினமும் மதுரை நகருக்கு இங்கு உற்பத்தியாகும் பால், தயிர், வெண்ணெய் முதலிய பொருட்கள் அதிக அளவில் செல்கின்றன. இக் கால்நடைச் செல்வத்தைக் காப்பதற்காக இங்கு ஒரு முதலுதவிச் சிகிச்சை நிலையம் ஏற்படுத்தப்பட்டு ஸ்டாக்மேன், ஒருவரால் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இதுவரை 217 கால்நடைகளுக்கு சிகிச்சையளிக்கப்பட்டுள்ளன. 82 கால்நடைகள் காயடிக்கப்பட்டன. 987 கால்நடைகளுக்கு தடுப்பு ஊசி போடப்பட்டன. 449 கோழிகளுக்கும் ஊசி போடப்பட்டுள்ளன. இவ்வருடம் 24 உயர்ந்த ஜாதிச் சேவல்கள் வினியோகிக்கப்பட்டுள்ளன. மேலும் இங்கு செய்கை முறையில் கால்நடைகளைக் கருத்தரிக்கச் செய்யும் நிலையம் ஒன்று ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

பொறியியல் வேலைகள்.—அவனியாபுரம் பொது மக்களுக்கு ரூ. 995 செலவில் ஒரு புது குடி தண்ணீர்

கிணறும், ஹரிஜனங்களுக்கு ரூ. 1,200 செலவில் ஒரு புது குடி தண்ணீர் கிணறும் வெட்டப்பட்டுள்ளது. மேலும் தரைமட்ட நீர் வினியோகத் தொட்டி ரூ. 7,000 செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இரண்டு கல் பாலங் கள் முறையே ரூ. 2,000, ரூ. 1,400 செலவில் கட்டப் பட்டுள்ளன. அயன்பாப்பாக்குடியில் ரூ. 920 செலவில் மக்கள் மனமகிழ் மன்றம் ஒன்று புதுப்பிக்கப்பட்டுள்ளது. ஹரிஜனங்களுக்கு ரூ. 800 செலவில் ஒரு குளிக்கும் அறையும், ரூ. 2,250 செலவில் கிராம சேவக்குடி யிருப்பும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இதுவரை செய்து முடிவு பெற்ற வேலைகளின் மொத்த மதிப்பு ரூ. 16,565. தற்போது ரூ. 21,500 செலவில் அவனியாபுரத்திலும், ரூ. 15,400 செலவில் வில்லாபுரத்திலும் மேல் நிலைத் தண்ணீர்த் தொட்டிகள் (Over head tanks) கட்டப்பட்டு வருகின்றன. நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகளின் மொத்த மதிப்பு ரூ. 36,900 ஆகும். முப்பது ஆண்டு காலமாக தீர்க்கப்படாது இருந்த அவனியா புரம் பஞ்சாயத்து மக்கள் குடி தண்ணீர் பிரச்சினை இத் திட்டங்களின் மூலம் ஓரளவுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

மேலும், ரூ. 44,000-க்கான வேலைகள்யூனியன் கவுன் சிலின் அங்கீகாரம் பெற்றுவிட்டன. ஒரு மேல்நிலைத் தண்ணீர்த்தொட்டி, இரண்டு பாலங்கள், மூன்று சாலை களில் தடுப்புசுவர் எழுப்புதல், ஒரு தாய், சேய் நல விடுதி கட்டுதல் ஆகிய வேலைகள் மேற்கண்ட ரூ. 44,000-ல் அடங்கும்.

இங்குள்ள மூன்று கூட்டுறவு ஸ்தாபனங்கள் இப் பகுதி மக்களுக்கு நல்ல முறையில் பணியாற்றிவருகின்றன. முழுக் கடனுதவித் திட்டத்தின் கீழ் (Full Finance Scheme) இந்த ஆண்டில் மட்டும் ரூ. 1,68,912 கடனுகக் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் இரசாயன உரங்களும், சீர்திருந்திய விதைகள், கருவிகள் முத லியன கூட்டுறவு சங்கங்களின் மூலம் வினியோகிக்கப் படுகின்றன.

தச்சு, கொல் தொழிலாளர்களுக்கு ரூ. 480 வரை பாதி விலையில் கருவிகளும், மற்றவர்களுக்கு 62 ராட்டைகள் பாதி விலையிலும் வினியோகிக்கப்பட்டுள்ளன. வசதிக்காக கிணறுகள் தோண்ட, வண்டி மாடுகள் வாங்க, பம்ப் செட் வாங்க முதலிய வேலைகளுக்காக ரூ. 8,500 கடனுகக் கொடுக்கப்பட்டுள்ளது. மூன்று பஞ்சாயத்து யூனியன் பள்ளிகள் மட்டுமே இங்கு உள்ளது. அவைகளில் 1,348 மாணவர்கள் படிக்கின்றனர். இன்னும் சேர்க்கப்படவேண்டிய பிள்ளைகள் 162 மட்டுமேயாகும். பஞ்சாயத்து யூனியனுக்கு உட்பட்ட இவ்வூர் தாய் சேய் நல விடுதியில் ஒவ்வொரு மாதமும் சராசரி 24 பிரசவ கேஸ்கள் கவனிக்கப்படுகின்றன.

அவனியாபுரம் பஞ்சாயத்தின் சாதனைகள்.—கீழ்க் கண்ட வேலைகள் அவனியாபுரம் பஞ்சாயத்தின் நிதி வசதி மட்டுமே கொண்டு கடந்த 1959 முதல் 1961 முடிய நடத்தி முடிக்கப்பட்டுள்ளன.

எட்டு தெருக்களில் சரளை பரப்பப்பட்டுள்ளன. 39 தெருக்களில் கற்கள் பரவப்பட்டுள்ளன. 16 சாலை களில் கற்கள் பரப்பப்பட்டுள்ளன. ஒரு பூங்காவுக்கு முல்வேலி அமைக்கப்பட்டுள்ளது. ஒரு வானொலிப் பெட்டி வாங்கி வைக்கப்பட்டுள்ளது. ஒரு கிணறு புதுப் பிக்கப்பட்டுள்ளது. 19 இடங்களில் சாக்கடைகள் அமைத்து ஒரு இடத்தில் சாக்கடை புதுப்பிக்கப்பட்டுள்ளது. அலுவ லகத்திற்கு சுற்றுச்சுவரும், குப்பை வண்டிகள் நிற்கும் கொட்டகையும் அமைக்கப்பட்டுள்ளன. ஐந்து இடங் களில் தடுப்புச் சுவர்களும், பிரயாணிகள் தங்கும் கொட்ட கையில் தளமும், ஒரு பாலமும், குடி தண்ணீர்க் குழாய்க்கு மேடையும் அமைக்கப்பட்டுள்ளன. மேற் கண்ட பஞ்சாயத்தின் சொந்த வேலைகளுக்காக மட்டும் ரூ. 41,500 வரை செலவழிக்கப்பட்டுள்ளது.

சமுதாய நலத்திட்ட வேலைகளில் அவனியாபுரம் நகரப் பஞ்சாயத்து மிக்க அக்கறை காட்டி சுமார் ரூபாய் ஒரு லட்சம் பெருமானமுள்ள வேலைகளை தனது பகுதியில் செய்யும்படி, பங்குத் தொகை உழைப்பு முதலியவைகளை அளித்து வந்திருக்கிறது. சமுதாய நலத்திட்ட வேலைகள் வெற்றியடைய பஞ்சாயத்து உறுப்பினர்கள் அனைவரும் மிகுந்த அக்கறை காட்டி வருகின்றனர்.

ஆசிரியரின் கருத்தரங்கு :

ஓர் வேண்டுகோள்

பொதுஜனத் தொடர்பு அதிகாரியும், 'கிராம நலம்' ஆசிரியருமான திரு. எஸ். வேங்கடசாமி, எம். ஏ., அவர்கள் மார்ச் முதல் வாரத்தில், கோயமுத்தூர், நீலகிரி மாவட்டங்களில் உதக மண்டலம், கோத்தகிரி, குன்னூர், பெரியநாயக்கன்பாளையம், சத்தியமங்கலம், ஈரோடு ஆகிய வட்டாரங்களில் விரிவாகச் சுற்றுப்பயணம் செய்துவிட்டு வந்திருக்கிறார். அவருடைய சுற்றுப் பயணத்தில் அவருக்கேற்பட்ட அனுபவங்களும், அவருடைய அபிப்பிராயங்களும் 'கண்டதும் கேட்டதும்' என்ற தலைப்பின்கீழ் தொடர் கட்டுரைகளாக "கிராம நல" இதழில் விரைவில் வெளிவரும். இக்கட்டுரைத் தொடரில் முதல் கட்டுரை 'கிராமப்புறங்களில் குடும்பக் கட்டுப்பாடு" என்ற தலைப்புடையதாகும். மலைகளும், காடுகளும் சூழ்ந்த கிராமப்புறங்களில் "குடும்பக் கட்டுப்பாடு" மக்களிடையே வெகுவாகப் பரவியுள்ளதை இக்கட்டுரையில் விளக்கமாகக் காணலாம். "கண்டதும் கேட்டதும்" என்ற தலைப்பின்கீழ் தொடர்ந்து வெளிவரும் கட்டுரைகள் பற்றிய அபிப்பிராயங்களையும், மேற்கொண்டு அவை பற்றிய விளக்கங்களையும் வாசகர்கள் எழுதி அனுப்பினால், அக் கடிதங்கள் "கடிதக் கருத்தரங்கு" பகுதியில் பிரசுரிக்கப்படும்.

வளரும் சமுதாயம்

பஞ்சாயத்துக்களின் புதுமலர்ச்சி

கண்டதும் கேட்டதும்

பொதுஜனத் தொடர்பு அதிகாரி

(ஆசிரியர், "கிராமநலம்")

"ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்தும், தன்னிடமுள்ள வசதிகளுக்கு ஏற்ற வகையில், கிராம வாசிகளின் தேவைகளையும் கணக்கிட்டு, உற்பத்தியைப் பெருக்குவதற்கான திட்டம் ஒன்றை வகுக்க வேண்டும்" என்று சுமார் பதினைந்து மாதங்களுக்கு முன்பு, அமைச்சர் பக்தவத்ஸலம் அவர்கள் பத்திரிகையாளர் கூட்டம் ஒன்றில் பேசும் பொழுது வற்புறுத்திக் கூறினார். தமிழ்நாட்டிலுள்ள சுமார் 12,500 பஞ்சாயத்துக்களும், இந்தப் புதிய பொறுப்பை எப்படி ஏற்று நடத்துவது என்பதைக் குறித்து பலரும் பல்வேறு சமயங்களில் ஆலோசித்து வந்திருக்கிறார்கள். இந்த ஆலோசனையின் விளைவாகத்தான் "கல்யாணகுப்பம் திட்டம்" உருவாயிற்று என்று கூறலாம்.

மக்கள் திட்டம்

மக்களின் அனுபவங்களுக்கு மதிப்புக்கொடுத்து உருவான திட்டமே, முழுப்பயன் தரும். இதை நன்கு உணர்ந்தவர் தமிழ்நாட்டின் அபிவிருத்திக் கமிஷனராகப் பணியாற்றி, இப்போது பிரதம செயலாளர். பொறுப்பேற்றுள்ள திரு. ஆர். ஏ. கோபாலசாமி அவர்கள் சாத்திய பூர்வமான ஒரு திட்டத்தை—கிராமவாசிகளின் அனுபவங்களுக்கு மதிப்பு கொடுக்கும் ஒரு திட்டத்தை—ஜனங்களுடன் கலந்தாலோசித்து உருவாக்க அவர் எண்ணினார்.

அதன் விளைவு என்ன? இரண்டு நாட்கள் (1960-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19, 20-ம் தேதிகளில்) செங்கற்பட்டு மாவட்டம் கல்யாணகுப்பம் கிராமத்தில் உள்ள கிராமவாசிகளுடன் ஆலோசனை நடத்தப்பட்டது. தமிழ்நாடு அரசாங்கத்தின் மிக முக்கிய அதிகாரியே கிராமத்துக்கு வந்துவிட்ட பிறகு, மற்ற பல இலாகாக்களின் தலைவர்களும், கலெக்டர் டெப்டி கலெக்டர் முதலியவர்களும், கிராமத்துக்கு வருவதில் வியப்பொன்றுமில்லையல்லவா?

இரண்டு நாட்கள் அந்த கிராம ஜனங்களுடன் நடைபெற்ற ஆலோசனையின் பயனாக, உணவு உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்துடன் அனுபவசாத்தியமான ஒரு திட்டம் உருவாக்கப்பட்டது. இந்தத் திட்டத்தில் முக்கியமாய் இருப்பவை பின்கண்ட பத்து அம்சங்களாகும்: (1) உர உற்பத்தி, (2) பசுந்தழை உர உற்பத்தி, (3) பொறுக்குவிதைகள், (4) பயிர்ப்பாதுகாப்பு, (5) நூதன விவசாயக் கருவிகளின் உபயோகம், (6) ஜப்பான் முறை நெல் சாகுபடி, (7) நிலக்கடலை சாகுபடி, (8) ஆமணக்கு சாகுபடி, (9) மரம் நடுதல், (10) நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குதல்.

பத்து அம்சத் திட்டத்தில் கூடுமான வரை, அபிவிருத்தி ஏற்பட, கல்யாணகுப்பம் பஞ்சாயத்து பெரிதும் பாடுபட்டுள்ளது. இது மிகவும் பாராட்டக்கூடிய சாதனையாகும்.

இலட்சியக் கிராமம்

கல்யாணகுப்பத்துக்கு நான் சென்றபோது அந்தக் கிராமத்தில் எந்தவித உற்சாகக் குறிகளும் தென்படவில்லை. ஏனெனில் அங்கே ஆள்நடமாட்டமே இல்லாமலிருந்தது. வழி தவறி நான் வேறு கிராமத்துக்கு வந்துவிட்டேனோ என்றுகூட, ஒருகணம் நினைத்தேன். என்னுடன் வந்திருந்த அகில இந்திய ரேடியோ நிலையத்தார் (திரு. மஜிருடீன், திரு. இராமச்சந்திரன் ஆகியோர்) என்னை பரிதாபத்தோடு பார்க்கத் தொடங்கினர். கல்யாணகுப்பத்தைப் பற்றி நிறைய அவர்களுடன் பேசிக்கொண்டு வந்திருந்தேன். உணவு உற்பத்தித் துறையில் முன்னோடியாக உள்ள ஒரு இலட்சியக் கிராமமாக, அதைக் கற்பனை செய்துகொண்டு, நேரில் காணும் ஆர்வத்தோடு விரைந்து வந்தோம்.

திகைப்பூட்டிய அந்தக் கிராமச் சூழ்நிலையில், வெறிச்சோடிய தெருவில், ஒரு பெரியவரைக் கண்டோம். ஊரில் எல்லோரும் பக்கத்தில் உள்ள அரிஜனக் குடியானவர் பகுதிக்குப் போய் இருக்கிறார்கள், என்ற செய்தியை அவர் அறிவித்தார்.

நாங்கள் அந்தக் கிராமத்தை ஆராய்ந்து கொண்டே நடந்து சென்றோம். கிராமத்தை விட்டு சுமார் 200 கஜ தூரம் சென்றதும் திருவள்ளூர் பஞ்சாயத்து யூனியன் தலைவர் திரு. கோவிந்தப்ப நாயுடு அவர்கள் எங்களுடன் கலந்து கொண்டார். அந்தக் கிராமத்தைச் சேர்ந்த ஒவ்வொரு வீட்டின் பின்புறத்திலும் உரக் குழிகள் செம்மையான முறையில் அமைக்கப்பட்டிருப்பதை அவர் எங்களுக்குக் காட்டினார்.

சிறிது தூரம் சென்றதும் "இந்தக் கழனியைத் கவனித்தீர்களா! எவ்வளவு செழிப்பாக நெற் கதிர்கள் வந்துள்ளன", என்றார் என் அருகில் இருந்த ரேடியோ

நண்பர் திரு. மஜிருடன். "பக்கத்தில் உள்ள பயிருக்கும் இதற்கும் ஏன் இவ்வளவு வித்தியாசம்" என்ற கேள்வியை போட்டார் திரு. இராமச்சந்திரன் அவர்கள். "இதிலென்ன ஆச்சரியம் இருக்கிறது?" பொறுக்குவிதைகளை உபயோ கிப்பதால் என்ன லாபம் என்பதற்கு இதுவே சரியான உதாரணமாகும்" என்று சிரித்துக்கொண்டே விளக்கம் கூறினார், மாவட்ட விவசாய அதிகாரி திரு. கணேச மூர்த்தி அவர்கள். எங்கள் சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டே எங்களைத் தொடர்ந்து அவர் வந்திருக்கிறார் போலும்! உடனடியாக ரேடியோ நண்பர்கள் அநேக நுட்பமான கேள்விகளையெல்லாம் போட்டு அவரைத் துளைத்துவிட்டார்கள். அவர் கொஞ்சமும் சலிப்படையாமல் எல்லாவற்றுக்கும் தெளிவான பதில்களை எடுத்துக் கூறிக்கொண்டே வந்தார். குறிப்பாக, அந்தப் பிரதே சத்தைச் சார்ந்த விவசாயிகளின் அனுபவங்களுக்கும், மண்ணின் தரத்துக்கும் முக்கியத்துவம் கொடுத்து, விவ சாயத் திட்டம் உருவாக்கப்படுவதை புள்ளி விவரங்களோடு எடுத்துக்காட்டினார். சமீபத்திலே "போபால்" என்ற நகரத்தில் நடைபெற்ற அகில இந்திய விவசாய நிபுணர் கள் மாநாட்டில், இந்த அடிப்படை தத்துவம் ஒப்புக் கொள்ளப்பட்டதையும், அதற்கு முன்பே தமிழ் நாட்டில் இதையொட்டி, கிராம உணவு உற்பத்திப் பெருக்கத் திட்டம் பஞ்சாயத்துக்கள் மூலம் உருவாகி நடைபெற ஏற்பாடுசெய்யப்பட்டதையும் விரிவாக விளக்கினார்.

ஹரிஜன காலனியின் அழகுத் தோற்றம்

இதற்குள் மக்களின் மகிழ்ச்சி ஆரவாரம் எங்களை வரவேற்றது. கலியாணக்குப்பத்தைச் சார்ந்த ஹரிஜன மக்கள் வாழும் பகுதிக்கு வந்ததாக அறிந்தோம். ஆனால் அங்கே அசுத்தமோ அவலக்குரலோ இல்லை. ஆனந்தம் நிறைந்த ஜனங்கள்—ஒவ்வொரு வீட்டின் முன்னால் ஒவ்வொருதென்னம்பிள்ளை வளர்ந்திருந்தது. அதைப் போற்றிப்பாதுகாக்க அழகான தட்டிகள் கட்டப்பட் டிருந்தன. ஒவ்வொரு புழைக்கடையிலும் உரக்குழிகள் செம்மையான முறையில் அமைக்கப்பட்டிருந்தன. இந்தக் காட்சிகளையெல்லாம் கண்ட ரேடியோ நண்பர்கள், அங்கேயிருந்த ஜனங்களுடன் உரையாடி அநேக செய்தி களைத் திரட்டத் தொடங்கி விட்டனர்.

இதுபோன்ற சந்தர்ப்பங்களில் வழக்கமாக நடைபெறும் பிரசங்கங்களோ, குறைகளைக்கூறி மகஜர்கள் கொடுப்பதோ, அங்கே நடைபெறவில்லை. அதற்குமாறாக, அங்கேயுள்ள குழந்தைகள் எவ்வளவு ஆனந்தமாக வாழ்கிறார்கள் என்பதையும், மாதர்கள் எவ்வளவு திருப்தியோடு பணியாற்றுகிறார்கள் என்பதையும் அறிய முடிந்தது.

அந்த சமயத்தில், அந்தப் பஞ்சாயத்தின் உப தலைவ ரான திரு. பி. கணபதி அவர்கள், பஞ்சாயத்தின் பொறுப்பைப்பற்றி விளக்கத் தொடங்கினார். (பஞ்சாயத் துத் தலைவர் வெளியூர் சென்றிருந்ததால் அன்று கிராமத் தில் இல்லை). கல்யாண குப்பம் கிராமத்தில் நவீன விவசாயக் கருவிகள் உபயோகப்படுத்துவதையும் உரக் குழி கள் பன்மடங்காகத் தயாரிக்கப்படுவதையும், பொறுக்கு விதைகள் தயாரித்து வினியோகிப்பதையும், எங்களுக்கு நேரில் காட்டினார். அந்தச் சிறிய கிராமத்தில் 10 பேரஸ் கலப்பைகளும் 140 ஸ்டார் கலப்பைகளும், "பர்மில்செய்ட் டன்" என்ற தழை மிதிக்கும் கருவிகள் 10-ம் உள்ளன. அந்தக் கிராமத்துக்குத் தேவையான பொறுக்கு விதைகளை (சொர்ணவாரி பயிருக்காக டி.கே.எம். 6, சம்பா பயிருக் காக பி.ஏ.எம். 3, சி. ஓ. 18, ஆகியவற்றை) கிராமத் திலேயே பயிர் செய்து, தக்க முறையில் மற்றவர்களுக்கு வினியோகம் செய்ய, ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கிராமப் பள்ளிக்கூடத்தை அடுத்துள்ள சமுதாய உரக்குழி, மிகப்புதிய ஒரு முயற்சியாகும். இக்கிராமத் தில் உள்ள விவசாயிகள் தமக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள குழிகளில் குப்பைகளைச் சேகரித்து, அவற்றைத் தக்கவாறு பயன்படுத்திக் கொள்கின்றனர். கிராமத்திலுள்ள ஒவ் வொரு குடும்பத்திற்கும், இதில் பொறுப்புண்டு.

கிராமக் கருத்தரங்கு

கல்யாணகுப்பம் கிராமத்தை விட்டு நாங்கள் புறப்படு முன், அவ்வூர் ஆரம்பப் பாடசாலை கட்டிடத்தில் கருத் தரங்கு ஒன்று நடைபெற்றது. திருவள்ளூர் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த பல பிரமுகர்களும், கல்வி உப கமிட்டியின் தலைவர் உள்பட பல இளைஞர்களும், பஞ்சா யத்து ஆட்சியில் ஏற்பட்டுள்ள புதிய அனுபவங்களை விளக் கினார்கள். குறிப்பாக, பஞ்சாயத்து யூனியன் தலைவர் திரு. கோவிந்தப்ப நாயுடு, கமிஷனர் திரு. எம். என். இராமகிருஷ்ணன், ஆகியோர் பயனுள்ள புள்ளி விவரங் களை அறிவித்தனர். உணவு உற்பத்திப் பெருக்கத் திட் டத்தை உருவாக்குவதில் உள்ள கஷ்ட நஷ்டங்களை, திருவள்ளூர் யூனியனைச் சேர்ந்த பஞ்சாயத்துத் தலைவர்கள் நன்றாக உணர்ந்து வருவதாகவும், பஞ்சாயத்துத் தலைவர் கள் எல்லோரும் உற்சாகத்தோடு, தம் தம் கிராமங் களில் பொறுப்புடன் காரியங்களைச் செய்வதாகக் கூறினர். குறிப்பாக, கல்யாணகுப்பம் கிராமத்தாருக்குள்ள ஒரே குறை, நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கும் முயற்சியில், அரசாங்கம் மேலும் அதிக சிரத்தை காட்டவேண்டும் என்பதுதான்.

கிராமத்திலுள்ள ஒவ்வொரு குப்பமும், சமுதாய வளர்ச்சிப் பணியில் பங்குகொள்ளும் வகையில், பஞ்சா யத்தின் முயற்சி மேலும் வளரவேண்டும். குறிப்பாக, குழந்தைகளின் படிப்பு விஷயத்தில் கிராமப் பஞ்சாயத்து அங்கத்தினர்கள் எல்லோரும் அக்கறை காட்டவேண்டும். அப்போதுதான், கிராமங்களில் உள்ள பள்ளிக்கூடங்கள் திறமையான முறையில் நடைபெற வழி பிறக்கும். கால்நடை வளர்ச்சிக்கான திட்டங்களிலும், கிராமப் பஞ்சாயத்து அக்கறை செலுத்தவேண்டும். இது போன்ற அபிப்பிராயங்களை அங்கே நடைபெற்ற கருத் தரங்கில் கேட்க முடிந்தது. கலியாணகுப்பத்தை விட்டுப் புறப்படும்பொழுது, ரேடியோ நண்பர்களுக்கும், மாவட்ட விவசாய அதிகாரிக்கும், பஞ்சாயத்து யூனியன் தலைவர், மற்ற பிரமுகர்களுக்கும் தனித்தனியே, பல்வேறு வித எண்ண அலைகள் மோதிக்கொண்டிருந்தன.— "வளரும் தமிழகம்", என்ற தொடரில் கல்யாண குப்பம் கிராமத்தில் தாங்கள் பதிவு செய்த உரையாடல

(8-ம் பக்கம் பார்க்க)

தமிழ் நாட்டின் புதிய மந்திரி சபை

1. திரு. கு. காமராஜ், முதல் அமைச்சர்.—பொதுத்துறை, திட்டம், பொது நிர்வாகம் (ரெவினியூ போர்டு, ஜில்லா ரெவினியூ நிர்வாகம் உட்பட), சமுதாய அபிவிருத்தி, பஞ்சாயத்து, போலீஸ், போக்குவரத்து.

2. திரு. எம். பக்த்வத்ஸலம், நிதி-கல்வி அமைச்சர்.—நிதி, கல்வி, தொழிலாளர் நலன், கோர்ட்டுகள், சிறை, சட்டப்பேரவை, தேர்தல், கதர்-கிராமக் கைத்தொழில், அறநிலையங்கள், ஆட்சி மொழி.

3. திரு. ஆர். வெங்கட்ராமன், தொழில் அமைச்சர்.—தொழில், விற்பனை வரி, போக்குவரத்து (தேசியமயமாக்கப்பட்டது), தொழில் நுட்பப் படிப்பு, மின்சாரம், வீட்டுவசதி, கைத்தறி, நூல், ஜவுளி, சுரங்கம், கனிவளம், இரும்பு—உருக்குக் கட்டுப்பாடு, சாமான் விலை—சப்ளை கட்டுப்பாடு, கம்பெனிகள், பத்திரிகைக் காகித கட்டுப்பாடு, மாஜி ராணுவத்தினர்கள், சிட் பண்டுகளுக்கான சட்ட நிர்வாகம், சட்டம்.

4. திரு. பி. கக்கன், விவசாய அமைச்சர்.—உணவு, விவசாயம் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள், கால்நடைப் பராமரிப்பு, ஹரிஜன நலம், மதுவிலக்கு.

5. திரு. வி. ராமையா, பொது மராமத்துத்துறை அமைச்சர்.—மராமத்து இலாகா; ரெவினியூ இலாகா; கடன் கொடுத்தல் பற்றிய சட்டம் (கிராம மக்களின் கடன் தொல்லை பற்றியது); எடைகள், அளவுகள் பற்றிய சட்டம்.

6. திருமதி ஜோதி வெங்கடாசலம், சுகாதார அமைச்சர்.—பொது சுகாதாரம், வைத்தியம், மாதர், குழந்தைகள் நலன், அனுதை விடுதிகள், வீட்டு வசதி கட்டுப்பாடு.

7. திரு நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார், கூட்டுறவு அமைச்சர்.—கூட்டுறவு, மீன் வளம், காடுகள், சின்கோனு.

8. திரு ஜி. பூவராகன்.—செய்தி அமைச்சர், செய்தி, விளக்கம் ரெஜிஸ்ட்ரேஷன், விளம்பரம், அரசாங்க ஸ்டேஷனரி, அரசாங்க அச்சகம்.

9. திரு. எஸ். எம். அப்துல்மஜீத், முனிசிபல் நிர்வாக அமைச்சர், (முனிசிபல் நிர்வாகம்.)

வளரும் சமுதாயம்

கிராமப் பஞ்சாயத்து பவனம்

மகாராஷ்டிர மாநிலத்தில் குபலா என்ற கிராமத்தில் சமீபத்தில் மிகப் பெரிய அளவில் கிராமப் பஞ்சாயத்து பவனம் ஒன்று கட்டப் பட்டுள்ளது. கிராமத்தில் உள்ள மக்களாலேயே 4,000 ரூபாய் செலவில் இந்தக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

கிராம உற்பத்தித் திட்டங்கள்

ராஜஸ்தானில் கிராம உற்பத்தித் திட்டங்களை பஞ்சாயத்து சமிதிகளே தயாரித்து நடத்த முற்பட்டு விட்டன. அந்த மாநிலத்தில், பண்டி என்ற மாவட்டத்தில், குடும்பத் திட்டங்கள், கிராமத் திட்டங்கள் எல்லாம் கிராம சபைகளிலேயே விவாதிக்கப்பட்டு உருவாக்கப் பட்டுள்ளன.

சமிதியின் சமூகப் பணி

பஞ்சாப் மாநிலத்தில் ஜிரா (Zira) வட்டார சமிதி ஒரு முடிவு எடுத்துள்ளது. அதன்படி, ஒவ்வொருமாதம் முதல் தேதியன்று, சமிதி உறுப்பினர்கள் உட்பட வட்டாரத்தில் உள்ள எல்லா மக்களும், தங்களுடைய தனிப்பட்ட வேலைகளைத் தள்ளிவைத்து விட்டு, அபிவிருத்தி வேலைகளில் முழுக்கவனத்துடன் ஈடுபடவேண்டும். சமிதி உறுப்பினர் ஒவ்வொருவரும், இந்தப் பணிக்காக, தன்னுடைய பொறுப்பில் குறைந்தது ஒரு கிராமத்தையாவது அடிப்படையாக வைத்துக்கொண்டு பணிபுரிய வேண்டும். மக்கள் தாங்களே முன் வந்து பணிபுரியும் இந்த வேலைத் திட்டமானது மார்ச் மாதம் முதல் நடைமுறையில் அமுலுக்கு வரும்.

பஞ்சாயத்தும் மீன்குத்தகையும்

ஆந்திரப் பிரதேசத்தில் கிழக்கு கோதாவரி மாவட்டம் பெத்தாபுரம் வட்டாரத்தில் ராயபூல பட்டினம் கிராமப் பஞ்சாயத்தானது உள்ளூரில் உள்ள குளத்தில் மீன் பிடிக்கும் உரிமையைப் பெற்று, 1960–61-ம் ஆண்டில் அந்தப் பஞ்சாயத்தானது அதன் மூலம் கிடைத்த வருமானம் ரூ. 3,200-யை மாநில அரசாங்கத்திற்கு அளித்துள்ளது. மீன் பிடிக்கும் வேலை இத்துறையில் பயிற்சி பெற்றுள்ள 40 கிராம சேவக்குகளால் நடத்தப்பெற்றது. இதன்மூலம் கிடைத்த மொத்த வருவாய் ரூ. 20,000 ஆகும்.

["பஞ்சாயத்து ரா " மார்ச் இதழிலிருந்து எடுக்கப்பட்டது.]

கேள்வியும் பதிலும்

"[பஞ்சாயத்து ராஜ்" என்ற பத்திரிகையிலிருந்து]

கேள்வி : பழைய பஞ்சாயத்து ஆட்சி முறை அழிந்துபடக் காரணங்கள் என்ன ?

பதில் : பிரிட்டிஷ் ஆட்சி நம் நாட்டில் ஏற்பட்டதும், நாட்டின் நிர்வாகம் ஒரே இடத்தில் குவிக்கப்பட்டது. பஞ்சாயத்துக்கள் அதனால் செல்வாக்கை இழந்தன. விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சியும் பொருளாதார நிலையில் மிகுந்த மாற்றங்களை ஏற்படுத்தியது. போக்குவரத்தில் ஏற்பட்ட முன்னேற்றம், தொழிற்சாலைகள் அதிக அளவில் ஏற்படுத்தப்பட்டது எல்லாம் கிராமப் பஞ்சாயத்துக்களில் செல்வாக்கை ஓரளவுக்குக் குறைத்தன. ஆனால், பஞ்சாயத்து ஆட்சி முறையின் அவசியம் உணரப்பட்டு, பிரிட்டிஷ் ஆட்சி காலத்திலேயே, அதற்குப் புத்துயிர் அளிப்பதற்கான முயற்சிகள் செய்யப்பட்டன. 1907-ம் ஆண்டில் "அதிகாரப் பரவல் முறை" பற்றி பரிசீலனை செய்ய நியமிக்கப்பட்ட ராயல் கமிஷன், பின்பு வந்த மாண்டேகு-சேம்ஸ்போர்ட் சீர்திருத்தங்கள் 1935-ம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டம் ஆகியவற்றை உதாரணமாகக் கூறலாம். இருந்தாலும் முழு அதிகாரங்களையும் பஞ்சாயத்துக்கள் வசம் மாற்ற உருப்படியாக ஒன்றும் அக் காலத்தில் செய்யப்படவில்லை. சுதந்திர அரசாங்கம் அமைக்கப்பட்ட பின்பு தான் இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

கேள்வி : பஞ்சாயத்து ஆட்சியினால் உண்டாகின்ற முக்கிய நன்மைகள் யாவை ?

பதில் : சுதந்திரம், ஜனநாயகம் என்ற அமைப்புகளிலிருந்து ஏற்படுகின்ற பயன்கள் பஞ்சாயத்து ஆட்சிக்கும் பொருந்தும். கிராமப்புறங்களில் உள்ள மக்களிடையே நல்லதொரு பொறுப்புணர்ச்சியை ஏற்படுத்துவதன் மூலம், நாட்டின் நிர்வாகத்தில் கிராம மக்கள் நேரடிப் பங்கெடுத்து, பொறுப்பும் ஆர்வமும் உள்ள பிரஜைகளாக அவர்களை மாற்றியமைக்க பஞ்சாயத்து ஆட்சி முறை பெரும் உதவி புரிகிறது. தனி மனிதனின் திறமை வெளிப்படவேண்டுமானால் அவனிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட வேண்டும். இதைத்தான் பஞ்சாயத்து ஆட்சி செய்கிறது. அவர்கள் தவறுகள் புரியலாம். தவறுகள் யார் தான் செய்யவில்லை ஆரம்பத்தில் தவறுகள், சிக்கல்கள் ஏற்படலாம் ஆனால், கால ஓட்டத்தில், அனுபவ ரீதியாக அவர்கள் பெறுகின்ற அனுபவம் இவற்றையெல்லாம் சரிசெய்து விடும். கிராமப் புறங்களில் நல்லதொரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது என்பதை யாரும் மறுக்கமுடியாது. கிராமப் புறங்களில் வலிவும் ஆர்வமும் உள்ள புதிய தலைமை உருவாகி வருகிறது. நிர்வாகம் நல்ல முறையில் நடைபெற்று, உண்மையான மக்களாட்சி மலர பஞ்சாயத்து ஆட்சி நிச்சயமாக வழிகோலும்.

சிறிய நீர்ப்பாசன வேலை நிர்வாக மாற்றம்.

கேள்வி.—1-4-1961 முதல் சிறிய நீர்ப்பாசன வேலையில் ஈடுபட்டிருக்கும் சிப்பந்திகளை நெடுஞ்சாலை கிராமக் கட்டு வேலைகள் துறையுடன் இணைக்கப்பட்டதினால், ஆற்று நீர்ப்பாசன வேலைத் திட்டத்தின் பகுதியாக உள்ள நீர்ப்பாசன ஆதாரங்களைப் பாதுகாத்தல், பராமரித்தல் ஆகிய வேலைகளைக் கவனிக்க ரெவின்யூ துறையைச் சார்ந்த தொழில் நுட்பம் வாய்ந்த சிப்பந்திகள் இல்லாமல் போய் விட்டது என்று வட ஆர்க்காடு மாவட்டக் கலெக்டர் கூறுகிறார். எதிர்கால பாதுகாப்புக்கும் பராமரித்தலுக்குமாக இந்த நீர்ப்பாசன ஆதாரங்கள் நெடுஞ்சாலை கிராமக் கட்டு வேலைகள் துறையினருக்கு மாற்றப்பட வேண்டும் என்று அவர் அபிப்பிராயப்படுகிறார்.

அரசாங்கத்தின் முடிவு.—11-4-1961 தேதியிட்ட ரெவினியூத் துறையின் அரசாங்க ஆணை எண் 1590 மாவட்டக் கலெக்டரின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுகிறது. அந்த ஆணையில் சிறிய நீர்ப்பாசன ஆதாரங்களை பராமரித்தல், பழுது பார்த்தல் சம்பந்தமான முக்கியமான நிர்வாக சம்பந்தமான வேலை இனங்களை 1-4-1961 முதல் நெடுஞ்சாலைகள், கிராமக்கட்டு வேலைகள் துறைக்கு மாற்றிக் கொள்ளலாம் என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, ஓர் ஆற்று நீர்ப்பாசன வேலைத் திட்டத்தின் பகுதியாக உள்ள நீர்ப்பாசன ஆதாரங்களை பாதுகாத்தல், பராமரித்தல் ஆகிய வேலைகளை ரெவின்யூத் துறையினரிடமிருந்து நெடுஞ்சாலைகள்-கிராமக்கட்டு வேலைகள் துறையினரின் அதிகாரத்திற்கு மாற்றப்படலாம் என்று வட ஆர்க்காடு மாவட்டக் கலெக்டரின் அபிப்பிராயம் சரியானதே.

(கிராம நல தல நிர்வாகத்துறையின் 1962-ம் ஆண்டு ஜனவரி மீ 18உ இட்ட மெமோ எண்: 240659-பி.உ.-51-3

மாவட்ட அபிவிருத்தி மன்றக் கூட்ட நடைமுறை

கேள்வி.—தஞ்சாவூர் மாவட்டக் கலெக்டர் கீழ்க்கண்ட விஷயங்களில் தகவல் கோரி எழுதியுள்ளார் :—

(i) அரசாங்க அதிகாரியாக உள்ளவர் மாவட்ட அபிவிருத்தி மன்றத்தின் உறுப்பினராக இருக்கிறார். அவர் மாவட்ட அபிவிருத்தி மன்றக் கூட்டத்தில் பிரசன்னமாகி இருப்பதை கூட்டம் நடத்துவதற்கான (கோரம்) எண்ணிக்கைக்காக சேர்த்துக் கொள்ளப்படலாமா ?

(ii) மன்றத்தின் தலைவர் இல்லாதபொழுது, அதிகாரச் சார்புடைய உறுப்பினர் ஒருவரை மாவட்ட அபிவிருத்தி மன்றத்தின் கூட்டத்திற்கு தலைமை வகிக்க நியமனம் செய்யலாமா ? அப்படியில்லையென்றால், அதிகாரச் சார்பில்லாத உறுப்பினர்களிடையே உப தலைவர்கள் பட்டியல் ஒன்றினை இந்தக் காரியத்திற்காக தயாரித்துக் கொள்ளலாமா ?

அரசாங்கத்தின் முடிவு.—தஞ்சாவூர் மாவட்டக் கலெக்டர் எழுப்பியுள்ள கேள்விகளை அரசாங்கம் பரிசீலனை செய்து பார்த்தது. அதிகாரச் சார்புடைய உறுப்பினர்களுக்கு கூட்டத்தின் நடவடிக்கைகளில் பங்கெடுத்துக்கொள்ள மட்டும் தான் உரிமை உண்டே தவிர, கூட்டத்தில் வாக்கெடுப்புகளில் கலந்து கொள்ள உரிமை கிடையாது என்பதும், கூட்டத்தின் விவாதங்களில் கலந்து கொள்வது தவிர, மற்ற எந்தக் காரியங்களுக்காகவும் அவர்கள் உறுப்பினராக இருக்கக்கூடாது என்று 1958-ம் ஆண்டு சென்னை மாவட்ட அபிவிருத்தி மன்றங்களின் சட்டத்தின் [1958-ம் ஆண்டு சென்னைச் சட்டம் XVIIII பிரிவு 6 (3)-ன் கீழ் மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருப்பதால் அதிகாரச் சார்புடைய உறுப்பினர்கள் கூட்டங்களில் பிரசன்னமாக இருப்பது கூட்டத்தின் "கோரத்தை" நிர்ணயிக்க கணக்கில் எடுத்துக் கொள்ளப்படக்கூடாது.

மேலே சொல்லப்பட்டுள்ள காரணங்களை முன்னிட்டு, மன்றங்களின் கூட்டத்திற்கு தலைமை வகிக்க அரசாங்க உறுப்பினரை நியமனம் செய்யக்கூடாது; அத்துடன், 1958-ம் ஆண்டு சென்னை மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் சட்டத்தின் பிரிவு 6 (3)-ன்கீழ் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவோ கூடாது என்று அரசாங்கம் கருதுகிறது. இதற்காக அதிகாரச் சாற்பற்ற உறுப்பினர்களிடையே பொறுக்கி எடுக்கப்பட்டுள்ள உப தலைவர்கள் பட்டியல் தயாரிக்கப்பட வேண்டிய அவசியம் ஒன்றும் இல்லை என்றும் அரசாங்கம் கருதுகிறது. கூட்டத்தில் பிரசன்னமாகியுள்ள, மாவட்ட அபிவிருத்தி மன்றத்தின் ஐந்து நிலைக் கமிட்டிகளின் தலைவர்களாக உள்ளவர்களில் வயதில் முத்தவராக உள்ள அதிகாரச் சார்பற்ற உறுப்பினர் ஒருவரை, தலைவர் இல்லாத பொழுது மாவட்ட அபிவிருத்தி மன்றத்தின் கூட்டத்திற்கு தலைமை வகிக்கும்படி செய்வது என்ற ஒரு நடைமுறை வழக்கத்தைக் கடைப்பிடிப்பதின் மூலம் இந்தப் பிரச்னைக்கு ஓர் தீர்வு காண முடியும் என்று அரசாங்கம் கருதுகிறது.

(கிராமநல தல நிர்வாகத்துறையின் 1062ஞ் ஜனவரியீ 16உ யிட்ட அரசாங்க ஆணை எண் 148)

கேள்வி:—தற்காலம் சிட்டங்கள் வாங்கப்படாமலும், கதர் அபிவிருத்தி ஸ்தம்பித்து நிறுத்தப்பட்டும் உள்ள நிலையில், நூற்பு அமைப்பாளர்களின் பணியின் அவசியம் என்ன ? ஏதேனும் மாற்றுப்பணி கொடுக்க இயலுமா ?

(தலைவர், திருநாவலூர் பஞ்சாயத்து யூனியன் மன்றம்.)

பதில் :—நூற்று அமைப்பாளர்கள் புதிய நூற்பாளர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக உள்ளனர். உற்பத்தி செய்யப்படுகிற சிட்டங்களை வாங்குவதற்காக நூற்புப் பணியாளர்கள் இல்லை. வட்டாரங்களிலிருந்து நூற்பு அமைப்பாளர்களையும், வளர்ச்சி அதிகாரிகளையும் (கதர்) திரும்ப வரவழைத்துக் கொண்டு, அவர்களுக்கு வேறு மாற்றுப்பணி அளிப்பதற்காக மாநில கதர், கிராமக் கைத்தொழில் போர்டு ஏற்பாடு செய்து வருகிறது.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

களையும் சொற்பொழிவுகளையும், தொகுத்து எவ்வளவு அழகான முறையில் ஒலி பரப்பலாம் ? என்ற பிரச்சினையில் ரேடியோ நண்பர்களின் மனம் ஈடுபட்டது.

விவசாயத் திட்டம் போன்ற நாட்டின் எதிர்கால நல்வாழ்வுக்கான திட்டங்களை மக்களே உருவாக்கி செயலாற்றத் தொடங்கியுள்ளது நாட்டின் சுபிட்சத்திற்கு நல்லதொரு அறிகுறியாகும். கிராமப் புறங்களிலே புத்துணர்ச்சிகொண்டு ஆக்கப் பணிபுரிகின்ற தொண்டுள்ளம் கொண்ட புதியதொரு தலைமை உருவாகி பெருகுகிறது. விவசாயத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு இனி மேல் தனிப்பட்ட நபர்களை மட்டும் நம்பி இருக்கவேண்டியதில்லை. புதிய பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் சேவை மனப்பான்மையுடன், ஊக்கத்துடனும், உறுதியுடனும் ஆக்கப் பணிபுரிய முன்வந்துவிட்டன. ஒரு காலத்தில் கிராமங்கள் புறக்கணிக்கப்பட்டிருந்த அவல நிலை மாறி, புதியதோர் சகாப்தத்தினை கிராம மக்களே உருவாக்குகின்ற நல்லதோரு நிலைமினை ஏற்படுத்தப் பாடுபடும் அத்தனை பேரும் போற்றுதலுக்கும், பாராட்டுதலுக்கும் உரியவர்கள் ஆவார்கள். விழிப்புணர்ச்சியோடும், தன்னம்பிக்கையுடனும் கிராம மக்களின் எதிர்கால நல்வாழ்வுக்கு பணியாற்றுகின்ற தொண்டுள்ளம் பஞ்சாயத்துத் தலைவர்களிடம் மேலோங்கி நிற்பது கண்டு யார்தான் பூரிப்பு அடையாமல் இருக்க முடியும் ?

உழவுத் தொழில் கண்டுள்ள முன்னேற்றம்

[நில மடந்தையின் நிலவு முகம் நம் பாரத நன்னாடு. அம்முகத்தை அழகு செய்து அதன் நெற்றியில் சுடர்விடும் திலகமே நம் தெய்வத் தமிழகம். பாரதத்தின் முன்னேற்றத்தில் தமிழகத் திற்கு ஒரு தனி இடம் உண்டு. ஐந்தாண்டுத் திட்டங்களில் தீவிரப் பங்கேற்று, பல துறைகளிலும் அது முன்னோடியாக விளங்குகிறது. கடந்த பத்து ஆண்டுகளில் விவசாயத் துறையில் தமிழ்நாடு அடைந்த முன்னேற்றத்தைக் கீழே காணலாம். தமிழ் நாடு அரசாங்கச் செய்தித் துறை வெளி யிட்டுள்ள 'பத்தாண்டுகளில்' என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்ட விவரங்கள் இவை—

—ஆசிரியர்]

உற்பத்திப் பெருக்கத்திற்குப் பாசன வசதி இன்றி யமையாதது. 1950-க்குப் பின் சுமார் 37 கோடி ரூபாய் செலவில் 14 பெரும் பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப் பட்டன. இதனால் சுமார் 4·70 லட்சம் ஏக்கர் நிலங் களுக்குப் பாசன வசதி கிடைத்துள்ளது.

முதல் திட்டக் காலத்தில் 9 பெரிய பாசனத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. அவைகளில் கீழ்பவானி அணைத் திட்டமும் காவேரி வடிகால் திட்டமும் முதல் திட்டக் காலத்திலேயே நிறைவேற்றப்பட்டன. பத்துக் கோடி ரூபாய் செலவில் அமைந்த கீழ்பவானித் திட்டம் 2·06 லட்சம் ஏக்கர் நிலங்களுக்குப் புதிதாகப் பாசன வசதி அளித்துள்ளது. ரூ. 193 லட்சம் செலவில் அமைந்த மேட்டூர்க் கால்வாய்த் திட்டத்தினால் 45,000 ஏக்கர், நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

பூம் புனல்

மேலும் மணிமுத்தாறு, அமராவதி, வைகை, சாத்தனூர், கிருஷ்ணகிரி, வீடூர் ஆகிய நீர்த் தேக்கத் திட்டங்கள் இரண்டாவது திட்டக் காலத்தில் நிறை வேற்றப்பட்டன. இவைகளின் மொத்தச் செலவுத் தொகை ரூ. 1,715 லட்சமாகும். புதிய கட்டளை உயர் மட்டக் கால்வாய், புள்ளம்பாடிக் கால்வாய் ஆகிய இரு திட்டங்களும் ரூ. 431 லட்சம் செலவில் முடிக்கப்பட்டன. கன்னியா குமரி மாவட்டம் கொடையாறு அணைக்கட்டி லிருந்து பிரியும் இடதுகரைக் கால்வாய், தோவாளைக் கால்வாய், ஆனந்தனாறு, புத்தனாறு கால்வாய் ஆகிய நான்கு கால்வாய்களும் புதுப்பிக்கப்பட்டன. நெய்யாறு திட்டம் இரண்டாம் நிலையின் வேலைகள் விரைவில் முடி வடைந்துவிடும்.

இரண்டாவது திட்டக்கால முடிவில் மேற்கொள்ளப்பட்ட பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்தால் கோவை மாவட்டத்தில் 2·4 லட்சம் ஏக்கருக்குப் பாசன வசதி ஏற் படும். ஏறக்குறைய 1,80,000 கிலோவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யவும் முடியும். இத் திட்டத்திற்கு ஆகும் செலவு ரூ. 30 கோடி என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் தமிழ்நாடு, கேரளம் ஆகிய இரு மாநிலங் களுக்கும் பொதுவானவை. எனவே நீரைப் பகிர்ந்து கொள்வது பற்றி இரு மாநிலங்களுக்கும் இடையே ஓர் உடன்பாடு ஏற்பட்டுள்ளது. இத் திட்டம் மூன்றாவது திட்டக்கால இறுதிக்குள் நிறைவேற்றப்படும்.

தமிழ்நாட்டில் உள்ள பேராறுகள் அனைத்தையும் பெரும் பாசனத்திற்காக நாம் பயன்படுத்திவிட்டோம். அதனால் உற்பத்தி பெருகியுள்ளது. மேலும் உற்பத்தி யைப் பெருக்க வேண்டுவது அவசியமாகையால் சிறு பாசன நீர் நிலைகள் விஸ்தரிக்கப்படுகின்றன. சென்ற பத்தாண்டுகளில் ரூ. 4·4 கோடி செலவில் 2,770 வேலை கள் நிறைவேற்றப்பட்டன. மூன்றாவது திட்டக் காலத்தில் ரூ. 8 கோடி செலவில் 8,000 வேலைகள் நிறைவேற்றப் படும். நமது மாநிலத்தில் உள்ள சுமார் 33,000 ஏரி, குளங்களைச் சீர் செய்வதற்காக ரூ. 8·36 கோடி செலவிடப்பட்டது.

கிணறுகள் வெட்டக் கடனும் மானியமும் அளிக்கப் பட்டன. இம்முறையில் இரண்டாவது திட்டக் காலத்தில் மட்டிலும் ரூ. 90 லட்சம் செலவில் 7,447 கிணறுகள் வெட்டப்பட்டன. மூன்றாவது திட்டக் காலத்திலும் இப் பணிக்காக ரூ. 100 லட்சம் செலவிடப்படும். இவற்றைத் தவிர குழாய்க் கிணறுகள், ஊற்று நீர்க் குழாய்கள், வடிமுனைக் குழாய்கள் ஆகியவைகளை இறக்குவதற்கும், ஆற்று நீர் இறவைப் பாசனத்திற்கும் அரசாங்கம் பல திட்டங்களை அமைத்து நிறைவேற்றியுள்ளது. பாசன வசதிகள் செய்வதிலும், நீரைச் சிக்கனமாகவும் நல்ல முறையிலும் பயன்படுத்துவதிலும் தமிழ்நாடு தலைசிறந்து விளங்குகிறது.

உற்பத்தி உயர்வு

நமது லட்சியம் உற்பத்தியைப் பெருக்குவதுமட்டுமல்ல. நம்முடைய தேவைகளை நாமே பூர்த்தி செய்துகொள் வதும் ஆகும். நாடு விடுதலை அடைந்தவுடன் முதல் காரியமாக உற்பத்தியைப் பெருக்கவும், அதன் மூல மாகக் குடியானவர்களின் நிலையையும் நாட்டின் வருமானத்தையும் உயர்த்தவும் திட்டமிடப்பட்டது.

உற்பத்தி பெருகப் பல வழிகளிலும் முன்னேற்றம் ஏற்படவேண்டும். பாசன வசதி, பொறுக்கு விதைகள், போதுமான அளவிற்கு உரம், திருந்தியச்சாகுபடி முறை கள், பயிர்ப்பாதுகாப்பு நடவடிக்கைகள், உழவு மாடுகள், விதைகள், உரம் முதலியன வாங்கக் கடன் உதவி— இன்னோரன்ன பல வசதிகளும் குடியானவர்களுக்குக் கிடைத்தாக வேண்டும்.

பொறுக்கு விதைகளை அதிக அளவில் உற்பத்தி செய்து, குடியானவர்களுக்குப் போதிய அளவிற்கு உரிய காலத்தில் வழங்குவதற்காக 130 விதைப் பண்ணைகள் அமைக்கப் பட்டுள்ளன. மாநிலத்தில் நெல் பயிராகும் பரப்பு முழுவதிலும், புஞ்செய் தானியங்கள் பயிராகும் பரப்பில் 45 சதவீதத்திலும் பொறுக்கு விதைகள் பயன்படுத்தப்படுகின்றன.

ரசாயன உரங்களை வாங்குவதற்காக அரசாங்கம் குடியானவர்களுக்குக் கடன் கொடுத்து உதவுகின்றது. கடந்த பத்தாண்டுகளில் சுமார் 10 லட்சம் டன் நைட்ரஜன் உரங்கள் வழங்கப்பட்டன. தழை உரத்தைப் பயிரிடும் முறையை ஊக்குவிப்பதற்காகத் தழை உர விதைகள் குறைந்த விலையில் வழங்கப்படுகின்றன. கழிவு உரங்களை உற்பத்தி செய்வதிலும் உபயோகிப்பதிலும் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 65 நகராட்சி மன்றங்களும், 269 பெரிய பஞ்சாயத்துக்களும் இதில் ஈடுபட்டுள்ளன.

பூச்சிகளும், நோய்களும் கணிசமான அளவு பயிர்களை அழிக்கின்றன. இதனால் உற்பத்தி குறைகின்றது. இதனைத் தடுப்பதற்காகப் பூச்சி மருந்துகள் ஏராளமான அளவில் வழங்கப்படுகின்றன. இந்த மருந்துகளைத் தெளிப்பதற்காக சுமார் 8,500 கருவிகள் பாதி விலைக்கு வழங்கப்பட்டன. இரண்டாவது திட்டக் காலத்தில் சுமார் 12 லட்சம் ஏக்கர்களில் பயிர்ப் பாதுகாப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

பழையன கழிதலும் புதியன புகுதலும்

புதிய வேளாண்மைக் கருவிகளையும், புதுப் புது முறைகளையும் கையாள்வதால் உற்பத்திப் பெருகுகிறது. உழவர்கள் இந்த முறைகளை ஆர்வத்துடன் பின்பற்றுகின்றனர். சென்ற 10 ஆண்டுகளில் வாடகை விற்பனை முறையில் 2,100 ஆயில் எஞ்சின்களும், 2,248 பம்பு செட்டுகளும், 183 டிராக்டர்களும் வழங்கப்பட்டுள்ளன. இவற்றைத் தவிர குடியானவர்களுக்கு வாடகைக்குக் கொடுப்பதற்காக வேளாண்மைத் துறை 138 டிராக்டர்களை வைத்துள்ளது.

ஜப்பானியச் சாகுபடி முறையினாலும் உற்பத்திப் பெருகுகின்றது. இச்சாகுபடி முறை 1953-ம் ஆண்டிலிருந்து நமது மாநிலத்தில் கையாளப்பட்டு வருகிறது. நல்ல தரமுள்ள விதைகளை விதைத்தல், மிகுதியான அளவிற்கு எருவிடுதல், வரிசை வரிசையாக நடுதல், ஊடு முறையில் சாகுபடி செய்தல் ஆகியவை ஜப்பானிய முறைச் சாகுபடிகளின் சிறந்த அம்சங்களாகும். நமது மாநிலத்தில் இதற்கு நல்ல ஆதரவு கிடைத்துள்ளது. இரண்டாவது திட்டக் கால இறுதி வரையில் 21 லட்சம் ஏக்கர் நிலங்களில் இம்முறை கையாளப்பட்டிருக்கிறது.

புதிய திட்டம்

உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கான புதிய திட்டம் தீவிரச் சாகுபடித் திட்டம். இது தஞ்சை மாவட்டத்தில் 23 வட்டாரங்களில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இதன்படி இங்குள்ள 317 கிராமங்களில் 2·25 லட்சம் ஏக்கர்களில் நெல் தீவிர முறையில் பயிரிடப்பட்டது. தற்பொழுது வாழை, கரும்பு, தென்னை, வேர்க்கடலை, காய்கறிகள், பருத்தி, புகையிலை முதலிய பயிர்களும் தீவிரமாகப் பயிரிடப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கு அமெரிக்க நாட்டு "போர்டு நிறுவனம்" ஓரளவு நிதி உதவி அளித்து வருகிறது. இத் திட்டம் ஐந்து ஆண்டுகள் செயல்படும். இதற்காக ரூ. 150 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அரசாங்கம் பல துறைகளிலும் முயன்று பாடுபட்டதால் ஏற்பட்ட பயன் என்ன? முதல் திட்டக் காலத் தொடக்கத்தில் மாநிலத்தில் உற்பத்தியான உணவு 38 லட்சம் டன்கள். இரண்டாவது திட்டக் கால இறுதியில் 53 லட்சம் டன்கள் உணவு உற்பத்தியாகியுள்ளதென்று மதிப்பிடப்படுகிறது. பத்தாண்டுகளில் 15 லட்சம் டன்கள் உற்பத்தி பெருகியுள்ளது. மூன்றுவது திட்டக் காலத்தில் மேலும் அதிகமான உணவு உற்பத்தி செய்ய இலக்கிடப்பட்டுள்ளது. இதனால் பருவ மழை தவறி விட்டாலும் உணவு விஷயத்தில் நாம் தன்னிறைவுடன் வாழ முடியும்.

அறுவைச் சிகிச்சையின் மூலம் கருத்தடை

[குடும்பக் கட்டுப்பாட்டில் அறுவை சிகிச்சையின் மூலம் கருத்தடை செய்து கொள்வது அபாய மில்லாதது ; சுலபமானது; பல்லாயிரக் கணக்கான மக்கள் இம்முறையினைக்கையாண்டு நல்ல பலனைப் பெற்றுள்ளனர். அறுவை சிகிச்சை செய்து கொண்டு அதனால் பலன் பெற்றவர்களே கூறும் அநுபவ உண்மைகளைக் கீழே காணலாம்—ஆசிரியர்]

அறுவைச் சிகிச்சையின் மூலம் கருத்தடை செய்து கொள்வதைப்பற்றி சந்தேகமும், பயமும் ஏற்படுவது இயற்கையே. இந்த பயத்தையும், சந்தேகத்தையும் போக்க வேண்டுமானால் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்துகொண்டதற்குரிய காரணத்தையும், அவர்களுடைய அனுபவத்தையும், அபிப்பிராயங்களையும் தெரிந்துகொண்டால் போதும்.

மகாராஷ்டிராவில் 1960-ல், 25,000 பேர் அறுவைச் சிகிச்சை செய்துகொண்டனர். இவ்வருடம் 40,000 பேர் அறுவைச் சிகிச்சை செய்துகொண்டிருப்பார்கள். குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை யூனிட்டுகள் வாகனங்களில் சென்று கிராமப் பகுதிகளில் ஆண்களுக்கு இச் சிகிச்சை அளித்து வருகின்றன. இவர்களில் மாதமொன்றுக்கு 150 ரூபாய்க்குக் குறைவாகச் சம்பளம் வாங்குகிறவர்களுக்கு 20 ரூபாய் உதவியளிக்கப்படுகிறது.

அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களில் சிலர், ஆண்களும், பெண்களும் தெரிவித்துள்ள கருத்துக்கள் கவனிக்கப்படவேண்டியவை. அவை வருமாறு :

அனுபவமும் அபிப்பிராயமும்

குஞ்சால் : நான் ராஜ்ய போக்குவரத்து ஸ்தாபனத்தில் வேலை பார்க்கிறேன். என் மனைவி குழந்தை பெறும் போதெல்லாம் எனக்கு நூறு ரூபாய் கடன் சுமை ஏற்படும். நான் நாணயமாக நடக்க விரும்புவதால் வாங்கிய கடனை அடைத்து விட்டுத்தான் மறு வேலை பார்ப்பேன். அக்கடனை, மாதத் தவணையாகக் கொடுத்து கஷ்டப்பட்டு தீர்த்துவரும்போது என் மனைவி மறுபடியும் கருத்தரிப்பாள். இப்படிப் பதினாறு ஆண்டுகள் நான் பட்ட கஷ்டம் சொல்லி முடியாது. மொத்தம் ஆறு குழந்தைகள் பிறந்ததில் இரண்டு குழந்தைகள் இறந்து விட்டன. நான் படும் பாட்டைக் கண்ட என்னுடைய முதலாளி, அறுவைச் சிகிச்சையின் மூலம் கருத்தடை செய்துகொள் என்று சொன்னார். அவரும் மூன்று குழந்தைகள் பெற்ற பிறகு அப்படிச் செய்துகொண்டாராம். அவர் எல்லாவற்றையும் விவரமாகச் சொன்னார். இதைத் தவிர, வேறு வழியில்லை என்பதையும் நான் உணர்ந்தேன். என்னுடைய சம்பளமும் 90 ரூபாயை எட்டிவிட்டது. அதற்குமேல் உயராது.

ஆகவே, அறுவைச் சிகிச்சை செய்துகொள்ளலாமென்று நினைத்து, நண்பர்களிடமும் சொன்னேன். அவர்கள் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து, உனக்கு என்ன மூளைக் கோளாறு ? வாழ்க்கையையே கெடுத்துக்கொள்ளப் பார்கிறாயே, ஆண்மையை இழந்துவிடப் போகிறாயா ?" என்றெல்லாம் பேசத் தொடங்கி விட்டார்கள். "அப்படியெல்லாம் இல்லை, என்னுடைய முதலாளியே செய்துகொண்டிருக்கிறார்" என்று சொல்லிப் பார்த்தேன். அவர்கள் சம்மதிக்கவில்லை. நேராக என்னுடைய தாயாரிடமும் சென்று சொல்லிவிட்டார்கள். தாயார் என்னுடன் சண்டைப் போடத் தொடங்கிவிட்டார்கள். விஷயத்தை விளக்கி தாயாரைச் சமாதானப் படுத்துவதே பெரிய வேலையாகப் போயிற்று. என் மனைவியைப் பொறுத்த வரையில் அவளுக்குச் சம்மதந்தான். ஏனென்றால் பிள்ளையைப் பெறவேண்டியது அவள்தானே !

அறுவைச் சிகிச்சை சுமார் 15 நிமிடங்கள்தான் நடைபெற்றது. எறும்பு கடிப்பதுபோல லேசாக ஒரு வலி அவ்வளவுதான். இரண்டு மணி நேரத்துக்குப் பிறகு, என் வீட்டுக்கு இரண்டு மைல் தூரம் நடந்தே சென்றேன். அங்கும் படுக்கையில் இல்லை. வீட்டுக்குள் அங்குமிங்கும் நடமாடிக்கொண்டுதான் இருந்தேன். இரண்டு வாரங்களுக்குப் பிறகு தையலை எடுத்தார்கள். மூன்று மாதங்களுக்கு என்னுடைய மனைவியை நெருங்கக் கூடாதென்றார்கள். பிறகு என்னைப் பரிசோதித்துப் பார்த்துவிட்டு, இனி மனைவியுடன் வாழலாம் என்றார்கள். இப்போது மிகவும் சந்தோஷமாக இருக்கிறோம். ஆண் தன்மையை இழக்கவில்லை. பிள்ளை பிறந்துவிடுமோ என்ற கவலையும் இல்லை. என் தாயாருக்கும் சந்தோஷம்தான்.

பட்டீல் : நான் கோல்ஹாப்பூரைச் சேர்ந்த சிறிய விவசாயி. 20 வயதில் கலியாணம் ஆயிற்று, 30 வயதில் 6 குழந்தைகள். 50 வயதானால் என்ன ஆகுமோ என்ற பயம் என்னை வாட்டியது. ஒரு நாள் ஜில்லா சுகாதார அதிகாரி எங்கள் கிராமத்துக்கு வந்து பேசிக்கொண்டிருக்கும்போது அறுவைச் சிகிச்சையைப்பற்றிச் சொன்னார். நானும் செய்துகொள்ளச் சம்மதித்தேன். என்னைப் பார்த்து வேறு 20 பேரும் அதற்கு ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டனர்.

எங்கள் கிராமத்திலிருந்து $1\frac{1}{2}$ மைல் தூரத்தில் அந்த முகாம் இருந்தது. குறித்த தினத்தில் நாங்கள் 21 பேரும் அங்கு சென்றோம். சுகாதார நிலையம் நெருங்க நெருங்க, எங்கள் நெஞ்சு பட பட வென்று அடிக்கத் தொடங்கியது. நாங்கள் அங்கு சென்றோம். முதலில் யார் அறுவைச் சிகிச்சை செய்துகொள்வது என்பதைப்பற்றிச் சர்ச்சை நடைபெற்றது. நான் தானே முதலில் சம்மதித்தேன். ஆகவே நானே சென்று மேஜை மீது படுத்துக்கொண்டேன். டாக்டர் என்னுடன் பேசிக்கொண்டே இருந்தார். ஊசி கொண்டு குத்துவது

போல லேசாக வலித்தது. அறுவை முடிய எவ்வளவு நேரமாகும் என்று டாக்டரைக் கேட்டேன். "எவ்வளவு நேரமா ? எல்லாம் முடிந்துவிட்டது. மேஜையை விட்டு இறங்கச் சொல்லுங்கள்" என்று அவர் பதிலளித்தார்.

கிருஷ்ணுபாய் : நாங்கள் கொங்கணத்தைச் சேர்ந்தவர்கள். என் கணவருடன் பிறந்தவர்கள் நால்வர். சிறிய நிலத்தை நம்பி எல்லாரும் வாழ முடியாததால் மூத்த சகோதரர் பம்பாய்க்குச் சென்ருர். நாங்கள் பூனுவுக்கு வந்தோம்.

என் கணவருக்கு எங்கேயாவது தாற்காலிகமாக வேலை கிடைக்கும். நான் பல வீடுகளில் சென்று பாத்திரம் தேய்த்தும், சில்லறை வேலை செய்தும், எங்கள் வீட்டு அடுப்பில் நெருப்பு அணையாமல் பார்த்து வந்தேன். இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை எனக்கு குழந்தை பிறந்து வந்தது. ஆருவது குழந்தையை உண்டாகியிருக்கும்போது பூனு ஆஸ்பத்திரியில் குழந்தைப்பேறு பார்த்து அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளச் சொன்ஞர்கள். என்னுடைய உடலில், வேண்டிய ரத்தமில்லாததால் மருந்து குத்தி வைக்கப்பட்டது.

குழந்தை பிறந்ததும் பக்கத்துக் கட்டிலில் படுத்திருந்தவள், எனக்கு நடக்கப்போகிற கருத்தடை அறுவைச் சிகிச்சையைப் பற்றி பயமுறுத்திஞள். "அப்படியெல்லாம் செய்யக்கூடாது. நாமெல்லாம் வேலை செய்து பிழைக்கிறவர்கள். அறுவைச் சிகிச்சை செய்து பலமிழந்தால் குழந்தைகள் நிர்கதியாகிவிடும்." என்றெல்லாம் பயமுறுத்திஞள். "அப்படியொன்றும் நேராது, டாக்டர்கள், என்ன நமது விரோதிகளா ? பிள்ளைகளை வளர்க்க முடியாவிட்டால், பெறவும் கூடாது" என்று நான் கூறினேன்.

குழந்தை பெற்ற மூன்ருவது தினத்தில் கருத்தடை அறுவைச் சிகிச்சை நடைபெற்றது. அப்போது வலியே இல்லை. இரண்டு நாட்களுக்குப் பிறகு லேசாக வலியெடுத்தது. பத்தாவது நாள் தையலை எடுத்தார்கள் பதிஞேராவது நாள் ஏணிப்படிகளில், இரண்டு படிகள் தாண்டிக்கூட ஏற முடிந்தது. நேராக வீட்டுக்கு வந்தேன். சமையல் செய்தேன். குழந்தைகளுக்குப் பணிவிடை செய்தேன். எந்தவிதத் தொந்தரவும் இல்லை. இரண்டு மாதங்கள் பழையபடி நான்கு வீடுகளுக்கும் சென்று வேலை செய்யத் தொடங்கிவிட்டேன்.

என்னுடைய இரண்டு பெண்களுக்கும் கலியாணமாகிவிட்டது. அவர்களுக்கு நானே பிள்ளைப்பேறு பார்த்தேன். நல்லவேளை, நான் ஆபரேஷன் செய்துகொண்டிருக்கிறேன். இல்லாவிட்டால் எத்தனை குழந்தைகளோ. வெளியில் தலைகாட்ட முடியுமா ? மருமகளுக்கு முன்னிலையில் பெரிய வயிற்றைவைத்துக்கொண்டு நடக்க முடியுமா? என்னுடைய மூத்த மகளின் மாமியார் அப்படித்தான். வெட்கமென்பதே இல்லை. சொல்வதைக் கேட்டால் தானே !

அஷ்ராபி : எனக்கு நான்கு குழந்தைகள் இருந்தன ; வயிற்றில் ஐந்தாவது குழந்தை. என் கணவர் கோணிப் பைகளைத் தைத்துக் கொடுத்து சம்பாதித்து வந்தார். ஒரு பை தைத்துக் கொடுத்தால் நான்கு அணு கிடைக்கும். சில சமயங்களில் அவருக்கு வேலையிருக்காது ; என்னுடைய நான்கு குழந்தைகளைப் பார்த்தால் எவரும் எனக்கும் வேலை தரமாட்டார்கள். சில நாட்களில் பட்டினி கிடந்தோம். ஒரு நாள் என் வீட்டுக்கு வந்த இரண்டு பெண்கள் என் நிலைமையைப் பார்த்தார்கள். உனக்கு இன்னும் எத்தனை குழந்தைகள் வேண்டுமென்று கேட்டார்கள். வயிற்றிலிருக்கும் குழந்தை பிறக்காமல் இருந்தால்கூட நல்லது தான் என்று நான் சொன்னேன். என்னுடைய கணவரையும் அழைத்துக்கொண்டு பூனு கே. இ. எம். ஆஸ்பத்திரிக்குப் போகச் சொன்ஞர்கள். அங்கு அவர்கள் எல்லா விஷயங்களையும் விளக்கியதும் நான் அறுவைச் சிகிச்சை செய்துகொள்ளச் சம்மதித்து என் பெயரைப் பதிவு செய்துகொண்டேன்.

முதலில் என் கணவர் அதற்குச் சம்மதிக்கவில்லை. பிள்ளைப்பேறில் கஷ்டப்படுவது நான்தானே. எனக்கு இனிமேல் குழந்தைகள் வேண்டாம் ; ஒவ்வொரு குழந்தைக்குப் பிறகும் நான் க்ஷணித்துக்கொண்டே வருகிறேன். கடைசியில் அவரும் ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டார்.

குழந்தை உண்டாகியிருக்கும்போது, எனது உடல் நிலையை மேம்படுத்ததுவதற்காகப் பல ஊசி போட்டுக்கொண்டேன் ; இல்லாவிட்டால் அறுவை செய்து கொள்ளக் கூடாதென்று பெண் டாக்டர் சொன்ஞர். என்னுடைய சொந்தக்காரர்கள் என்னைப் பயமுறுத்தத் தொடங்கிஞர்கள். குழந்தை பிறந்த ஐந்தாவது தினத்தில் அறுவைச் சிகிச்சை செய்தார்கள். முதுகில் ஊசி குத்தி வைத்ததும் வலியே தெரிய வில்லை. அரை மணி நேரத்தில் ஆப்பரேஷன் முடிந்துவிட்டது. ஒரு நாள் சிறிது வலி இருந்தது. பத்தாவது நாள் தையலைப் பிரித்தார்கள். ஆஸ்பத்திரியை விட்டு, வெளிவருவதற்குமுன், இவ்விஷயத்தை எங்கள் கிராமத்தாரிடமும் சொல்லிவிடக் கூடாதென்று அவர்களைக் கேட்டுக்கொண்டேன் ; அவர்கள் என்னைக் கடிந்து கொண்டார்கள். நீங்கள் அபபடி என்ன பாவம் செய்து விட்டீர்கள் ; இன்னும் சொன்ஞல நீங்கள் இந்த நல்ல செய்தியை எங்கும் பரப்ப வேண்டும் என்று பிரசங்கமே செய்யத் தொடங்கிவிட்டார்கள். அவர்கள் சொல்லுவது சரிதான் ; நானும் எல்லாரிடமும் சொல்லி அவர்களையும் அறுவைச் சிகிசசைககுச் சம்மதிகக வைத்தேன். என் கணவரும் இதைப்பற்றி எல்லாரிடமும் விளக்கி வருகிருர்.

நான் இப்போது ஆஸ்பத்திரியில் "ஆயா"வாக வேலை பார்த்து வருகிறேன் ; கடின வேலைகளையும் செய்யவேண்டியிருக்கிறது. பெண் நோயாளிகளை ஒரு கட்டிலிலிருந்து தூக்கியெடுத்து இன்னொரு கட்டிலில் படுக்கவைக்கவேண்டியிருக்கிறது ; இவ்வேலை எனக்குச் சிரமமாகத் தெரியவில்லை. எனது உடலும் நன்ருகத் தேறி வருகிறது ; எனக்கு முதலில் இந்த யோசனையைத் தெரிவிததவர்களை நன்றியுணர்வுடன் நினைத்துவருகிறேன்.

ஆசிரியருக்குக் கடிதங்கள்

['பஞ்சாயத்து ராஜ்' (Panchayat Raj) மார்ச் இதழில் சில கடிதங்கள் வெளியாகியுள்ளன. அக்கடிதங்களிலிருந்து "கிராம நலம்" வாசகர்களுக்கு பயன் அளிக்கக்கூடிய ருசிகரமான தகவல்களை மட்டும் எடுத்துக் கீழே அளித்துள்ளோம்.—ஆசிரியர்]

நான் மாறிவிட்டேன்

அன்புள்ள ஐயா,

நான் ஒரு கிராம சேவக். இந்து ஆண்டுகளாக இந்தப் பணியில் சேவை புரிந்து வருகிறேன். பொதுவாகவே என்னைப் பற்றி, தொழிலில் உயர்வு தாழ்வு பார்க்கிற ஒரு வித மனப்பான்மையுடன்தான் இது காறும் இருந்து வந்தேன். ஆனால் ஒரு சம்பவம் என்னை அப்படியே மாற்றியமைத்துவிட்டது. நான் பெரியவன். வயலிலே உழைக்கின்ற உழவன் தாழ்ந்தவன் என்று நான் கொண்டிருந்த எண்ணம் தரைமட்டமாகியது.

ஒரு நாள் என் வேலை முடிந்து தலைமை அலுவலகத்திற்கு திரும்பிக்கொண்டிருந்தேன். பழக்கமான குரல் ஒன்று என்னைக் கூப்பிட்டதுபோல் இருந்தது. திரும்பிப் பார்த்தேன். என் பழைய நண்பன் கணேசன்தான் என்னைக் கூப்பிட்டது. எனக்குத் தூக்கிவாரிப்போட்டது. கணேசன் பள்ளிக்கூடத்தில் பத்தாவது வரையில் என்னோடு ஒன்றாகப் படித்தவன். அப்புறம் அவனைப் பார்க்கவில்லை. பல வருடங்களுக்கு பிறகு, பழைய நண்பனைத் திடீரென்று பார்த்தால் ஆச்சரியமாக இருக்காதா? வேட்டியைத் தூக்கிக் கட்டிக்கொண்டிருந்தான். மேலே ஒரு துணியும் கிடையாது. கையில் மண்வெட்டி, அசல் விவசாயி போலவே தோற்றமளித்தான். என்னைப் பார்த்ததும் ஒரு புன்முறுவலை உதிர்த்தான். அவனுக்கு சற்று தள்ளி அவன் மனைவியும் வயலில் அவனுடனே உழைத்துக்கொண்டிருந்தாள். எனக்கு அவர்களின் தோற்றம் என்னவோ மாதிரி இருந்தது. படித்த பிள்ளை கையில் மண்வெட்டி பிடித்து வயலில் வேலை செய்வதென்றால் ?. . . . சற்று மனதை திடப்படுத்திக்கொண்டு "நண்ப . . . என் சர்க்கார் உத்தியோகம் ஒன்றுக்குப் போகாமல் இந்த உழவுத் தொழிலுக்கு வந்து விட்டாய்? என்று அவனைப் பார்த்து கேட்டேன். அவன் சொன்ன பதில் என்னத் திடுக்கிடவைத்தது. "உழவுத் தொழில் நேர்மையான தொழில். வியர்வை உதிர்த்து பாடுபடுகிறேன். யாரையும் ஏமாற்றவில்லை. என் உழைப்பை ஈடாக வைத்து பாடுபடுகிறேன். இதில் என்ன வெட்கம்?" அதுமட்டுமல்ல, என் மனதிற்கு நிம்மதியையும் அமைதியையும் இதன் மூலம் என்னால் பெறமுடிகிறது. என்றான் அவன். என் மதியீனத்தை நான் நொந்து கொள்வதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும். என்னை இது நாள் வரையில் பிடித்தாட்டிய அகந்தைப் பேய் என்னை விட்டு அந்தக் கனமே விலகி ஓடியது. என்னுடைய பணியின் மகத்துவத்தை அன்றுதான் உணர்ந்தேன். பிறருக்கு சேவை செய்வதில்தான் உண்மையான இன்பம் உள்ளது என்பதை நான் கண்டு கொண்டேன். நான் இப்பொழுது ஒரு உண்மையான கிராம சேவக்.

அன்புள்ள
சி. எம். மேடப்பா,
கிராமசேவக்.

பிரச்சினைக்கு முடிவு காண......

அன்புள்ள ஐயா,

பஞ்சாப் மாநிலத்தில் ரோஹ்டக் ஜில்லாவில் உள்ளது கார்வார் பஞ்சாயத்து. இந்தப் பஞ்சாயத்தில் சரிவர வேலை நடப்பதில்லை. பஞ்சாயத்து உறுப்பினர்களிடையே ஒத்துழைப்பு மனப்பான்மையே இல்லை. பஞ்சாயத்தில் பெண் உறுப்பினர் சேர்க்கப்பட்டு ஒன்றரை வருடம் ஆகிறது. ஆனால் பஞ்சாயத்தில் உள்ளவர்கள் பெண் உறுப்பினர் பஞ்சாயத்து கூட்டங்களில் கலந்துகொள்வதை மிகவும் கடுமையாக எதிர்க்கின்றனர். வெளிப்படையாக கலவரம் ஏற்படும் என்று அஞ்சி பஞ்சாயத்துக் கூட்டமே கூட்டப் பெறுவதில்லை. இதனால் கிராமத்தில் அபிவிருத்தி வேலைகள் நடைபெறுவதே ஸ்தம்பித்துப்போய் கிடக்கிறது.....

அன்புள்ள
சந்திரஹாஸ சர்மா

[**ஆசிரியர் குறிப்பு.**—அரசாங்கம் இதற்கு நிரந்தரமான பரிகாரத்தை அளிக்க முடியாது. கிராமத்தில் உள்ளவர்கள் கால நிலையைப் புரிந்து கொள்ள வேண்டும். அதற்குப் பாடுபட வேண்டும். மாதர்களுக்குப் போதிய ஸ்தானம் அளிக்கக் கூடாது என்றிருக்கும் நிலையைப் போக்க கிராம சபை பலமாக வேலை செய்யவேண்டும்—**ஆசிரியர், பஞ்சாயத்து ராஜ்.**]

உயிர்கொடுக்கும் மண்

அன்புள்ள ஐயா,

நம் நாடு மண் வளம் வாய்ந்தது. எல்லா ஜீவ ராசிகளையும் இந்த மண் காப்பாற்றுகிறது. எல்லோருக்கும்—ஜீவராசிகளுக்கு உணவு அளிக்கிறது. இதனால் தான் "மண் மாதா" என்று கைகூப்பி வணங்குகிறோம். நல்ல வளமான மண்ணில் உற்பத்தியாகும் உணவினை உட்கொள்ளுதலே நம்முடைய ஆரோக்கிய வாழ்வுக்கு அடிப்படையான ஒன்றாகும். வளமான மண்ணிலிருந்து தான் வளமான பயிர்களை எதிர்ப்பார்க்கலாம். அதே சமயத்தில் அந்த மண்ணை வளமாக்குவதும் நம் கையில் தான் இருக்கிறது. இலைகள், செடிகொடிகள், எலும்புகள், மாட்டுச் சாணம் போன்றவற்றை மண்ணிலேயே போட்டு மூடுவதன் மூலம், அவை மக்கி மண்ணுக்கு நல்ல எருவாக அமையும். நமக்கு உணவு அளிக்கின்ற மண்ணுக்கு நாமும் நம்முடைய கைம்மாற்றினை செய்வோமாக!

அன்புள்ள,
வி. டி. மல்காவகர்

"கலந்து உரையாடுவோம்"

அன்புள்ள நண்பரே,

"பஞ்சாயத்து ராஜ்" பத்திரிகையின் ஆசிரியர் குழு எடுத்துள்ள ஒரு முடிவினை உங்கள் முன் சமர்ப்பிக்க ஆசைப்படுகிறேன். நாட்டில் அதிவேகமாகப் பரவிவரும் பஞ்சாயத்து ஆட்சி இயக்கத்தை முக்கியமான பலம் பொருந்திய இயக்கமாக ஆக்குவிக்க வேண்டும் என்ற முடிவு தான் அது. இதை நாம் எப்படிச் செய்ய முடியும்? முதன்முதலாக, மத்திய அரசாங்க நிலையில் என்ன நடக்கிறது என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள விரும்புவீர்கள் அல்லவா? இங்கே டெல்லியில் இது சம்பந்தமாக எடுக்கப்பட்ட முக்கிய நடவடிக்கைகளை நான் உங்களுக்குச் சொல்கிறேன். ஆனால் அது மட்டும் போதாது. வெளியே நாட்டில் நடைபெறும் வேலைகளும் அதே அளவு முக்கியமானவையே. அந்த வேலைகளை இந்தப் பத்திரிகையில் போதிய அளவில் பிரசுரித்துக் காட்ட வேண்டும். அதற்காக உங்களுடைய ஒத்துழைப்பை நான் பெரிதும் கோருகிறேன். நீங்கள் எங்களுடன் ஒத்துழைத்து போதிய விவரங்களைச் சேகரித்து அனுப்பினாலொழிய, நாங்கள் எங்கள் பணியைச் சரிவர செய்யமுடியாது. நீங்கள் எப்படி எங்களுக்கு உதவ முடியும் என்று நினைக்கிறீர்களா? கீழ்க்கண்ட முறையில் நீங்கள் பணிபுரியலாம்.

பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள், முற்போக்கு கருத்துடைய விவசாயிகள், கிராமக் கைத்தொழில் விற்பன்னர்கள், கிராம சேவக்குகள், மற்ற மற்ற அதிகாரிகள், அவரவர்கள் சம்பந்தப்பட்ட துறைகளில் மகத்தான சேவை புரிந்துள்ளவர் பலர் உள்ளனர். அவர்கள்தான் "பஞ்சாயத்து ராஜ்" என்ற இந்த இயக்கத்தின் மூலபுருஷர்களாவார்கள். ஆகவே இந்த மண்ணுக்குரியவர்களாக அவர்களுடைய சேவைகளைப் பற்றி இந்தப் பத்திரிகையில் சிறப்பான இடம் அளிக்க வேண்டியது மிகவும் பொருத்தமே. அவர்களுடைய சாதனைகளை, படங்களுடன் நீங்கள் அனுப்பி வைத்தால் பெருமகிழ்ச்சியுடன் பெற்றுக்கொள்வோம். அதேபோல், இந்தத் துறையில் சிறந்த பணியாற்றியுள்ள பஞ்சாயத்துக்கள், கிராமங்கள் பற்றிய முழு விவரங்களையும், அவைகள் புரிந்துள்ள சாதனைகள் பற்றியும் அனுப்பிவைத்தால் மிகவும் நலமாக இருக்கும்.

இதுநாள்வரையில் செய்து வந்தது போலவே, உங்களுடைய அனுபவங்கள், உங்களுடைய பிரச்சினைகள், பிரச்சினைகளுக்கு நீங்கள் அளிக்கின்ற முடிவுகள் பற்றிய விவரங்கள் அடங்கிய உங்கள் கடிதங்களைத் தொடர்ந்து தவறாமல் அனுப்பிவைக்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். எல்லோரும் தங்களுடைய அனுபவங்களைக் கலந்து பரிமாறிக்கொள்வதன் மூலம் தான், நாம் முன்னேற்றப்பாதையில் கணிசமான அளவுக்கு முன்னேற முடியும்.

எந்த மொழியில் எடுத்துச் சொல்வது என்பது பற்றிய எந்தவிதமான சிரமமும் ஏற்படத் தேவையில்லை. பல ராஜ்யங்களிலும் "பஞ்சாயத்து ராஜி"ல் வரும் விஷயங்கள் அந்தந்த ராஜ்ய மொழிகளில் வெளியிட ஏற்பாடுகள் செய்யப்பட்ட அப்படியே ராஜ்ய மொழிகளில் "பஞ்சாயத்து ராஜ்"ல் உள்ள முக்கியமான விஷயங்கள் வெளியிடப் படுகிறது. ராஜ்ய மொழிகளில் கடிதங்களை எழுதி அனுப்ப விரும்புவோர் மாநில அளவில் வெளியாகும் "பஞ்சாயத்து ராஜ்" பத்திரிகை ஆசிரியர்களுக்கு அவற்றை அனுப்பி வைக்கலாம். அந்தந்த மொழிப் பத்திரிகைகளில் வெளியாகும் அப்படிப்பட்ட கடிதங்களை நாங்கள் எடுத்துப் பயன் படுத்திக்கொள்வோம். இது உங்களுக்குச் சற்று அதிகப்படியான வேலைதான் என்பதை நான் நன்ருக உணருகிறேன். இருந்தாலும் பஞ்சாயத்து ஆட்சி முறையை முழுவெற்றியுடன் நடத்த வேண்டும் என்று நாம் கொண்டுள்ள லட்சியத்திற்காக, இதை நீங்கள் பொருட்படுத்தமாட்டீர்கள் என நம்புகிறேன். பத்திரிகையில் வெளியிடப்படும் கட்டுரைகளுக்கும், படங்களுக்கும் வழக்கமான முறையில் சன்மானம் அளிக்கப் பெறுகிறது என்பதையும் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். என்னுடைய கோரிக்கையை வாசகர்களாகிய நீங்கள் பெருத்த அளவில் நிறைவேற்றி வைப்பீர்கள் என்ற நம்பிக்கையுடன் இக் கடிதத்தை முடிக்கிறேன்.

உங்கள் உண்மையுள்ள
ஆசிரியர்,
"பஞ்சாயத்து ராஜ்"

(மத்திய அரசாங்கத்தின், சமுதாய அபிவிருத்தி—கூட்டுறவுத் துறை வெளியிடும் 'பஞ்சாயத்து ராஜ்' (Panchayat Raj) என்ற பத்திரிகை ஆசிரியர், மார்ச் இதழில் எழுதியுள்ள கடிதத்தின் தமிழாக்கம் இது. கடிதத்தில் சொல்லப்பட்டுள்ள கருத்துக்கள் தமிழ் நாட்டு வாசகர்களுக்கும் பொருந்தும். அந்தக்கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளபடி, வாசகர்கள் இந்தத்துறையில் ஒத்துழைப்புத் தந்து, "கிராம நல"த்திற்குத் தங்கள் கருத்தோவியங்களை அனுப்பி வைக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

ஆசிரியர்
'கிராம நலம்')

அம்மூர் பஞ்சாயத்தின் அறிவுப்பணி

[திரு. துரைசாமி நாய்க்கர், தலைவர், வாலாஜா பஞ்சாயத்து யூனியன்]

[ஆரம்பக்கல்வி அபிவிருத்தி பஞ்சாயத்து நிறுவனங்களின் பொறுப்பில் சட்ட பூர்வமாக ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் இத்துறையில் மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன் பணியாற்றி வருகின்றன. 'கல்வி சிறந்த தமிழ் நாடு' என்ற கவிஞரின் வாக்கு இன்று பூர்ணத்துவம் வாய்ந்த உண்மையாக மிளிர்வதைக் காண்கிறோம். அறியாமை இருளைப் போக்குகின்ற திருப்பணியில் அம்மூர் பஞ்சாயத்து மேற்கொண்டு செயலாற்றியுள்ள அற்புத வேலைகளை இக்கட்டுரை விளக்குகிறது—

ஆசிரியர்]

" கேடில் விழுச் செல்வங் கல்வி யொருவர்க்கு
மாடல்ல மற்ற யவை "

என்ற செந்நாப் புலவரின் திரு வாக்கிற்கிணங்க, கிராமங்களில் வாழும் மக்கள் கல்வியறிவின் அவசியத்தை நன்கு புரிந்து கொண்டு, எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் என்பதை நிரூபிக்கவும், ஜாதி மத, வர்க்க பேதமற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்கும் பணியில் இன்றைய ஆரம்பக்கல்வி இயங்கி வருகின்றது.

எனது சொந்த ஊர் வாலாஜா வட்டாரத்தில் அம்மூர் என்ற கிராமம். நான் அக்கிராமப் பஞ்சாயத்துத் தலைவராக கடந்த மூன்று ஆண்டுகளாகப் பணியாற்றி வருகின்றேன். பஞ்சாயத்துக் கிராமத்திற்கு ஆற்ற வேண்டிய பணிகளிலே தலையாயது கல்வி அறிவு வளர்ச்சி. எனவே பஞ்சாயத்து எல்லைக்குள் இருக்கும் எல்லாப் பாடசாலை வயதுடைய பிள்ளைகளைப் பள்ளியில் சேர்த்துக் கல்வியளிக்க வேண்டுமென பலமுறை முயன்றும் எல்லாப் பாடசாலை வயதுடைய பிள்ளைகளையும் பள்ளியில் சேர்க்க இயலவில்லை. எங்கள் வட்டாரத்திற்கு சமுதாய அபிவிருத்தித் திட்டம் பணியாற்ற தொடங்கியபின் ஓரளவு கல்வி வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டுமென முயன்றோம். ஆனால் பலன் எதிர்ப்பார்த்த அளவுக்கு அளிக்கவில்லை.

" சொல்லுதல் யார்க்கு மெளிய அரியவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயல் "

என்பதற்கிணங்க செயலளவில் வரும் போது மிகவும் வருத்தப்பட வேண்டியிருக்கிறது. மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் அன்றாட வருகையை அதிகரிக்கவும் பெற்றோர் சங்கத்திற்கு வரும்படி பெற்றோர்களைச் சந்தித்து ஆசிரியர்கள் பல முறை கூறியும் பெரும்பான்மையான பெற்றோர்கள் கூட்டத்தில் கலந்து கொள்வதில்லை. இதனால் ஆசிரியர்களும் உற்சாகமிழந்து பாடசாலையின் வளர்ச்சியில் அதிகக் கவனம் செலுத்த இயலாமல் இருக்க நேர்ந்தது.

ஆனால் இன்று வயது வந்தவர்களுக்கு ஆரம்பக் கல்வியைப் புகட்ட கிராமப் பஞ்சாயத்துதான் வெற்றிகரமாக நடத்த முடியும் என்பதை நன்குணர்ந்து தற்போது பஞ்சாயத்திடம் ஒப்படைத்ததின் காரணத்தினால், பெருவாரியான வெற்றியைக் கண்டிருக்கிறோம் என்று சொன்னால் அது மிகையாகாது.

பஞ்சாயத்துச் சமூகக் கல்விக் குழு :—ஓர் நாள் எங்கள் கிராமத்திற்கு கல்வி வளர்ச்சி அதிகாரியும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பலர் வருகைத் தந்திருந்தனர். அன்று வருவதற்கு முன் கூட்டி கல்வி வளர்ச்சி அதிகாரி பஞ்சாயத்துச் சமுகக் கல்விக் குழு அமைக்கவேண்டுமென அறிக்கை கொடுத்ததின் காரணத்தினால் எல்லா கிராம பிரமுகர்களும், பஞ்சாயத்து அங்கத்தினர்களும் பாடசாலைக் கட்டடத்தில் ஷே குழு அமைப்பதற்கு கூடினோம். பஞ்சாயத்துச் சமூகக் கல்விக் குழு அமைக்க வேண்டியதின் அவசியத்தைக் கல்வி வளர்ச்சி அதிகாரி நன்கு விளக்கியதன் காரணத்தினால் வந்திருந்தவர்கள் அனைவரும் இத்திட்டத்தை எற்றுக்கொண்டு நடத்த விரும்பினர். ஆனால் நான் அவ்வளவு எதிர்ப்பார்க்கவில்லை. உடனே ஒருவர் எழுந்து குழுவை நிறுவ ஆலோசனைகூறி 18 பேர்கள் அடங்கிய குழு நிறுவப்பட்டது. அதில் பஞ்சாயத்து மெம்பர்களும், மெம்பர்கள் அல்லாதவர்களையும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். உடன் இக்கிராமத்தில் பாடசாலை வயதுடையப் பிள்ளைகளின் குறிப்பு உடன் முடித்துக் கொடுக்க வேண்டுமென தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, கட்டாயக் கல்வித் திட்டத்தைத் திறம்பட நடத்த முனைந்தோம். இக்குழு மே மாதம் 15-ந் தேதி கூடியது. பாடசாலைத் திறந்தவுடன் தலைமை ஆசிரியரிடமிருந்து பாடசாலை வயதுடைய குழந்தைகளின் எண்ணிக்கையைத் தெரிந்து கொண்டு, ஒவ்வொரு வார்டுக்கும் சம்மந்தப்பட்ட அங்கத்தினர்களுக்குப் பிள்ளைகளின் விவரம் தெரிவிக்கப்பட்டது. மேலும் பள்ளியில் வேலை செய்யும் ஆசிரியர்கள் அனைவரும் பன்முறை சந்தித்துப் பிள்ளைகளைச் சேர்ப்பதில் தீவிரமாக ஈடுபட்டோம். ஜூன் மாதம் 23-ந் தேதிக்குள் 114 பிள்ளைகள் சேர்க்கப்பட்டார்கள். பஞ்சாயத்துச் சமூகக் கல்வியின் கூட்டத்தை உடன் கூட்டி செய்த வேலையின் சுறுக்கத்தைத் தெரிவிக்கப்பட்டது. உடனே, சேர்ந்த பிள்ளைகளின் பெற்றோர்களிடம் கையொப்பம் வாங்க முனைந்தோம். இதனால் 43 பிள்ளைகள்

(17-ம் பக்கம் பார்க்க)

உன்னத சேவையின் எடுத்துககாட்டு—உன்னியூர்

(திரு உ. வே. அங்கமுத்து, உன்னியூர், முசிறி வட்டம்)

[தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில் நல்லதொரு மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது. புதிய பஞ்சாயத்துச் சட்டத்தின் நோக்கங்களையும், முக்கிய அம்சங்களையும் பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் புரிந்து கொண்டு செயலாற்றத் தொடங்கியுள்ளன. சேவை மனப்பான்மையுடன் பணியாற்றும் சிறந்த பஞ்சாயத்துக்களில் ஒன்றான உன்னியூர் பஞ்சாயத்தின் பணிகளை விவரிக்கிறது இக்கட்டுரை. — ஆசிரியர்]

வான் பொய்ப்பினும் தான் பொய்யா ஜீவ நதியாம் பொன்னி நதியின் வட கரையில், சோழ வளநாட்டின் இறுதி எல்லையாகவும், சேர நாட்டின் தொடக்கமாகவும்; திருச்சி மாவட்டத்திலே முசிறியிலிருந்து வேலூர் செல்லும் பாட்டையிலே கதலி நிறைந்த காட்டுப்புத்தூருக்கும், கரும்பு நிறைந்த மோகனூருக்கும் மையமாக அமைந்ததுதான் வளர்ச்சிக்கும், எல்லைகளுக்கும். மற்ற அனைத்துக்கும் மையமாக விளங்கும் உன்னியூர் கிராமம்.

சென்னை ராஜ்ய பஞ்சாயத்து யூனியன் காரியதரிசியாக இருந்த திரு. ஆர். விஸ்வநாதன் அவர்கள் எங்கள் ஊர் பஞ்சாயத்தின் தலைவராவார். இது இவ்வூர் மக்கள் செய்த தவப்பயன். இது மட்டுமல்லாமல் திருச்சி மாவட்ட தொட்டியம் பஞ்சாயத்து யூனியன் மன்றத் தலைவரும் திரு ஆர். விஸ்வநாதன் அவர்களே.

இவ்வூர் மக்கள் தொகை சுமார் 3,000 ஆகும். சென்னை அரசாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்ட மாதிரி கிராமம் என்றழைக்கப்படும் புதிய திருப்பத்தை அமுல் நடத்தும் திட்டத்திற்கு, கொஞ்ச காலம் இங்கு பயிற்சியளிக்கப்பட்டது. குறிப்பாகக் கூறுமிடத்து தொட்டியம் வட்டாரத்திலேயே இவ்வூர் சிறந்த கிராமமெனவும், திருச்சி மாவட்டத்திலே நல்ல முறையில் வளர்ந்து வரும் ஊர் எனவும் தேர்ந்தெடுக்கப்படிருப்பது குறிப்பிடத்தக்கனவாகும்.

கூட்டுறவு மையம்

"ஒவ்வொருவரும் எல்லோருக்காகவும், எல்லோரும் ஒவ்வொருவருக்காகவும்" (Each for All and All for Each) என்ற கூட்டுறவின் தத்துவப்படி இவ்வூர் முன்னேறியிருப்பது வியக்கத்தக்கதாகும். இவ்வூர் ஒரு "கூட்டுறவின் மையம்" என்ற கூறினும் மிகப்படாது. இங்கு (1) கூட்டுறவு நாணயச் சங்கம் (Co-op. Credit Society) (2) கூட்டுறவுப் பால் பண்ணை (3) கூட்டுறவு நெசவாளர் சங்கம் கூட்டுறவு பாய் நெசவாளர் (5) பனை வெல்லம் காய்ச்சுவோர் சங்கம் (6) கைக்குத்தல் அரிசி கூட்டுறவு சங்கம் (7) செங்கல் குழாய் உற்பத்தி சங்கம் போன்ற பல சங்கங்களை அமைத்து இவ்வூரை ஒரு சிறந்த தொழில் மயமாக ஆக்கியிருக்கிறார்கள். இது மட்டுமின்றி, சென்னை அரசாங்கத்தின் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்படும் 2½ லட்ச ரூபாய் முதலீட்டில் தொடங்க இருக்கும் பாய் உற்பத்தி தொழிற்சாலையை இங்கு அமைக்க இருக்கிறார்கள் என்று கேள்வியுற்ற இவ்வூர் மக்கள் தாங்கொணா மகிழ்ச்சியில் மூழ்கிவிட்டார்கள். இதற்கான ஏற்பாடுகள் (கொட்டகைகள் போடுதல்) தற்போது நடந்து கொண்டு வருகின்றன.

சென்னைக் காதி இலாகாவால் நடத்தப்பட்டுவரும் அம்பர் சர்க்கா பயிற்சி முகாம் தற்போது இங்கு 40 பயிற்சியாளர்களைக் கொண்ட பெண்கள் பள்ளி யாக நல்ல முறையில் நடத்தப்பட்டு வருகிறது. இது மட்டுமல்லாமல் இங்கு நடமாடும் வைத்தியசாலை (Moving Rural Health Centre) ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. வாரத்தில் இரண்டு நாட்களுக்கு டாக்டர் வந்து நோயாளிகளைக் கவனித்து வேண்டுடியவைகளை செய்து செல்வார். கருவுற்றிருக்கும் தாய்மார்களைக் கவ கவனிப்பதற்கும் பயிற்சி பெற்ற பணிப்பெண் (Nurse) ஒருவர் எப்பொழுதும் இங்கு இருக்கிறார். அவர்களுக்கு வேண்டிய முதல் உதவிகளை இப்பணிப் பெண் செய்து வருகிறார்.

பஞ்சாயத்து செய்துள்ள வேலைகள்

விழிப்பற்றுக் கிடந்த கிராமமக்களை விழிப்புறச் செய்து ஊர் மத்தியிலே அழகான ஒரு பூங்காவையும் அதையொட்டிய பஞ்சாயத்து அலுவலகத்தையும் ஏற்படுத்தி "காந்திஜி பூங்கா" என்ற பெயரையும் சூட்டித்தமிழக முதல் அமைச்சர் திரு. காமராஜ் அவர்களைக் கொண்டு 1955-ம் ஆண்டிலே திறப்பு விழா செய்த பெருமை இவ்வூர் தலைவரையே சாரும். "சமூக சேவைக்குழு" என்று இளைஞர்களை ஒன்று திரட்டி மக்களுக்குத் தேவையான சாலைகள் போடுதல் கக்கூஸ் கட்டுதல் போன்ற வேலைகளை இக் குழு மிகவும் மெச்சத்தகும் வகையில் செய்து வந்தது.

ஆற்றை யொட்டி செல்லும் கால்வாயிலே மக்கள் சௌகரியமாகச் சென்று குளிப்பதற்கும் தண்ணீர் எடுப்பதற்கும் தெருவிற் கொன்றாக நான்கு படித்துறைகளை நல்ல முறையிலே கட்டி முடித்திருக்கிறார்கள். தேசிய குடி தண்ணீர் வழங்கு திட்டத்தின் கீழ் (National Water Supply Scheme) அமெரிக்க அரசாங்கத்தின் உதவியால் ரூ. 28,000 மதிப்பில் கட்டப்பட்ட பாது காக்கப்பட்ட குடி நீர் மேல் நிலைத் தொட்டி (Over Heas Tank) ஒன்று கட்டி சென்னை மாநில

ஸ்தல ஸ்தாபன அமைச்சர் திரு. லூர்த்தம்மாள் சைமன் அவர்களால் 1958-ல் திறந்து வைக்கப்பட்டு ஊர்த் தெருக்களிலும் வீடுகளுக்கும் சுமார் 20 பைப்புகளை ஏற்படுத்தி தண்ணீர் விநியோகம் செய்து வருகிறார்கள். இவ்வளவு வசதிகள் பெருகியும் "ஒளி" இல்லாக் குறைதான் மக்களுக்கு வருத்தத்தைத் தருகிறது. அதுவும் இவ்வாண்டு முடிவுக்குள் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை இருக்கிறது. மின்சாரக் கம்பி தாங்கிக் கம்பங்கள் இப்போது தான் இங்கு செய்து கொண்டிருக்கிறார்கள். முறையில் (காங்கிரீட்டில்) இதனால் கலவை செய்வது எப்படி என்ற ஒரு முறையை இவ்வூர் மக்களும் குறிப்பாக பள்ளி மாணவர்களும் நன்கு நேரடியாக தெரிந்துகொள்கிறார்கள்.

கல்விப்பணி

1959-ம் ஆண்டு வரை வெகு காலமாக ஆரம்ப பாடசாலையாக இயங்கி வந்த மாவட்டக்கழகப் பள்ளியை ஊர்ப் பொது மக்களும் அரசாங்கமும் சேர்ந்து ரூ. 15,000 மேல் கட்டப்பட்ட புதிய கட்டிடத்தைக் கொண்டு யூனியன் உயர் துவக்கப்பள்ளியாககடந்த ஆண்டிலே. மாற்றியமைகக்கப் பட்டிருக்கிறது. இதை இன்னும் உயர்நிலைப் பள்ளியாக மாற முயற்சிகள் நடை பெற்று வருகின்றன. முயற்சி வெற்றியடைய வேண்டுவோமாக. பஞ்சாயத்து அலுவலகத்திலே பத்திரிகைகளை வரவழைத்து ஒரு சிறிய வாசக சாலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். பொது மக்களின் அறிவு வளர்ச்சிக்கு இது மட்டுமன்றி திருச்சி மாவட்டத்திலேயே தனியார் நடத்தும் நூல் நிலையங்களிலேயே பெரியதும், சிறந்ததும் என்று பெயர் பெற்ற 'மாணிக்க முதலியார் நினைவு—ராஜா வாசக சாலை" ஒன்றும் மிக நல்ல முறையிலேயே இவ்வூரில் இயங்கி வந்தது இது ஒரு சில மாத காலமாக நடைமுறையில் இல்லாமல் இருப்பது இவ்வூர் மக்கள் மட்டுமில்லாமல் சுற்றுப் புற ஊர்களிலுள்ள மக்களுக்கும் சிறமமாக இருக்கிறது இன்னும் "இளங்கோ மாணவர் மன்றம்", "காந்திஜி இளைஞர் மன்றம்" "வள்ளுவர் படிப்பகம்" போன்ற மன்றங்களும் கல்வி வளர்ச்சிக்குச் சிறந்த முறையில் தொண்டு செய்து வருகின்றன.

சுமார் 40 ஆண்டுகளாக ஊரிலே திரு விழா என்பதே இல்லாமலிருந்த நிலையை மாற்றி, கரைக்கு வடக்கிருக்கும் காளிகா அம்மைக்கு மேல் கூடம் புதுப்பித்து கும்பாபிசேகம் செய்து ஒவ்வொரு ஆண்டும் திருவிழா ஏற்படுத்தி மக்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தி இருக்கிறோம். நல்ல சுகாதார முறைப்படி கட்டப்பட்ட கிராம ஊழியர் இல்லமும் ஆசிரியர்கள் காலனி, ஹரிஜன் காலனி, செப்பனிடப்பட்ட சாலைகள் போன்றவைகள் வளர்ந்து வரும் கிராமத்தின் திலகமாகத் திகழ்கின்றன.

[15-ம் பக்கத் தொடர்ச்சி]

சேர்ந்தார்கள். மீண்டும் ஜூலை மாதம் 19-ந் தேதி சமூகக் கல்விக் குழுவின் 3-வது கூட்டம் நடை பெற்றது. கூட்டத்தில் இதுவரை சேராத பிள்ளைகளின் பெற்றோர் களுக்குக் கடிதக் குறிப்பு (Notes) அனுப்ப தீர்மானித்து, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தற்போதுப் பள்ளி வயதுடைய பிள்ளைகள் அநேகம் சேர்ந்து விட்டனர். இன்னும் சேர வேண்டிய பிள்ளைகள் 93 பேர் இருக்கின்றனர். இவர்களையும் பள்ளியில் சேர்க்க திட்டமிட்டு சேத்துக் கொண்டு வருகிறோம். சென்ற வருடத்தில் வாசித்த மாணவர்கள் 344. இவ்வருடத்தில் வாசிக்கும் பிள்ளைகள் 520. சென்ற வருடத்தில் வேலை செய்த ஆசிரியர்களின் எண்ணிக்கை 9. தற்போது வேலை செய்யும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 12. இவ்வருடம் பஞ்சாயத்தும், பஞ்சாயத்து சமூகக் கல்விக் குழுவும் பள்ளி ஆசிரியர்களும் முனைந்து வேலை செய்து வருவதன் காரணத்தால் பாடசாலை ஏற்பட்டு இதுவரை கண்டிராத மாணவர்களின் எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது.

பாடசாலை கட்டடம் :—இப்பள்ளியில் வகுப்புகள் நடத்த போதுமான இடமின்மையால் தற்போது ரூபாய் 8,300 எஸ்டிமேட்டில் பஞ்சாயத்தின் உதவிப் பெற்று முடிவும் தருவாயிலிருக்கிறது. இக்கட்டிடம் முடிந்தால் இதில் 3 வகுப்புகள் நடத்தலாம். இன்னும் இரண்டு தற்காலிகக் கொட்டகைகள் அமைக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. மீண்டும் பிள்ளைகளைச் சேர்ப்பதில் நிர்வாகத்தினர் காட்டும் உற்சாகம் பாராட்டத்தக்கது. இன்னும் பாடசாலையில் சேர்க்க வேண்டிய பிள்ளைகள் 20—73 இருக்கின்றார்கள். இவர்கள் அனைவரையும் வருகிற விஜயதசமிக்கு முன் பாடசாலையில் சேர்த்துவிட பஞ்சாயத்தும் சமூகக் கல்விக்குழுவும் சேர்ந்து திட்டமிட்டு வேலை செய்து வருகின்றது.

மதிய உணவு அளித்தல் :—பள்ளியில் சேர்க்கப்பட்ட குழந்தைகள் அன்றுடும் தவறுமல் வருவதற்கு உற்சாக மூட்ட பிற்பகல் உணவு ஏழை குழந்தைகளுக்கு அளிக்கப் பட்டு வருகிறது. இதற்கென பிரத்தியேக குழு ஒன்று நன்கு வேலை செய்து வருகின்றது. அரசாங்கம் 40 பிள்ளைகளுக்கு மட்டும் தான் உணவு அளிக்க உத்தரவு கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் உண்மையில் இன்று எங்கள் பள்ளியில் 60 முதல் 70 வரை மாணவ மாணவிகள் உணவு உட் கொண்டு வருகின்றார்கள். இது எப்படி முடியும் என்று ஆச்சரியப்படுகிறீர்களா? ஆர்வத்துடனும், சேவை மனப்பான்மையுடனும் தொண்டாற்றினல், எதுதான் முடியாது?

உயர்தரப்பள்ளி :—எங்கள் பஞ்சாயத்தின் மற்றொரு சாதனை நீண்ட நாட்களாக நாங்கள் முயற்சி செய்ததின் காரணத்தினால் எங்கள் கிராமத்திலேயே உயர்தரப் பாடசாலையை துவக்கி 340 மாணவ மாணவிகள் 11 ஆசிரியர்கள் வேலை செய்து வருகின்றனர். இதற்கென கட்ட கமிட்டி ஒன்று இருக்கின்றது. பஞ்சாயத்தும் கட்ட கமிட்டியும் ஒன்று சேர்ந்து உழைப்பதன் காரணத்தினால் உடன் 5 ஏக்கர் பரப்பில் பிரத்தியேகக் கட்டடம் கட்டுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இப்பள்ளித் தலைமை ஆசிரியரும் மற்றும் உதவி ஆசிரியர்களும் பாடசாலை முன்னேற்றத்தில் அதிக கவனம் செலுத்தி வருவது பாராட்டத்தக்கதாகும்.

வயது வந்த குழந்தைகளுக்குக் கல்வியறிவுப்புகட்ட மேற்கூறிய முறைகளைச் செய்ததின் காரணத்தினல், நாட்டின் முதுகெலும்பாகிய கிராமம் ஓரளவு எல்லா வசதிகளையும் பெற்று சமுதாயம் முன்னேறி வருகின்றது. இதைத்தான் உத்தமர் காந்தி அடிகள் அவர்கள் அன்று தனது நிர்மாணத் திட்டத்தில் கிராம வளர்ச்சிக்கானத் திட்டத்தை அதிகம் சேர்த்து எந்த நேரமும் கிராம முன்னேற்றத்தில் அதிக கவனம் செலுத்தி, கிராம மக்களின் வாழ்க்கைத்தரம் போல் தானும் வாழ்ந்து அன்றும் இன்றும் உலக ஜோதியாய் அழியாப் புகழைப் பெற்றிருக்கிறார். அவர் சென்ற பாதையைப் பின் பற்றுவது நமது கடமை அல்லவா? எனவே பஞ்சாயத்துக் கிராம வளர்ச்சியில் பெரிதும் கவனம் செலுத்தி ஆக்க வேலைகள் பல புரிய வேண்டுமென விழைகின்றேன்.

ஏழையின் பொன்

திரு. A. V. குப்புரத்தினம், பி. எஸ். ஜி. கலைக் கல்லூரி, பூளைமேடு.

[பொதுஜன விஞ்ஞானம் என்ற அறிவியல் கட்டுரைத் தொடரில் இது எட்டாவது கட்டுரை. மிகச் சாதாரண உலோகம் என்று நாம் கருதி வரும் அலுமினியத்தின் சிறப்பியல்புகள், பலன்கள் ஆகியவற்றைப் பற்றி திரு குப்புரத்தினம் அவர்கள் எளிய நடையில் அழகாக விளகியுள்ளார். அவர் கோவையில் பி. எஸ். ஜி. கலைக் கல்லூரியில் ரசாயன விரிவுரையாளராகப் பணியாற்றுகிறார்—

ஆசிரியர்]

சிகரெட் பெட்டியினுள்ளே பளபளக்கும் வெள்ளி போன்ற தாளை எடுத்து வெற்றிலைக்குப் போடும் சுண்ணும்பை அதன்மேல் ஏகமாகத் தடவி, தாளைக்கசக்கி உருண்டை செய்து காதருகே வைத்துக்கொண்டால் அது ரகசியம் பேசுவதைக் கேட்கலாம். பலரும் இப்படிச் செய்யக் கண்டிருக்கிறோம். அது என்ன ?

வெள்ளியைத் தோற்கடிக்கும் பளபளப்புள்ள அந்த ரேக்கு சுத்தமான அலுமினியத்தால் செய்யப்பட்டதாகும். தட்டுமுட்டுச் சாமான்களைத்தான் அலுமினியத்தால் செய்கிறார்கள் என்று எண்ணியிருந்த நமக்குக் கேவலம், அலுமினியத்திற்கா இத்தனை பளபளப்பு என்று எண்ணத் தோன்றுகிறது !

உண்மையில் முகம் பார்க்கும் கண்ணாடிகள் வெள்ளி பூசித்தான் செய்யப்படுகின்றன. "ரசம்" பூசுவதென்பது, நெடுநாட்களுக்கு முன்பிருந்த வழக்கமான பாதரசக் கலவை பூசுவதைக் குறித்த போதிலும், வெள்ளி பூசுவதே இப்போது பழக்கமாகிவிட்டது. முகம் தெரியும் அத்தனை பளபளப்பு வெள்ளிக்கு உண்டு. கண்ணாடிப் பரப்பில் அதைப் பூசிப் பளபளப்புப் பெறுகிறோம். ஆனால் அலுமினியத்தைப் பூசினால் இன்னும் மேலான பளபளப்பு கிடைக்கிறது. நெடுநாட்களுக்கு மங்காமல் நிலைக்கிறது. அமெரிக்கா முதலிய நாடுகளில் இதுபோன்ற கண்ணாடிகள் பழக்கத்தில் வந்துவிட்டன. வானத்துச் சந்திர சூரியர்கள், கிரகங்கள், கண்சிமிட்டும் நட்சத்திரங்களையெல்லாம் ஆராய்ச்சி செய்வதற்கான தொலைநோக்கி, அதாவது, தூரதிருஷ்டிக் கண்ணாடிகளில்கூட இப்போதெல்லாம் ஒளியைப் பிரதிபலிப்பதற்கு அலுமினியம் பூசிய கண்ணாடிகளே உபயோகிக்கப்படுகின்றன. பூச்சுக் கொடுப்பதற்கெல்லாம்விசேஷமான முறைகள் உண்டு.

அலுமினியத் தாள் பளபளப்புக்கு குன்றாமல் கவர்ச்சியாக இருக்கிறது. ஈரக் காற்றில் நமத்துவிடுமென்ற பயமில்லை. போதிய வலிவோடும் இருக்கிறது. வெள்ளியத் தாளைவிட மலிவானது. இதையெல்லாம் உத்தேசித்துத்தான் சிகரெட், இன்னும் சாக்லேட் போன்ற மிட்டாய்களைச் சுற்றிவைத்துப் பாதுகாக்க அதைப் பயன்படுத்துகிறார்கள்.

அலுமினியத்திற்கு "அழகுக்கு அழகு" செய்யவேண்டுமானாலும் செய்யலாம். கண்ணைக் கவரும் வண்ணங்களை அதற்கு ஊட்டலாம். பச்சை, சிவப்பு, நீலம் என்று வேண்டிய நிறத்தை அதற்குக் கொடுக்கலாம். இப்படி நிறங்கொடுத்த தாள் அலங்கார வேலைகளுக்குப் பயன்படுகிறது. கடைத் தெருவில் விற்கும் அலுமினுய சோப்புப் பெட்டிகளில் இப்படி நிறம் கொடுத்த பெட்டிகளைப் பலரும் பார்த்திருக்கலாம்.

மின்சார விளக்குக் கம்பங்களில் அடிக்கப்பட்டிருக்கும் பூச்சு அலுமினியப் பூச்சுதான். ஆனால் அது மேன்மையான அலுமினியத்தூளை ஆளிவிதை எண்ணெயில் குழைத்து அடித்த பூச்சாகும். விளக்குக் கம்பம் பளிச் சென்று பலகாலம் அழகாக இருப்பதற்கு இந்தப் பூச்சு உதவுகிறது. விளக்குக் கம்பமென்ன, எத்தனையோ சாமான்களுக்கு இத்தகைய பூச்சு தரலாம்.

இரும்பு, செம்பு, ஈயம், நாகம் முதலிய பிற உலோகங்களைப் பார்க்க அலுமினியம் மிக இலேசானதொரு உலோகம். இதை எரியவிட முடிந்தால் பிரகாசமான வெளிச்சத்தோடு எரியும். கம்பி மத்தாப்பு உருவத்தில் அலுமினியத் தூள் அழகான பொறிகளை உதிர்த்துச் சிரிப்பு காட்டுகிறது. "பளிச்" சென்று மந்திரிகளையும், தலைவர்களையும் பார்த்துக் கண்சிமிட்டும் "போட்டோ விளக்கின்" பல்பினுள் மெல்லிய அலுமினிய ரேக்கு அல்லது கம்பிதான் இருக்கிறது. போட்டோ எடுப்பதற்குச் சரியாக இதுவும் எரிந்த பிரகாசமான ஒளியை அள்ளி வீசுகிறது. எரிந்துபோன பல்புகள் திரும்பப் பயன்படா.

இத்தனை அருமையான ஒரு உலோகம் ஒரு காலத்தில் தங்கத்தைவிட மேலான பதவி வகித்திருந்தது. இந்த உலோகத்தைப் பிரித்தெடுக்கும் மலிவான முறை வருவதற்கு முன்பெல்லாம் இதன் விலை ஏதேஷ்டமாக இருந்தது. மிகவும் இலேசாயிருந்ததால் இதை ஒரு அற்புத உலோகமாகவும் கருதினர். மகாவீரன் நெப்போலியனது அரண்மனை விருந்துகளில் மேலதிகாரிகளுக்கெல்லாம் அலுமினியத் தட்டுகளிலும், கிண்ணங்களிலும் உணவு பரிமாறப் பட்டது. சிப்பந்திகள் வெள்ளிக் கலங்களில் படைக்கப்பட்டனர் !

(21-ம்பக்கம் பார்க்க)

தொடர் கட்டுரை

கிராம நிருவாகக் குழுக்கள்:

பெரும்பாலான பெரிய கிராமங்களில் குறைந்தபட்சம் எழெட்டு குழுக்களாவது இருந்து நிருவாகத்தை நடத்தி வந்தன என்று தெரிகிறது. இந்த எழெட்டு குழுக்களுககு அங்கத்தினர் தெரிந்தெடுக்கப்பட்டு அவர்கள் நிருவாகத்தை நடத்தி வரும்போது, இடைக்காலத்தில் வேறு சில குழுக்களை அமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால் அந்தக்குழுக்களை அமைக்கவும், அவைகளுக்கு அங்கத்தினர்களைத் தெரிந்தெடுக்கவும் கிராம மகாஜன சபை தயங்கவில்லை.

இந்த எழெட்டு குழுக்கள் யாவை? (1) சம்வத்ஸர வாரியம், (2) தோட்டவாரியம், (3) ஏரி வாரியம், (4) கழனி வாரியம், (5) பஞ்ச வாரவாரியம், (6) கணக்கு வாரியம் (7) கலிங்கு வாரியம், (8) தடிவழி வாரியம்.

இந்த ஒவ்வொரு குழுவைப்பற்றியும் சிறிது விளக்குவோம்.

சம்வத்ஸர வாரியம்.—இதனைத் தற்கால பாஷையில் வருஷாந்தக் கமிட்டி என்று சொல்லலாம். இந்தக் கமிட்டி அல்லது குழு தான், மற்ற எல்லாக் குழுக்களைக் காட்டிலும் முக்கியமானது; அந்தஸ்தில் மேலானது கூட. மற்ற குழுக்கள், அவைஅவைகளுக்குகேற்பட்ட பொறுப்பை ஒழுங்காக நிறைவேற்றி வருகின்றனவா என்று கண்காணித்து வருவது இந்தக் குழுவின் கடமையாயிருந்துதது போலும். இந்தக் கண்காணிக்கும் கடமையை இஃது எப்படிச் செய்து வந்தது, இதற்காக அடிக்கடி கூடியதா, அல்லது வருஷத்தில் ஒரு தடவை அல்லது இரண்டு தடவை கூடியதா என்பன போன்ற விவரங்கள் தெரியவில்லை. ஆனல் இதில் பன்னிரண்டு பேர் அங்கத்தினர்களாயிருக்கவேண்டுமென்ற ஒரு நியதி இருந்தது. இவர்கள் முந்நூற்றறுபது நாட்கள் தான் அதாவது ஒரு வருஷந்தான் பதவி வகிக்கலாமென்று நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இங்கு ஒரு வருஷமென்று சொல்லாமல் முந்நூற்றறுபது நாட்கள் என்று ஏன் சொல்கிறேமென்றல், கல்வெட்டுக்கள், முந்நூற்றறுபது நாட்கள் என்று திட்டவட்டமாகக் குறிப்பிடுகின்றனவாதலினல்தான்.

இந்தப் பன்னிரு பெருமக்கள் செய்து வந்த கடமைகளைத் தொகுப்பாக "சம்வத்ஸர கிராம காரியம்" என்று கல்வெட்டுக்கள் அழைக்கின்றன.

இந்த சம்வத்ஸர வாரியத்திற்குக் கண்டவரும் தெரிந்தெடுக்கப்படவில்லை. இதற்குச் சில தகுதிகள் ஏற்படுத்தப் பெற்றிருந்தன. முதலாவது, ஏற்கனவே தோட்டவாரியத்திலும், ஏரி வாரியத்திலும் அங்கத்தினராயிருந்து நிருவாக அனுபவம் பெற்றிருக்க வேண்டும். இரண்டாவது, அறிவிலும், வயதிலும் முதிர்ந்தவாராயிருக்கவேண்டும். "வித்யா விருத்தினரையும், வயோ விருத்தர்களையும்" என்று கல்வெட்டுக்கள் அழைக்கின்றன. இவைகளைக் கொண்டு இந்த சம்வத்ஸர வாரியத்திற்கு—வருஷாந்த கமிட்டிக்கு—இருந்த மதிப்பையும் செல்வாக்கையும் நாம் ஒருவாறு அறிந்து கொள்ளலாம்.

தோட்டவாரியம்.—பொதுவாகக் கிராமங்களில் புன்செய்ப் பயிர் விளையும் இடத்தைக் "கொல்லை" என்று சொல்வார்கள். கிராமத்திற்குப் பொதுவான இத்தகைய கொல்லைகள் பல, ஒவ்வொரு கிராமத்திலும் இருந்தன. இப்பொழுதும்கூட வட ஆர்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் சமுதாயக் கொல்லை எனறே அழைப்பார்கள். இவை தவிர கிராமத்திற்குப் பொதுவான தோப்புக்கள்இருந்தன. மற்றும் கிராமத்திற்குப் பொதுவான பூந்தோட்டங்கள், அதாவது தற்காலத்தில் "பார்க்" என்று சொல்லப்படுகிற பூங்காக்கள் இருந்தன. இன்னும், வாழை, வெற்றிலை, காய்கறிகள் முதலியவைகளை விளைவிக்கும் தோட்டக்கால்களும் இருந்தன. இவையனைத்தையும் பராமரிக்கும் பொறுப்பு இந்தத் தோட்டவாரியத்திற்கு இருந்ததாகத் தெரிகிறது.

இந்தக் கொல்லைகள், தோட்டங்கள் முதலியன கிராமத்திற்குப் பொதுவானவை யென்று சொல்லப்படுகிற பொழுது, இவை, கிராமத்திலுள்ள எந்த ஒரு தனி நபருக்கும் சொந்தமல்லாதவை என்று ஏற்படுகிறது. அப்படியானல், இவை எப்படிக் கிராமத்தின் பொதுச் சொத்துக்களாயின?

தர்ம சிந்தையுள்ள சிலர், தங்களுடைய அனுபவ பாத்தியதையில் இருந்து வந்த புன்செய் நிலங்களிலோ, தோப்புத்துரவுகளிலோ சிலவற்றைக் கிராமப் பொது உபயோகத்திற்கென்று நன்கொடையாக அளிப்பர்; சிலர் கோயில்களுக்கு அளிப்பர்; சிலர், தாங்கள் தெரிந்தோ, தெரியாமலோ செய்துவிட்ட ஒரு குற்றத்திற்கோ பல குற்றங்களுக்கோ, மொத்தமாகக் கழுவாய் தேடிக்

கொள்கின்ற முறையில், தங்களுடைய, மேற்சொன்னவற்றில் ஒரு பகுதியைப் பொதுச் சொத்தாக்கி விடுவதுண்டு. இங்ஙனம் கிராமப் பொதுவுக்குக் கொல்லைகள், தோட்டங்கள் முதலியன காலக் கிரமத்தில் சேர்ந்து வந்தன.

இவைகளை ஒழுங்காகப் பராமரித்து வருவதும், இவற்றிலிருந்து கிடைக்கும் மகசூல்களை விற்று முதலாக்குவதும், அதைச் சரியான வழியில் பயன்படுத்துவதும் இந்தத் தோட்டவாரியத்தின் பொறுப்புக்களாயிருந்தன. பூங்காக்களின் மூலம் அதிக வருவாய் கிடைக்காது. ஆனால் இவற்றை அசுத்தமாக வைத்திருக்கச் செய்வதும், கெட்ட வழிகளில் உபயோகப்படுத்தப் பெருமல் இவைகளைப் பாதுகாத்து வருவதும் இந்தக் குழுவின் பொறுப்புக்களாயிருந்தனவென்று தெரிகிறது. கோயில்களைச் சேர்ந்த நந்தவனங்களின் பராமரிப்பு இந்தக் குழுவின் பொறுப்பில் இல்லையென்றும், அவை கோயில் நிருவாகத்திற்குட்பட்டிருந்தனவென்றும் கருதவேண்டியிருக்கிறது. இந்தக் குழுவில் பன்னிரண்டு அங்கத்தினர்கள் இருக்கவேண்டுமென்பது நியதி.

ஏரி வாரியம்.—பிரதியொரு கிராமத்திலும் நீர்ப்பாசன வசதிக்கென்று ஏரி, குளம், வாய்க்கால் முதலியன இருக்குமல்லவா, இவற்றைப் பராமரித்து வரவேண்டும். அவ்வப் போதைய தேவையை முன்னிட்டுப் புதிய புதிய வாய்க்கால்கள் தோண்டச் செய்வதும் அவசியமாயிருக்கும். இந்த ஏரி, குளம், வாய்க்கால்களில் மண் சரிந்து தூர்ந்துவிட்டால் அவ்வப்பொழுது எடுக்கச் செய்து சுத்தப்படுத்தவேண்டும். இவைகளுக்குப் போதுமான கூலியாட்களை நியமிக்க வேண்டும். அவர்களுக்கு மண் வாரிக் கூடைகள், ஏரிகுளங்களின் மத்தியில் சென்று, அடியில் சேர்ந்து கிடக்கும் மண்ணைத் தோண்டி எடுத்துக் கரைக்குக் கொண்டுச் சேர்க்க சிறு சிறு படகுகள் முதலியன கிடைக்கச் செய்ய வேண்டும். இவைகளையெல்லாம் கவனித்து ஆவன செய்யவேண்டியது இந்த ஏரிவாரியத்தின் பொறுப்பாயிருந்தது.

இது தவிர, புதிதாகக் குளங்கள் தோண்டுதவற்கோ, வாய்க்கால்கள் வெட்டுவதற்கோ, ஏரி குளம் வாய்க்கால்களில் மண்ணை அவ்வப்பொழுது அப்புறப்படுத்துவதற்கோ, தர்ம சிந்தையுள்ள சிலர், ரொக்கமாகவோ, நிலபுலங்களாகவோ எழுதிவைத்தனர்; அதாவது நன்கொடையாக வழங்கினர். இவைகளையெல்லாம் பராமரிப்பதும், இவைகளிலிருந்து கிடைக்கும் வருமானத்தை வட்டிக்குக் கடனுகக் கொடுத்து வாங்குவதும், அதிலிருந்து கிடைக்கும் வருவாயைச் சேம நிதியாகச் சேர்த்து வைத்து, பிறகு, தேவைப்பட்ட காலங்களில், ஏரி, குளம், வாய்க்கால் மராமத்துக்காகப் பயன்படுத்துவதும் இந்த ஏரிவாரியத்தின் பொறுப்புக்களாயிருந்தன. தவிர, கிராம எல்லைக்குள், முக்கியமான இடங்களில், தேவையான போது தண்ணீர்ப் பந்தல்கள் அமைத்து, குடி தண்ணீர் வழங்கச்செய்வதும் இந்தக் குழுவின் பொறுப்பாயிருந்ததென்று தெரிகிறது. இதில் ஆறு பேர் அங்கத்தினர்களாயிருக்க வேண்டுமென்பது நியதி.

கழனிவாரியம்.—இது கிராமத்திலுள்ள வயல்களை அதாவது நன்செய் நிலங்களை மேற்பார்வையிடுகின்ற குழு. அவரவரும் நிலங்களை உழுது பயிரிட்டுச் சாகுபடி செய்து வந்தாலும், அவர்களுக்கு உழுது பயிரிடுவதிலோ, சாகுபடி செய்வதிலோ எவ்விதத் தடங்கலும் ஏற்படாதபடி கவனித்து வருவதும், உழுது பயிரிடப் பெருத நிலங்கள் இருக்கும் பட்சத்தில், அவை ஏன் உழுது பயிரிடப் பெருமல் இருக்கின்றன என்று விசாரித்து ஆவன செய்வதும், வயல்களுக்கு எல்லைகளாக அமைந்துள்ள வரப்புக்களை அக்கம் பக்கத்துள்ள வயல்களின் சொந்தக்காரர்கள் கொஞ்சம் கொஞ்சமாக வெட்டித் தங்கள் நிலத்தில் சேர்த்துக் கொள்ளாதபடி பார்த்துக் கொள்வதும், இந்தக் குழுவின் பொறுப்புக் களாயிருந்தனவென்று நாம் கொள்ளலாம். தவிர, வயல்களுக்கு அடுத்தாற்போல் தரிசு நிலங்கள் இருந்தால் அவைகளைத் தனிப்பட்டவர்கள் ஆக்கிரமித்துக் கொள்ளாமல் பார்த்துக் கொள்வதும் இந்தக்குழுவின் கடமையாயிருந்தது போலும். இந்தக் குழு, ஆறு அங்கத்தினர்களைக் கொண்டதாயிருந்ததென்று கருத வேண்டியிருக்கிறது.

பஞ்சவாரவாரியம்.—பஞ்சவாரம் என்பது, ஒரு முகத்தலளவையைக்குறிப்பதாகும். படி, மரக்கால் மாதிரி. நிலத்தீர்வையைப் பெரும்பாலும் தானியமாகச் செலுத்துவது முற்காலத்தில் கிராமவாசிகளுக்குச் சுலபமாயிருந்தது. ஒரு சிலர், பணமாகச் செலுத்தியும் வந்தனர். தானியமாகச் செலுத்துவதற்குக் கடமை யென்றும், நாணயமாகச் செலுத்துவதற்கு வரியென்றும் பிரித்துப் பெயர்கள் வழங்கப்பட்டன. இப்படி இருவிதமாகச் செலுத்தப்பட்ட நிலத் தீர்வையை வசூலிப்பது இந்தப் பஞ்சவார வாரியத்தின் முக்கிய பொறுப்பாயிருந்தது.

நிலத்தீர்வை, தானியமாகச் செலுத்தப்பட்டால் அதை முழுவதையுமோ, அதில் ஒரு பகுதியையோ ஆபத்துக் காலங்களில், அதாவது அதிக மழை, மழையின்மை ஆகிய இவ்விரண்டு காரணங்களினுல் போதிய விளைச்சல் இல்லாமற்போக, அதனுல் கிராம ஜனங்கள் பாதிக்கப்படுகிற காலங்களில் அவர்களுக்கு உதவும் பொருட்டு, பாதுகாப்பான ஓரிடத்தில் சேமித்துவைப்பதுண்டு. பொதுவாக, ஒரு வருஷத்தில் வசூலிக்கப்பட்ட தானியத்தை அடுத்த வருஷம் வரையில் சேமித்துவைப்பர். பிறகே விலைவாரி செய்வர். இங்ஙனம் வசூலிக்கப்பட்ட தானியத்தைச் சேகரித்துப்பாதுகாப்பதும், பிறகு விலைவாரி செய்வதும் இந்தப் பஞ்சவார வாரியத்தின் கடமைளாகமிருந்தனவென்று நாம் கொள்ளலாம். இந்தக் குழுவில் ஆறு அங்கத்தினர்கள் இருக்கவேண்டுமென்பது நியதி.

பெரும்பாலான கிராமங்களில், நிருவாகத்தை நடத்த ஐந்து குழுக்கள் இருந்தனவென்றும், இவற்றை மேற்பார்வை செய்ய ஒரு தனிக் குழு இருந்ததென்றும் அதுவே பஞ்சவார வாரியம் என்று அழைக்கப் பெற்றதென்றும் ஆராய்ச்சியாளர் சிலர் கருதுவர். ஐந்துக்கு மேற்பட்ட குழுக்கள் இருந்த கிராமங்களிலும், அவைகளை மேற்பார்வை செய்யும் குழு, பஞ்சவார வாரியம் என்ற பெயரால் அழைப்பது சம்பிரதாயமாகி விட்டதென்றும்

இவர்கள் கூறுவர். அப்படியானால் முதலில் சொல்லப்பெற்ற சம்வத்ஸர வாரியத்தின் பொறுப்பு, என்ன என்ற கேள்வி எழுகின்றது. இதற்குச் சரியான விடை, கல்வெட்டுக்களிலிருந்து கிடைக்கவில்லை. ஒரு கால், ஒரே குழு, சில கிராமங்களில் சம்வத்ஸர வாரியம் என்றும், சில கிராமங்களில் பஞ்சவார வாரியம் என்றும் அழைக்கபட்டுவந்ததுபோலும்.

கணக்கு வாரியம்.—கிராமத்துக் கணக்குகளை ஒழுங்காக வைத்திருக்கச் செய்வது இந்தக் குழுவின் பொறுப்பாயிருந்தது. இதில் எத்தனை பேர் அங்கத்தினர் என்பது தெரியவில்லை. இந்தக் குழுவின் மேற்பார்வைக்குட்பட்டு தற்காலத்துக் கணக்குப்பிள்ளை, மணியக்காரர் போன்ற உத்தியோகஸ்தர்கள் பணியாற்றி வந்தனரென்று தெரிகிறது.

கலிங்குவாரியம்.—ஏரியின் கலிங்கு பழுதுபடாமலிருக்கச் செய்வதும், ஏரி நீர் மதகுகளின் வழியாக நிலங்களுக்குச் சரிவரப் பாய்ச்சப்படுகின்றனவா என்பதைக் கவனிப்பதும் இந்தக் குழுவின் பொறுப்பாயிருந்தது. இப்பொழுதும் அநேக கிராமங்களில், கம்பங்கட்டி என்ற ஓர் ஊழியர், நிலங்களுக்கு முறைப்படி நீர்ப்பாய்ச்சும் பணியைச் செய்துவருவதை அனைவரும் அறிவர். இந்த ஊழியர், கலிங்குவாரியத்தின் ஒரு பகுதிப் பொறுப்பை நிறைவேற்றி வந்த ஊழியர் பரம்பரையைச் சேர்ந்தவர் என்று நாம் கொண்டால் அது தவறுயிராது. இந்தக் கலிங்குவாரியத்தின் அங்கத்தினர் எத்தனை பேரென்பது தெரியவில்லை.

தடிவழி வாரியம்.—தடி என்பது அளவு கோலைக் குறிக்கும். கிராமப் பாதைகளின் அகல நீளங்கள் இந்த அளவு கோல் மூலம் நிர்ணயிக்கப்பட்டிருந்தன. இது நிரந்தரமானதோர் ஏற்பாடாயிருந்தது. இந்த ஏற்பாட்டுக்குப் பங்கம் ஏற்படாமல், அதாவது பாதைகள் யாருடைய, அல்லது எந்த விதமான ஆக்கிரமிப்புக்கும் உட்படாமல் பாதுகாப்பதும், இவைகளை அவ்வப்பொழுது பழுதுபார்த்து வருவதும், மிருகங்களின் உபத்திரவமோ, கள்ளர் பயமோ இல்லாதபடி அனைவரும் செல்லக் கூடிய வகையில் பாதைகளில் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்வதும், போவோர் வருவோரின் சௌகரியத்துக்காக ஆங்காங்கு சுமைதாங்கிகள், தங்குமிடங்கள் முதலியவைகளை அமைத்து அவைகளைப் பராமரித்து வருவதும் இந்தக் குழுவின் பொறுப்புக்களாயிருந்தன.

தவிர, கிராமத்தில் களவு முதலிய குற்றங்கள் நிகழாதபடி பார்த்துக்கொள்வதும் இந்தக் குழுவின் பொறுப்பாயிருந்ததென்று சொல்லலாம். சுருக்கமாக, ஊர்க்காவல் வேலையை இந்தக் குழு செய்து வந்தது. இதற்காக நியமிக்கப்பட்ட ஊழியர்கள் வெட்டிகள் என்று அழைக்கப்பட்டார்கள். இவர்களுக்குத். தலைவனுயிருந்தவன் முகவெட்டி என்று அழைக்கப்பட்டான்.

இந்தக் குழுவின் அங்கத்தினர்கள் எத்தனைப் பேரென்பது தெரியவில்லை. ஆறு பேருக்குக் குறைவாயிராதென்பது திண்ணம்.

பொன் வாரியம்.—இப்படியொரு குழு அநேக கிராமங்களில் இருந்ததென்றும், இதில் ஆறு அங்கத்தினர்கள் இருந்தார்களென்றும் சில கல் வெட்டுக்களால் தெரியவருகின்றன. கிராமத்தின் நாணயச் செலாவணியை ஒழுங்குபடுத்திவிடுவது இதன் பொறுப்பாயிருந்ததென்று சொல்லப்படுகிறது. ஆனால், இது,கிராமத்திலுள்ள பொற்கம்மியர்கள், தங்கள் தொழிற் நலனுக்காக அமைத்துக் கொண்ட ஒரு தொழில் சங்கமாக இருக்கலாமோ என்று சிலர் கருதுகின்றனர்.

குடும்பு வாரியம்.—இது, 'குடும்ப வாரியம்' என்று அழைக்கப்பட வேண்டும் போலும். இப்படி யொரு குழு சில கிராமங்களில் இருந்ததாகத் தெரிகிறது. நிலங்களை உழுது பயிரிடுவோருடைய நலன்களை இந்தக் குழு பாதுகாத்து வந்ததென்று சொல்லப்படுகிறது. அதாவது, விவசாயிகளுக்கு அவ்வப்பொழுது தேவைப்படுகின்ற விதைகள், உரங்கள் முதலியவற்றை விநியோகிப்பது இந்தக் குழுவின் வேலையாயிருந்தது போலும். இதில் எத்தனை பேர் அங்கத்தினர் என்பது தெரியவில்லை.

மேற்சொன்ன குழுக்களைத் தவிர கிராமத்திலுள்ள கோயில்களை நிருவாகம் செய்ய, தனிக் குழுக்கள் இருந்தன.

மேற்படி குழுக்கள், தனித்தனியாகவோ, சேர்ந்தாற்போலவோ, அவசியத்திற்கேற்றாற்போல் அவ்வப்பொழுது கூடி கிராம காரியங்களைப் பார்த்து வந்தன. பெரும்பாலும் இவை கூடும் இடம், ஊர்க்கோயிலிலுள்ள மண்டபமாகவே இருந்தது. கோயில் அபிஷேக மண்டபத்தில் கூடினதாக அநேக கல்வெட்டுக்கள் கூறுகின்றன. சில கிராமங்களில், இந்தக் குழுக்கள் கூடுமிடம் ப்ரன்மஸ்தானம் என்ற பெயரால் அழைக்கப்பட்டது.

இந்தக் குழுக்களோ, கிராம மகாஜன சபையோர் கூடுமிடம், நேரம் முதலியவற்றை கிராமப் பணியாட்களைக் கொண்டு கிராம மக்களுக்கு அறிவிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இதற்காக தாரை, காளம் முதலிய கருவிகளை ஊதச் செய்து, உறுப்பினர்களைக் கூட்டங்கள் கூடுமிடத்திற்கு வரவழைப்பர்.

(18-ம் பக்கம் தொடர்ச்சி.)

களிமண்ணிலெல்லாம் அலுமினியம் இருக்கிறது ; அதைப் பிரித்தெடுப்பதற்கு ஆகும் செலவுதான் மிக அதிகம். ஆனால் "பாக்ஸைட்" எனப்படும் ஒரு வகை மண்ணிலிருந்து அலுமினியத்தை மலிவாகப் பிரித்தெடுக்கிறார்கள். நம் பக்கம் சேலம் சேர்வாராயன் மலைப் பகுதிகளில் இது நிறையக் கிடைக்கிறது. சுத்தம் செய்யப்பட்ட பாக்ஸைட்டை உருக்கி நீலம், ரங்கூன் கமலம், முதலிய அழகிய ரத்தினக் கற்களையும் செயற்கையில் நம் தமிழ் நாட்டில் மலிவாகச் செய்கிறார்கள். அழகோடு நிலைத்த தன்மையும், கிடைத்தற் கருமையுமான முக்குணங்கள் வாய்த்த பொருள்கள் "அந்தஸ்து" கூடியவையாயிருக்கின்றன. "என்னைப்பார், என் அழகைப் பார்" என்று தளுக்கி மினுக்கும் அலுமினியத்தின் அந்தஸ்து, மலிவு காரணமாக இக்காலத்தில் தாழ்ந்துவிட்டது. களிமண்ணிலிருந்து இன்னும் மலிவாக அலுமினியத்தை எடுக்கும் வழி கண்டு பிடிக்கப்படலாம். ஆனால் அலுமினியத்தின் உபயோகங்கள் ஆயிரத்திற்கும் அதிகமானவை என்பதை உங்கள் சிந்தனைக்கே விட்டுவிடுகிறேன்.

திராவகங்களில் கரைவதோடல்லாமல், சுண்ணும்பு போன்ற காரப் பொருள்களாலும் அலுமினியம் அரிக்கப் படும்போது கிளம்பும் வாயுதான்—இதற்கு ஹைட்ரஜன் வாயு என்று பெயர்—நம் காதோடு ரகசியம் பேசி அலுமினியம் வாழ்ந்த வாழ்வை நமக்குப் புரியாத மொழியில் சொல்லிச் செல்கிறது.

"கடிதக் கருத்தரங்கு"

மனித சக்தியைப் பயன்படுத்தும் மகத்தான திட்டம்

ஆசிரியர் அவர்களுக்கு,

செங்கற்பட்டு மாவட்டத்தில் கடம்பத்தூர் வட்டாரத்தில், மப்பேடு வட்டத்திலே உள்ளது "உளுந்தை" என்ற ஊர்.

உளுந்தையின்கண் 1950-ஆம் ஆண்டு கூட்டுறவு நாணயச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் தலைவர் உயர்திரு கே. நரசிம்மலு நாயுடு அவர்கள் ஆவர். மற்றும் அவ்வாண்டிலேயே கூட்டுறவு பால் வழங்கு சங்கம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டது. இதன் தலைவர் உயர்திரு. பி. லோகய்ய நாயுடு அவர்கள் ஆவர்.

அன்று முதல் இன்று வரை இவ்விரு சங்கங்களும் சீரிய பணியாற்றி வருகின்றன.

இவ்வூர் பொதுமக்களின் உதவியாலும், அரசாங்கத்தின் உதவியாலும் 1953-ஆம் ஆண்டு வாசகசாலைக் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது. அவ்வாண்டிலேயே கட்டிடத்தில் சேவாசங்கம்ஒன்று துவங்கப்பட்டது. இச்சங்கமும் இன்று வரை சிறந்த முறையில் நடந்து வருகிறது. 1955-ஆம் ஆண்டு அஞ்சல் நிலையம் ஒன்றும் திறந்து வைக்கப்பட்டு சிறந்த முறையில் இயங்கி வருகிறது. மற்றும் இவ்வாண்டில் பிரசவ விடுதியும் ஆரம்பிக்கப்பட்டு நல்ல முறையில் நடந்து வருகிறது. 1955-ஆம் ஆண்டில்தான் இவ்வூரில் ஊராட்சி மன்றம் ஆரம்பிக்கப்பட்டது.

1956-ஆம் ஆண்டு, சுமார் ஒரு மைல் நீளத்திற்குச் செம்மையான சாலை அமைக்கப்பட்டது. 1958-ஆம் ஆண்டு இவ்வூருக்கு மின்விளக்குகள் அமைக்கப்பட்டன. தெருக்களிலும் ஊராண்மைக்கழகத்தினரால் மின் விளக்குகள் பொருத்தப்பட்டு தினமும் எரிக்கப்பட்டு வருகின்றன.

1960-ஆம் ஆண்டு ஊராண்மைக் கழகத்தின் உதவியினால் வானொலி வாங்கப்பட்டது. வாசகசாலைக் கட்டிடத்திலேயே வானொலிப்பெட்டி அமைக்கப்பட்டுள்ளது.

'மன மகிழ் மன்ற' அங்கத்தினர்கள் உதவியால் வாசக சாலையின் சுற்றிலும் வண்ணமிகு மலர்கள் நிறைந்த வனப்பு மிகு பசுமரங்கள் கொண்ட "சிவலிங்கம் பூங்கா"வை அமைத்தனர். பேரம்பாக்கம் மருத்துவ நிலையத்தின் கிளை மருந்துவ நிலையமாக அமைத்து, ஒரு வாரத்திற்கு இரு முறை நகரும் மருத்துவ வண்டி வந்து சிகிச்சைகள் செய்யப்படுகின்றது.

1961-ஆம் ஆண்டு, "மனித சக்தியைப் பயன் படுத்தும்" திட்டத்தின் கீழ் பள்ளிக்குத் தேவையான துணைக்கட்டிடம் கட்டப்பட்டு முதல் அமைச்சர் திரு கே. காமராஜ் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. 1960-ஆம் ஆண்டு, உயர் ஆதாரப் பள்ளியாக மாற்றப்பட்டது. ஊராண்மைக்கழகத்தின் உதவியால் குடி தண்ணீர் வசதிக்கான கிணறுகளை பழுது பார்க்கப்பட்டு, குடி தண்ணீருக்கு உபயோகிக்க வசதி செய்து கொடுக்கப்பட்டது. மற்றும் மேற்கு ஹரிஜன காலனி, உப்பரபாளையம், இவைகளுக்குச் சாலைகள் அமைக்கப்பட்டன. அரசாங்க உதவியைக் கொண்டு ஒரு கிணறு புதிதாகக் கட்டி முடிக்கப்பட்டது. கிழக்கு ஹரிஜனக் காலனிக்கு சாலை போடும் வேலை துவங்கி நடை பெற்று வருகிறது. பாதுகாப்புக் குழாய்க் கிணறு திட்டம் ஏற்று நடத்த உத்தரவாகியுள்ளது.

உயர்தர ஆதாரப்பள்ளியின் தோட்டம் சுமார் 0.33 செண்ட் பரப்பளவு உள்ளதாக அமைக்கப்பட்டுள்ளது. அதன் கண் இவ்வாண்டு வெண்டை, கத்திரி, கீரைத்தண்டு, பூசணி, சுரைக்காய், முள்ளங்கி முதலிய காய்கறிகள் பயிரிடப்பட்டு, இவற்றின் மூலம் ஆசிரியர்களின் பெரு முயற்சியால் பள்ளியின் வளர்ச்சிக்கான பணம் சேகரிக்க படுகிறது. இவ்வாறு உளுந்தை கிராமம் ஒவ்வொரு துறையிலும் உயர்ந்து கொண்டே வருகிறது.

அன்புள்ள,

கே. நரசிம்மலு நாயுடு,

தலைவர், சமூக சேவா சங்கம்,

உளுந்தை, செங்கற்பட்டு மாவட்டம்.



புதிய பஞ்சாயத்து ஆட்சியில், கிராமங்களில் உள்ள மாதர்—குழந்தைகள் நல்வாழ்வுக்கான திட்டங்களை உருவாக்க வழி அமைந்துள்ளது. இந்தத் திட்டங்களை நிறைவேற்ற, கிராமங்களில் மாதர் சங்கங்கள் ஆரம்பமாகி சேவை புரிய முன்வரவேண்டும்.



நம்முடைய கிராமப்புறங்களில், கிராம மக்கள் கூடி, பிரச்சினைகளை விவாதித்து முடிவு காண்பது என்பது, பண்டைக்காலத்திலிருந்தே பழக்கத்தில் இருந்து வருகிறது. கட்டுப்பாட்டுணர்வும், ஒற்றுமையும் ஓங்கி வளர பஞ்சாயத்து அமைப்பு முறை உறுதுணையாக அமைந்துள்ளது.





தமிழ்நாடு அரசாங்கம்

திரு விஷ்ணுராம்மேதி—கவர்னர்

அமைச்சரவை

திரு கே. காமராஜ்—முதல் அமைச்சர்

1. திரு பக்தவத்ஸலம்
2. திரு ஆர். வெங்கட்ராமன்
3. திரு பி. கக்கன்
4. திரு வி. ராமையா
5. திருமதி ஜோதி வெங்கடாசலம்
6. திரு என். நல்ல சேனாபதி சர்க்கரை மன்றாடியார்
7. திரு ஜி. பூவராகவன்
8. திரு எஸ். எம். அப்துல் மஜீது

சமுதாயத்தில் மிக முக்கியப் பகுதியினரான தாய்மார்கள், மாதர் சங்கங்களை நிறுவி, கிராம நல்வாழ்வுக்கான சமூகக் கல்வியைப் பரப்பவும், கைத்தொழில் பயிற்சி அளிக்கவும், பொது அறிவை வளர்க்கவும் தக்க வகையில் திட்டமிட்டு உழைத்தால்தான் புதிய பஞ்சாயத்து ஆட்சியின் எதிர்காலம் ஒளிபெற்று விளங்கும்.



"பகடு நடந்த கூழ் பல்லோரோடும் உண்க" என்று தமிழ் இலக்கியம் அறிவுரை வழங்குகிறது. ஓங்கு புகழ்த் தமிழகத்தில் உழவுத் தொழிலின் முன்னேற்றம், புதிய பஞ்சாயத்து ஆட்சியின் பொறுப்பில் விடப்பட்டுள்ளது. ஒவ்வொரு கிராமமும் "கிராம உணவு உற்பத்தித் திட்டம்" ஒன்றை உருவாக்கி நடத்தவேண்டும்.

கிராம நலம்-
பகுதி-2. பஞ்சாயத்து-அரசினர் இதழ்

GRAMA NALAM
PART II PANCHAYAT GAZETTE

விரிவு படுத்தப்பட்ட ஊட்டமளிக்கும் உணவுத் திட்டம்.

(Nutrition—Expanded Nutrition Programme—Approved—Orders issued)

(G. O. Ms. No. 328, R. D. and L.A, dated 10th February 1962)

இந்த மாநிலத்தில், தேர்ந்தெடுக்கப்பட்ட சில வட்டாரங்களில், ஒரு விரிவான ஊட்டமளிக்கும் ஊஉணவுத்திட்டத்தை, ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதி (UNICEF) உதவியுடன், நிறைவேற்றுவதுபற்றி அரசாங்கம் பரிசீலித்து வந்திருக்கிறது. இந்தத் திட்டம், கிராம மக்களை சத்துள்ள உணவைத் தயாரித்துப் பயன் படுத்தும் வகையில் ஊக்குவித்துச் செய்துகாட்டுவதன் மூலம், இது விஷயத்தில் தமக்குத் தாமே உதவியாய் இருக்கச் செய்யவேண்டும் என்ற நோக்கத்துடன் அமைந்ததாகும். அதன்படி, இந்த மாநிலத்தில் விரிவான ஒரு ஊட்ட உணவுத் திட்டத்தை நடத்த ஒரு நடைமுறை-வேலைத் திட்டத்தை வகுத்துள்ளது. ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதிச்சபை (UNICEF) அனுப்பிவைத்த வேலைத் திட்டம் சம்பந்தப்பட்ட இலாகாத் தலைமை அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து, பிறகு முடிவு செய்யப்பட்டது. அவ்வாறு முடிவு செய்யப்பட்ட வேலைத் திட்டம் இந்த ஆணையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

2. கிருஷ்ணகிரி, பவானிசாகர், எஸ். வி. நகரம், தே. கல்லுப்பட்டி, ஆடுதுறை, கோயில்பட்டி, பட்டுக்கோட்டை ஆகிய எழு கிராமிய வளர்ச்சிப் பயிற்சி நிலையங்களிலும், எஸ்.வி. நகரம், கல்லுப்பட்டி, பவானிசாகர் ஆகியவற்றுடன் இணைக்கப்பட்ட மூன்று இல்லக்கலைப்பகுதிகளிலும், கிருஷ்ணகிரி, பவானிசாகர், ஆரணி, கல்லுப்பட்டி, திருவிடமருதூர், பட்டுக்கோட்டை, கோயில்பட்டி ஆகிய பயிற்சி நிலையங்களுடன் இணைக்கப்பட்டுள்ள எழு வட்டாரங்களிலும் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட அரசாங்கம் ஆணையிடுகிறது.

3. இந்தத் திட்ட நிறைவேற்றத்திற்கும், பல்வேறு வேலைகளின் இணைப்புக்கும் கிராம அபிவிருத்திக் கமிஷனர் (Additional Development Commissioner) பொறுப்பாளராவார் என்றும் அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது. இது விஷயத்தில் அவருக்குத் துணையாக, துணை அபிவிருத்திக் கமிஷனரும் (பயிற்சி) (Assistant Development Commissioner-Training), மாதர் நலத்துறை இயக்குநரும் பணியாற்றுவர். திட்ட நிறைவேற்றத்துக்கு மாநில நிலையில், ஆலோசனைகள் கூற கீழ்க்கண்ட உறுப்பினர்களுடன் கூடிய ஒரு செயற்குழு அமைக்க, அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது :

தலைவர்—

கிராம அபிவிருத்திக் கமிஷனர்.

உறுப்பினர்கள்—

1. கல்வி, பொது சுகாதாரத்துறை செயலாளர்.
2. விவசாயத்துறை இயக்குநர்.
3. கால்நடைப் பாதுகாப்புத்துறை இயக்குநர்.
4. மீனளத்துறை இயக்குநர்.
5. கல்வித்துறை இயக்குநர்.
6. பொது சுகாதாரத்துறை இயக்குநர்.
7. மாதர் நலத்துறை இயக்குநர்.
8. நிதித்துறை உதவிச் செயலாளர் (Under Secretary).
9. துணை அபிவிருத்திக் கமிஷனர் (பயிற்சி).

கிராம நல, தல நிர்வாகத்துறைத் துணைச் செயலாளர் (வேலைமுறை) குழுவின் செயலாளராகவும், ஓர் உறுப்பினராகவும் விளங்குவார்.

4. வேலையின் முன்னேற்றத்தை மதிப்பிட்டுப் பார்க்க, இந்தக் குழு மாதம் ஒரு முறை கூடும். வேலையின் முன்னேற்றத்தை மதிப்பிடத் தேவையென்று கருதப்படும் சுற்றுப் பயணங்களை இக்குழு மேற்கொள்ளலாம். இக்குழுவின் தலைமை அலுவலகம் சென்னையாகும்.

5. கிராம நிலையில் திட்டத்தை நடத்தும் பொறுப்பு பஞ்சாயத்தைச் சாரும். வட்டார நிலையில் திட்டத்தை நடத்தும் பொறுப்பு பஞ்சாயத்து யூனியனுடையதாகும். பஞ்சாயத்து யூனியன், திட்டப் பணியாளர்கள், பயிற்சி நிலையங்கள் ஆகியோரிடையே ஒரு தொடர்பை ஏற்படுத்த, வட்டாரநிலையில் கீழ்க்கண்டவர்கள் அடங்கிய ஒரு இணைப்புக் குழுவை ஏற்படுத்த அரசாங்கம் ஆணையிடுகிறது :

1. பஞ்சாயத்து யூனியன் தலைவர்.
2. பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்.
3. சம்பந்தப்பட்ட கிராமிய வளர்ச்சிப் பயிற்சி நிலையத் தலைவர்.

திட்டத்தின் அபிவிருத்திக் கொப்ப, வட்டாரத்துக்குள் உள்ள ஒரு பஞ்சாயத்து உறுப்பினரையோ, வட்டாரப் பணியாளர் ஒருவரையோ, அல்லது பயிற்சி நிலையப் பணியாளரையோ நியமன உறுப்பினராக குழுவில் சேர்த்துக் கொள்ள இணைப்புக் குழுவுக்கு உரிமை உண்டு.

6. செயற்குழு உறுப்பினர்களின் தினப்படி, பயணப் படிச் செலவுகள், அதிகாரிகளின் சம்பளம்—படிச்செலவுகள் பற்று வைக்கப்படும் கணக்குத் தலைப்பிலேயே பற்று வைக்கப்படவேண்டும்.

7. திட்டத்தின் பல்வேறு வகை வேலைகளுக்கான செலவுகளை அங்கீகரித்தும், திட்டத்தின் கீழ் அமர்த்தப் படவேண்டிய பணியாளர் குறித்தும் ஆணைகள் தனியே பிறப்பிக்கப்படும்.

--o--

இணைப்பு I

தமிழ் நாட்டில் நடைமுறை ஊட்ட உணவு—விவசாய வளர்ச்சிப் பயிற்சித் திட்ட வேலை முறை

இந்திய அரசாங்கம் (இதன் பின்னர் 'மத்திய அரசாங்கம்' என்று குறிக்கப்படும்), ஐக்கிய நாடுகள் சபையின் உணவு-விவசாய அமைப்பு (இதன் பின்னர் 'FAO' என்று குறிக்கப்படும்), உலக சுகாதார அமைப்பு (இதன் பின்னர் 'WHO' என்று குறிக்கப்படும்), ஐக்கியநாடுகள் குழந்தைகள் நிதி (இதன் பின்னர் 'UNICEF' என்று குறிக்கப்படும்.) இவை தமிழ்நாட்டில் விரிவான ஒரு ஊட்ட உணவுத்திட்ட சம்பந்தமாக ஒரு பரஸ்பர உடன்படிக்கை செய்து கொள்ள விழைந்துள்ளன. இந்த உடன்படிக்கை சிறப்பாக, திட்டத்தின் நோக்கம், பொறுப்புக்கள் ஆகியவைகளில் ஒவ்வொரு தரப்பினரும் உறுதி கூறுவதாய் அமைந்தது. இந்தப் பொறுப்புக்கள், நட்பு, ஒத்துழைப்பு ஆகிய பண்புகளுடன் நிறைவேற்றப்படும்.

கீழ்க்கண்டவாறு ஒப்பந்தம் செய்துகொள்ளப்படுகின்றன.

பகுதி I

உறவின் அடிப்படை

மத்திய அரசாங்கத்துக்கும், 'WHO' என்ற ஸ்தாபனத்துக்கும், முடிவாக 1952-ம் ஆண்டு ஜுலை மாதம் 16-ம் தேதியில் ஏற்பட்டுள்ள அடிப்படை ஒப்பந்தமும், மத்திய அரசாங்கத்துக்கும், 'UNICEF' ஸ்தாபனத்துக்கும் 1949-ம் ஆண்டு மே மாதம் 10-ம் தேதியில் முடிவாக ஏற்பட்டுள்ள அடிப்படை ஒப்பந்தமும், மத்திய அரசாங்கத்துக்கும், ஐக்கிய நாடுகள் தொழில் நுட்ப உதவி போர்டுக்கும் 1956-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 31-ம் தேதியில் முடிவாக ஏற்பட்டுள்ள அடிப்படை ஒப்பந்தமும், இந்தத் திட்டத்தில் 'FAO', 'WHO' ஆகிய அமைப்புகளைப் பொருத்தவரை மத்திய அரசாங்கத்துக்கும் ஒத்துழைக்கும் நிறுவனங்களுக்கும் உறவு ஏற்பட அடிப்படையாக அமைவதுடன் இந்த வேலைமுறைப் பகுதிகள் (Articles of this plan of operations) முறையே அந்தந்த ஒப்பந்தங்களின்படி பொருள் விளக்கப்படும்.

பகுதி II

குறிக்கோள்கள்

இத்திட்டத்தின் குறிக்கோள்கள் வருமாறு :

1. பொது

(a) இப்பொழுது இருக்கும் பயிற்சி நிலையங்களில், மக்கள் ஊட்ட உணவுத்திட்டத்தில் கிராம நிலை ஊழியர்களுக்கு தேவையான அபிவிருத்தி செய்வதன் மூலம் அவர்களுடைய பயிற்சியை தரம் உயர்த்துதலும், விரிவுபடுத்துதலுமாகும். பயிற்சி நிலையங்களுடன் இணைக்கப்பட்டுள்ள வட்டாரங்களில், பட்டதாரிகளுக்கு புதுப்பிக்கும் பயிற்சிகளும், பயிற்சியாளர்க்கு அனுபவத்தையும் அளிக்கும் நோக்கத்துடன், தனியாக ஒரு ஊட்ட உணவுத் திட்டத்தை நடத்துதல்.

(b) சத்துள்ள உணவுகளைத் தயாரிப்பதிலும், உபயோகிப்பதிலும் உறுதியான பழக்கங்களை கிராம சமுதாயம் மேற்கொள்ளத் தூண்டுவதும் செய்து காட்டுவதுமாகும். இதனை ஊட்ட உணவுக் கல்வித் திட்டத்தின் மூலம் அவர்களைத் தூண்டி இது விஷயத்தில், அவர்கள் தமக்குத் தாமே உதவி செய்துகொள்ளும் வகையில் பயிற்சி அளித்தல்.

2. சிறப்பு

(a) மாநிலத்தில், மூன்று இல்லக் கலைப் பகுதிகளிலும், ஏழு கிராமிய பயிற்சி நிலையங்களிலும் தேவையான அளவு, பயிற்சி பெற்ற பணியாளர்களை அமர்த்துவதிலும், கல்வி வசதிகளை மிகுதிப்படுத்துவதிலும் உதவி செய்வது.

(b) பயிற்சி நிலையங்களுடன் இணைக்கப்பட்டுள்ள வட்டாரங்களில், இந்தத் திட்டத்திற்காக நேரடிப் பயிற்சியை அபிவிருத்தி செய்தல்.

(c) கிராமத் தலைவர்களுக்குக் கல்வி பயிற்சித் திட்டத்தை ஏற்படுத்துகதல், கல்விப் பொருள்களை உற்பத்தி செய்தல் முதலியன.

(d) பொதுவாக வட்டார மக்களும், குறிப்பாக ஆரம்ப நிலை உற்பத்தியாளர்களைக் கீழ்க்கண்ட அம்சங்கள் அடங்கிய ஒரு திட்டத்தில் செயல்படச் செய்தல் :—

(i) முட்டைகள், கோழிகள், மீன், பருப்புவகைகள் பழங்கள், காய்கறிகள் முதலான ஊட்டமளிக்கு சத்துணவுகளின் உற்பத்தியைப் பெருக்குதல்.

(ii) பால் வழங்குதலைப் பெருக்க, கால்நடைத் தீவன உற்பத்திப் பெருக்கம் நவீன கால்நடைப் பாதுகாப்பு முறைகளைக் கைக்கொள்ளுதல் முதலியன.

(iii) சாதாரண உணவுமுறையில் அதிக சத்துள்ள உணவுகளைச் சேர்த்துக்கொள்ளும் பழக்கம் முதலானவை அடங்கிய ஒரு கல்வித் திட்டத்தைக் கொண்டு சமுதாயத்தில் ஊட்ட உணவு நிலையை உயர்த்துதல்.

(iv) கருத்தரித்துள்ள—பேறுகால தாய்மார்கள், பள்ளி செல்லும் பருவத்துக்கு முன் நிலையில் உள்ள குழந்தைகள் ஆகியோருக்கு, உற்பத்தி செய்யப்படும் சத்துள்ள உணவுகளின் ஒரு பகுதியை வழங்கும் திட்டங்களை வகுத்துச் செயலாற்றுதல்.

(v) இந்தத் திட்டத்தை நிறைவேற்றி—நடத்திவரத் தேவையான அலுவலாளருக்குப் பயிற்சியையும், செயல் முறைகளையும் அளித்தல்.

பகுதி III

செயல் திட்டம்

பகுதி 2-ல் கூறப்பட்டுள்ள குறிக்கோள்களை அடைய, மத்திய அரசாங்கம், தமிழ்நாடு அரசாங்கத்தின் மூலம் (இதன் பின்னர் மாநில அரசாங்கம் என்று குறிக்கப்படும்) கீழ்க்கண்ட செயல் திட்டத்தை வைத்திருக்கிறது:

A. திட்டம் செயல்படும் பிரதேசங்கள்

1. கிருஷ்ணகிரி, பவானி சாகர், எஸ். வி. நகரம், தே. கல்லுப்பட்டி, ஆடுதுறை, பட்டுக்கோட்டை, கோயில் பட்டி ஆகியவற்றின் ஏழு கிராமிய வளர்ச்சிப் பயிற்சி நிலையங்களிலும், எஸ். வி. நகரம், கல்லுப்பட்டி, பவானி சாகர் ஆகியவற்றுடன் இணைக்கப்பட்டுள்ள இல்லக் கலைப் பகுதிகளிலும், கிருஷ்ணகிரி, பவானிசாகர், ஆரணி, கல்லுப்பட்டி, திருவிடமருதூர், பட்டுக்கோட்டை, கோயில்பட்டி ஆகிய பயிற்சி நிலையங்களுடன் இணைக்கப்பட்டுள்ளதும், அப்பயிற்சி நிலையங்கள் அமைந்துள்ளதுமான வட்டாரங்களிலும் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும். பயிற்சி நிலையங்கள் 77 பணியாளர்களையும், 750 மாணவர்களையும் இல்லக் கலைப் பகுதிகள் 12 பணியாளர்களையும், 120 மாணவர்களையும் கொண்டு விளங்கும். மாணவர்கள் இரண்டாண்டுப் படிப்பும், மாணவிகள் ஓராண்டுப் படிப்பும் பெறுவர். வட்டாரங்கள் மொத்தம் 380 ரெவின்யூக் கிராமங்களையும், 5,76,000 ஜனத்தொகையையும் கொண்டுள்ளன. ஒவ்வொரு வட்டாரத்திலும், பஞ்சாயத்து யூனியன் தலைவரும், குழுக்களும், ஒரு வட்டார அபிவிருத்தி அதிகாரியும் ('இப்பொழுது பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் என்று குறிக்கப்பட்டிருக்கிறார்') அவருக்கு உதவியாக ஏழு சிறப்புப் பணியாளரும் உள்ளனர். மேலும், ஒவ்வொரு வட்டாரத்திலும் 12 கிராம நிலை ஊழியர்கள் (10 ஆண்கள் ; 2 பெண்கள்) உள்ளனர்.

B. ஊட்ட உணவுத் திட்ட அதிகாரி

1. இந்தத் திட்டத்திற்கு முழு நேரப் பணியாற்ற ஒரு ஊட்ட உணவுத் திட்ட அதிகாரியை அரசாங்கம் நியமிக்கும். வேதயைானல் அவருக்கு, கல்கத்தாவில் ஆறு மாதப் பயிற்சியேனும் அல்லது அதற்கீடான பயிற்சியாகிலும் அளிக்க, UNICEF ஸ்தாபனம் ஒரு படிப்பு உதவி நிதி ஏற்படுத்தும். திட்டத்தின் எல்லாப் பகுதி வேலைகளையும் ஒருங்கிணைத்து மேற்பார்வையிடுவது அவருடைய வேலையாகும். குறிப்பாக, இத்திட்டம், செயல்படும் பகுதிகளில் ஊட்ட உணவுப் பயிற்சியும், உணவு வழங்குதல்—திட்டங்கள் அபிவிருத்தி அடையுமாறு பார்த்துக் கொள்ளுவது அவருடைய வேலை.

C. பயிற்சி நிலையங்கள்

1. ஆண் ஊழியருக்கான நிலையங்களில், இப்பொழுது கருத்துறைக்காக ஒதுக்கப்பட்டுள்ள 10 மணி நேரத்துக்கு பதில் 30 மணி நேரமும், மக்கள் ஊட்ட உணவுச் செய்தி முறை வேலைகளுக்கு 30 மணி நேரமும் ஒதுக்கப்படும். ஒவ்வொரு பயிற்சி நிலையத்திலுமுள்ள பொது சுகாதார ஆசிரியர்—ஊட்ட உணவுத் திட்ட அதிகாரிக்குச் சமமான ஊட்ட உணவுக் கல்வியில்லாதவராக இருந்தால், UNICEF ஸ்தாபனம் அளிக்கும் படிப்பு உதவிப் பணம் அவருக்கும் அளிக்கப்படும்.

2. மற்றவற்றுடன், கால்நடைத் தீவனம், பருப்பு வகைகள், வேர்க்கடலை, மாற்றுப் பயிர் முதலானவற்றில் பயிற்சி அளிக்க, இப்பொழுதைய பயிர்ப் பாதுகாப்பு முறையில், (கருத்துறை 200 ; செய்முறை 150) வகை செய்யப்பட்டுள்ளது. காய்கெறி, பழங்கள்,—இத்துடன் தொடர்பு கொண்ட எல்லா செய்முறைகளும், தோட்டக் கலையும், செடிப் பாதுகாப்பும், (கருத்துறை 200 ; செய்முறை 200) என்பதில் அடங்கும். கால்நடைப் பாதுகாப்புப் பயிற்சி, கால்நடைகளின் பொது நிர்வாகத்தில் 47 மணி—தீனி வைத்தல்— 14 மணி—பால், தயிர், வெண்ணெய் முதலியன பற்றிய வேலைகளால் 29 மணி கோழிப் பண்ணை 14 மணி—மீன் வளர்ப்பு 9 மணி— என்று கருத்துறை நேரமும் ஏறக்குறைய அதே அளவு நேரங்களுக்குச் செய் முறைப் பயிற்சியும்—நடத்த ஏற்பாடுள்ளது. இந்தப் பயிற்சிகளில் எல்லாப் பகுதியை விரிவாக மேற்கொள்ள வேண்டும் என்கின்ற விஷயத்தைப் பயிற்சி நிலையத்தில் உள்ள அதிகாரிகள் முடிவு செய்வர் ; இந்த முடிவு, அவர்கள் பணியாற்றும் அந்தப் பிரதேசத்தின் தேவையின் அடிப்படையில் அமையும்.

ஊட்ட உணவுத் திட்ட அதிகாரியுடன் கலந்தாலோசித்து, எந்த வகைச் செடிகளை, பயிரைப் பயிரிடலாம்—மக்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் ஊட்டம் கிடைக்க எந்தச் செய்முறைகள் பின்பற்றப்பட்டால் நல்ல பலன் அளிக்கும் என்கின்ற விஷயங்களை எல்லாம், பயிற்சி நிலையங்கள் முடிவு செய்யும்.

3. வட்டாரத்தின் 40முதல் 80 கிராமங்களில், அருகிலுள்ள 8 அல்லது 9 கிராமங்களில் மட்டுமே இப்போது பொதுவாக மாணவர்களின் செய்முறைப்பயிற்சி நடைபெறுகிறது. அவர்களின் பயிற்சிக் காலத்தின் முதற்பகுதியில், இந்த கிராமங்களுக்கு, வாரத்துக்கு ஒரு முறையும், அதன் இரண்டு முறையும் மட்டுமே செல்கின்றனர். அவர்கள் அதிக முறைகள் செல்லாததற்கு போக்கு வரவு வசதி யற்று இருப்பது ஒரு முக்கிய காரணமாகும். UNICEF ஸ்தாபனம் ஒவ்வொரு பயிற்சி நிலையத்துக்கும் ஒரு பணியாளர் வண்டி (வான்) வீதம் அளித்து போக்கு வரத்துக்கு வசதி செய்யும். இதுவும் விரிவான ஊட்ட உணவுத் திட்டத்திற்காக வட்டாரத்திற்கு அளிக்கப்படும் உதவியாகவும், பங்காகவும் கருதப்படும். மாணவர்களும், ஆசிரிகளும், அந்தந்த வட்டாரத்தில், விரிவான ஊட்ட உணவுத் திட்டத்தின் பல்வேறு அம்சங்களிலும் பங்கு பெற ஊர்களுக்குச் சென்று அவர்களுடைய செய்முறை வேலையைக் கவனித்துத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்த உதவ முடியும். இது பஞ்சாயத்து—வட்டாரத் திட்டங்களுடன் ஒருங்கிணைந்து செல்ல வேண்டியது மிகவும் அவசியமாகும்.

4. UNICEF ஸ்தாபனம், ஒவ்வொரு நிலையத்துக்கும், ஒரு வாகனம் அளிப்பதுடன், சினிமாப் படங்கள், (Films) உற்பத்தி, கல்வி—ஆகியவற்றுக்கான கருவிகள் முதலான கல்வி சம்பந்தமான பொருள்களையும் உதவும். அத்துடன் திட்டம் வளர, வளர தேவையான சிறு பொருள்களையும், வரவு செலவுத் திட்டத்தில் இந்த வகைக்கு ஒதுக்கப்பட்ட தொகைக்கு மேற்படாத வகையில், வழங்கும்.

D. வட்டாரத் திட்டங்கள்

1. இந்தத் திட்டம் வட்டாரத்தின் ஒவ்வொரு கிராமத்திலும் செயல்படுத்தப்படும். சூழ்நிலைகளையும் வருவாய்களையும் பொறுத்து இந்தத் திட்டம் எந்த அளவு முடியுமோ அந்த அளவுக்கு முழுமையாக முடிக்கப்படும். சில கிராமங்களில் மீன் வளரும் குளங்கள் இரா; சில கிராமங்களில் மிகுதியான இடம் இல்லாமல் இருக்கலாம். ஆனால், ஒவ்வொரு இடத்திலும், கிடைக்கின்ற விளைவை வைத்துக்கொண்டு சீரான(ஈடான) உணவு, அபிவிருத்தி செய்யப்படும்; உதாரணமாகக் கால்நடைகளின் புரத சத்துக்காக, பருப்பு வகைகள், வேர்க்கடலை முதலானவைகளைக் கொண்டு ஈடு செய்யப்படலாம். அதாவது, எந்தச் சூழலிலும் பின்பற்றத் தக்க சீரான உணவு முறைகளை வகுக்க வேண்டியது அவசியமாகும்.

E. ஒருங்கிணைத்தல்

பஞ்சாயத்து யூனியன், வட்டாரம், பயிற்சி நிலையம் ஆகியவற்றிடையே ஒரு தொடர்பு இருக்க வேண்டியது மிகவும் அவசியம். இதற்காக, பஞ்சாயத்து யூனியன் தலைவர், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் (வட்டார அபிவிருத்தி அதிகாரி) பயிற்சிப் பள்ளித் தலைவர் ஆகியோர் அடங்கிய ஒரு குழு அமைக்கப்படும். திட்டத்தின் தேவையை ஒட்டி, பஞ்சாயத்துக் குழுக்களின் பிற உறுப்பினர்கள், வட்டார அபிவிருத்தி அலுவலகப் பணியாளர்கள், பயிற்சிப் பள்ளி பணியாளர்கள் ஆகியோரிடமிருந்து உறுப்பினர்களை நியமன உறுப்பினராகக் குழுவில் சேர்த்துக் கொள்ளலாம்.

கிராமங்களில் திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பு பஞ்சாயத்து யூனியனுடையது. அது, அதனுடைய குழுக்கள் (விவசாயம், கல்வி, மாதர் நலம்), கிராமப் பஞ்சாயத்து, மாதர், இளைஞர் சங்கங்கள், கோழி வளர்த்தல், தோட்டம் போடுதல், மீன் வளர்த்தல், ஆகிய விஷயங்களில் பயிற்சி பெற்றுள்ள பல்வேறு கிராம மக்கள் ஆகியோரைக் கொண்டு இந்தத் திட்ட நிறைவேற்ற வேலையைச் செய்யும். அது, தொழில் நுட்ப ஆலோசனை, வழி காட்டுதல், மேற்பார்வை, விரிவுபடுத்தல் ஆகிய விஷயங்களில் கிராம நிலை ஊழியர்கள், வட்டாரத்தின் தொழில் நுட்பப் பணியாளர் ஆகியோரின் உதவியைப் பெறும். தொழில் நுட்ப விஷயங்களில் ஆலோசனையும், வளர்ச்சிப் பணிகளுக்கு உதவியும் பயிற்சி நிலையப் பணியாளர்கள், மாணவர்கள், ஆகியோரிடமிருந்தும் பஞ்சாயத்து யூனியன் பெறும். வேலைகளை வகுத்துக் கொடுத்தல், பொறுப்புக்களைப் பகிர்ந்தளித்தல் ஆகிய விளக்கங்களை ஒருங்கிணைப்புக் குழு வகுத்துக் கொடுக்கும்.

F. கோழி வளர்ப்பு

1. மாவட்டங்களுக்கு, கோழி வளர்ப்பு அபிவிருத்தி நிலையங்களாகப் பணியாற்ற, ஒவ்வொரு வட்டாரத்திலும் பெரிய, கோழி வளர்ப்பு அமைப்புக்கள் நிறுவப்படும். அவை, வட்டாரத் தலைநகரில், பயிற்சி நிலையங்களில் அல்லது ஒருங்கிணைப்புக் குழுவுடன் கலந்தாலோசித்து, அரசாங்கம் முடிவு செய்யும் வேறு எந்த இடத்திலேனும் அமைக்கப்படும். இந்த வட்டார அமைப்புக்களை எழுப்பவும், கோழிகளை வாங்கவும், அரசாங்கம் நிதி வசதி அளிக்கும். (UNICEF) ஸ்தாபனத்தின் கருவிகளான —பெரிய அடை காக்கும் பெட்டிகள் (Incubators) உணவுத் தீனியை அறைக்கும் இயந்திரம், கலவை தயாரிக்கும் இயந்திரம், குஞ்சு காப்புக் கருவி ஆகியவை இங்கே வைக்கப்படும்.

2. 2,000 ஜனத் தொகை அல்லது அதற்குக் குறைந்த ஜனத் தொகைக்கும் 60 பெட்டைக் கோழிகள் 6 சேவல்கள் என்ற அடிப்படையில், கிராம கோழி வளர்ப்பு நிலையங்கள் அமைக்கப்படும். வட்டார நிலையங்களின் மூலமோ அல்லது வேறு வகையாகவோ அரசாங்கம் இந்தக் கிராம நிலையங்களுக்குக் 18,000 கோழிகளையும், 18,000 சேவல்

களையும் வழங்கும். இந்த நிலையங்களுக்குக் கட்டப்படும் வீடுகள் ஆங்காங்கு கிடைக்கும் பொருள்களைக்கொண்டு எளிமையாகக் கட்டப்படுதல் வேண்டும். அதற்காகும் செலவில் 75 சத வீதம் மாநில அரசாங்கமும் 25 சத வீதம் பஞ்சாயத்தும் ஏற்கும்.

3. இந்தப் பறவைகளுக்கு ஒரு வருடத்திற்கு கலப் புணவை அரசாங்கம் இனமாக வழங்கும். தொடர்ந்து பஞ்சாயத்து இந்தத் திட்டத்திற்கான செலவை ஏற்கும்.

4. கிராம நிலை ஊழியர்களின் தலைமை நிலையத்தில் இருக்கும் இக்கோழி வளர்ப்பு நிலையங்களில், ஆரம்ப நிலையில் கிராம மக்களுக்கு வழங்குவதற்கு வசதியாக, 150 முட்டை அடை காப்புப் பெட்டிகள், குஞ்சு காப்புப் பெட்டிகள் வைக்கப்படும்.

5. கிராமத்தார் இருவர், அநேகமாக கிராம சகாயகர் கள், கிராம நிலையத்தில் உள்ள பறவைகளைக் கவனித்துக் கொள்ள, ஒவ்வொரு நிலையத்திலிருந்தும், இரண்டு வார பயிற்சி பெருவார்கள். முதல் வருஷத்துக்கு மாதம் ரூ. 15 வீதம் ஊதியம் அளிக்கப்படும். இவர்கள் மீன் வளர்ப்பு முதலானவைகளையும் மேற்கொள்ளலாம்.

6. ஒருங்கிணைப்புக் குழுவினால் நியமிக்கப்படும் தொழில் நுட்பப்பணியாளர்கள், பஞ்சாயத்துக்களுக்கும், கோழி வளர்ப்பவர்களுக்கும் பறவைகளின் பாதுகாப்பு, திறமை யான கண்காணிப்பு ஆகிய விஷயங்களில் தொழில் நுட்ப ஆலோசனையும், உதவியும் கூறுவதற்குப் பொறுப்பாளர் களாவார்கள்.

7. 2,000 அல்லது அதற்குக் குறைந்த ஜனத்தொகை உள்ள ஒவ்வொரு பிரதேசத்திலும் எல்லா கருத்தரித் துள்ள—பேறு காலத் தாய்மார்களுக்கும், பள்ளிப்பருவ முன்னிலையிலுள்ள குழந்தைகளுக்கும் (Pre-School Children) 5,000 முட்டைகளை இலவசமாக வழங்கு கின்ற பொறுப்பு பஞ்சாயத்தைச் சாரும். இந்த உத்தேசக் கணக்கு 6 மாத காலத்துக்கு ஒவ்வொரு வாரத்துக்கும் முதியோருக்கு ஒரு முட்டை, குழந்தைக்கு ½ முட்டை என்கின்ற வீதத்தின் அடிப்படையில் போடப் பட்டது. இதன்படி ஒவ்வோர் ஆண்டும் உணவளிக்கும் திட்டங்களின் கீழ் சுமார் 1,500,000 முட்டைகளை இலவச மாக வழங்க வகை செய்யப்படுகிறது.

G. மீன் வளர்ப்பு :

1. நீர் வற்றாத அல்லது பருவ காலங்களில் நிரம்புகிற எல்லா நீர் நிலைகளிலும் தேவையான அளவு நீர் தேக்கப்படும். பருவ காலத்தில் நீர் நிரம்பும் நீர் நிலை களுக்கு வேகமாக வளரும் மெல்லிய சிறு மீன் குஞ்சு வகைகளை மீனளத்துறை சிபார்சு செய்து வழங்கும். இந்த சிறு மீன் வகைகள் பஞ்சாயத்துக்களுக்கு மூன்று வருடத் திட்டத்திற்கு மீனளத்துறையினால் இலவசமாக வழங்கப்படும்.

2. UNICEF ஸ்தாபனம் வலை பின்னுவதற்கான நைலான் நூலை பஞ்சாயத்துக்கு இலவசமாக வழங் கும். வலை பின்னுகிற செலவு பஞ்சாயத்தைச் சேரும். மேலும் மீன் வளர்ப்புக்கான வேறு சில கருவிகளையும் பஞ்சாயத்துக்கு இந்த ஸ்தாபனம் வழங்கும்.

3. இதற்குப் பதிலாக 1,000 ஜனத் தொகையுடைய பகுதிக்கு ஓராண்டுக்கு 1,000 பவுண்டுகள். 50 கருத் தரித்த—பேறுகால தாய்மார்களுக்கும், 100 பள்ளிப் பருவ முன்னிலைக் குழந்தைகளுக்கும் வழங்கவேண்டும்

4. 2,000 ஜனத்தொகையுள்ள ஒவ்வொரு பகுதியிலும் 2 பேருக்கு மீன் வளர்ப்பில் குறுகிய கால பயிற்சி அளிக்க UNICEF ஸ்தாபனம் வகை செய்யும். இவர்கள் பஞ்சாயத்தினால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இவர்கள் நீர் நிலைகளின் பாதுகாப்புக்குப் பொறுப்பாவார் கள்.

H. பள்ளித் தோட்டங்கள், பழத்தோட்டங்கள் (Orchards), கால்நடைத் தீவனம், பருப்புவகை உற்பத்தி :

பள்ளித் தோட்டங்கள் :

1. பெரும்பான்மையான பள்ளிகளுக்கு நிலமில்லை. 2,000 ஜனத்தொகையுள்ள ஒரு பகுதியில் முடியுமானால் ஒரு பள்ளித் தோட்டத்திற்கு 1 ஏகர் பரப்பளவு பஞ்சா யத்து ஒதுக்கலாம். இந்த நிலங்களிலும் ஏற்கனவே நிலமுடைய பள்ளிகளிலும் தோட்டங்களை அமைக்கலாம். இந்தத் தோட்டங்களில் நல்ல சத்துள்ள காய்கறிகளையும், பழங்களையும் பயிரிடத் தொடங்கலாம். இந்த விஷயத் தில் திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பை, ஊட்ட உணவுத் திட்ட அதிகாரி, பள்ளிக்கூடங்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் வட்டாரத்தின் விவசாய வளர்ச்சி அதி காரியைச் சாரும்.

தோட்டக் கலை :

2. பள்ளித் தோட்டங்களுக்காகத் தேவையானால் பள்ளி ஆசிரியர்கள் தோட்டக் கலையில் ஒரு குறுகிய காலப் பயிற்சி பெறலாம். இத்தகைய பயிற்சிக்கு இளைஞர் சங்கத்திலிருந்து ஒரு தலைவரும் பெறத் தகுதியுடையவர்.

கால் நடைத் தீவனம், பருப்பு வகைகள் :

3. முடியுமான போதெல்லாம் கால் நடைத் தீவனம், பருப்பு வகை, காய்கறிகள் ஆகியவை பயிரிடுவதற்காக, குறைந்த அளவு 5 ஏகர் நிலத்தையாவது பஞ்சாயத்து ஒதுக்கலாம். எல்லா அரசாங்க நிலமும் இப்பொழுது பஞ்சாயத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. முடியுமானால் இந்த நிலத்திற்குப் பாசன வசதி செய்து கொள்ளலாம். UNICEF ஸ்தாபனம் பம்புகளையும், பைப்புகளையும் வழங்கும். மாநில அரசாங்கம் கிணறுகளை வெட்டி பம்பு களை அமைத்து அதற்கு அறைகளைக் கட்டிக்கொடுக்கும்.

4. இந்த நிலம் சத்துள்ள உணவுப் பயிர்களின் நல்ல மாற்று விளைச்சலைச் செய்து காட்டுவதற்கும், கிடைக்கின்ற செடிகள், விதைகள், புல் முதலியவற்றை சிறந்த முறை களில் பயிரிட்டுக் காட்டுவதற்கும் பயன் படுத்தப்படும். இது பற்றி விவசாய வளர்ச்சி அதிகாரி, ஊட்ட உணவு

அதிகாரி, கால் நடைப் பாதுகாப்புப் பணியாளர் ஆகியோரைக் கலந்தாலோசித்து பஞ்சாயத்து முடிவு செய்யும்.

5. கறவைப் பசுக்களில் நல்ல இனங்களைப் பெருக்க இந்தப் பகுதிகளில் கால் நடை பாதுகாப்புத் துறை அதனுடைய வளர்ச்சித் திட்டத்தைத் தீவிரமாகச் செயல் படுத்தும். இந்த வேலை நல்ல இனங்களைத் தேர்ந்தெடுத்து கூட்டுறவு மூலமாக கிராமத்தார்களுக்கு கிடைக்கச் செய்வதன் மூலம் நடத்தப்படும். பயிர் செய்யப்படும் கால் நடைத்தீவனம் கடைத்தெரு விலைக்கு விற்கப்படுவதுடன் கால்நடைத் தீவனத்தையும், பருப்பு வகைகளையும் தனிப்பட்டவர்களும் உற்பத்தி செய்ய பஞ்சாயத்து தூண்டும்.

6. மாநில அரசாங்கம் கிணறுகளை வெட்டவும் பம்புகளை இயக்கவும், தேர்ந்தெடுக்கப்பட்ட கால் நடை, விதைகள், செடிகள் முதலானவைகளை வழங்கவும் வகை செய்யும். பஞ்சாயத்து நிலத்தை ஒதுக்கி அதில் பயிர் செய்யும். UNICEF ஸ்தாபனம் கிணறுகளுக்குப் பம்புகளையும், பைப்புகளையும், செயற்கை உரங்களையும், பூச்சி மருந்துகளையும், தோட்டக் கருவிகளையும் கொடுக்கும். மேலும் இந்த ஸ்தாபனம் மேற்படித் திட்டத்திற்காக ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் பயிற்சி பெறும் இருவருக்காக பயிற்சி உதவிப் பணத்தையும் வழங்கும்.

பணியாளர்கள்

1. ஒருங்கிணைப்புக் குழு :—

இந்தத் திட்டம் திறம்பட செயல் படுவதற்காக தேவையான பணியாளர்களையும், அவர்களுடைய பணி நல்வகையில் பயன்படுவது குறித்தும் இந்தக் குழு ஆராயும்.

2. பணியாளர்களும், மாணவர்களும் :—

பயிற்சி நிலைய பணியாளர்களும், மாணவர்களும் இந்த திட்ட நிறைவேற்றத்திற்காக, மேலே பகுதி III-ல் சி-பிரிவில் பயிற்சி நிலையங்கள் என்ற தலைப்பின் கீழ் குறிப்பிட்டுள்ளபடி பணி புரிவார்கள்.

3. வட்டார வளர்ச்சி அதிகாரிகள் :— இந்த திட்ட சம்பந்தமான எல்லா வேலைகளிலும் ஒத்துழைப்பு, தொழில் நுட்ப யோசனை, உதவி ஆகியவைகளை அளிக்கின்ற பொறுப்பு வட்டார வளர்ச்சி அதிகாரிகளுடையதாகும். இது ஒவ்வொரு கிராமத்தோடும், அதனுடைய உற்பத்தியோடும், வாழ்வோடும் தொடர்பு கொண்ட பணியாதலால் இதுவே அவர்களுடைய முக்கிய நேரடிப்பணியாகும்.

4. பஞ்சாயத்து யூனியன் :—

இந்த திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பு பஞ்சாயத்து யூனியனுடையது. அதனுடைய—கல்வி, விவசாயம், மாதர் நல குழுக்கள் கிராமங்களில் இந்தத் திட்ட சம்பந்தமான வேலைகளை வகுப்பதிலும், நடத்துவதிலும் உதவி செய்யும்.

5. முதல் நிலை சுகாதார நிலையங்கள் :—

மிகத் தேவையான ஊட்ட உணவு பற்றுக்குறைகளை அறிந்து கூறுவதிலும், அவற்றை ஈடு செய்ய உணவு முறைகளில் ஆலோசனை கூறுவதையும், இந்தத் திட்ட நிலையத்தில் ஒருங்கிணைப்புக் குழு கேட்டுக்கொள்ளும் பல வேறு உதவிகளையும் இந்த நிலையங்கள் செய்யும்.

6. மாநில அரசாங்கம் :—

இந்தத் திட்டத்திற்காக மேலும் தனிப் பணியாளர்களை மாநில அரசாங்கம் அமைக்கும். ஒவ்வொரு கோழி வளர்ப்பு நிலையத்திற்கும் ஒரு துணை கால் நடை மருத்துவர் (Veterinary Assistant Surgeon), ஒரு சேமிப்பாளர் (Stock Man), ஒரு மேல் நிலை குமஸ்தா, ஆகியோரையும் இரண்டு ஆராய்ச்சித் துணைவர்கள், ஒரு மண் வகைப் பரிசோதகர், ஒரு நீர்த்துறை நிபுணர் (Hydrologist), 7 மீன்வள மேற்பார்வையாளர் ஆகியோரும் ஒரு ஊட்ட உணவுத் திட்ட அதிகாரி, 2 ஒலி-தோற்றக் கருவி இயக்குனர்கள், எல்லா வண்டிகளுக்கும் ட்ரைவர்கள் ஆகியோரும் இந்தத் திட்டத்திற்கென அரசாங்கத்தால் அமர்த்தப்படுவார்கள்.

7. அரசாங்கப் பணியாளர்கள் :—

வட்டாரங்களில் ஏற்கனவே கிராம நிலைப் பணியாளர்கள் (10 ஆண்கள், 2 பெண்கள்) உள்ளனர். சமூகக் கல்வி அமைப்பாளர் (ஆண்கள், பெண்கள்) இந்தத் திட்டத்தில் தனிக்கவனம் செலுத்துவார்.

8. UNICEF ஸ்தாபனத்தின் உதவியுடன் மாநில அரசாங்கம் ஒரு கோழி வளர்ப்பாளர், மீன் வளர்ப்பாளர் இருவர், தோட்டம் கால் நடைத்தீவனம் உற்பத்தித் துணைவர்கள் இருவர், பெண் ஊழியர்கள் இருவர், ஆகியோருக்குப் பயிற்சி அளிக்கும்.

9. கிராமத் தலைவர்கள்.—

இந்தத் திட்டத்தில் கிராமத் தலைவர்கள் இன்றியமையாத இடம் பெறுகின்றனர். கிராம நிலையில் இந்தத் திட்டம் செயல் படுத்தப் படுவதற்கு பஞ்சாயத்து அதனுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவின் ஆதரவைப் பெறும். மேலும் ஏற்கனவே இல்லாத இடங்களில் மாதர் குழுக்களை அமைக்க சிறப்பாக முயற்சி எடுத்துக்கொள்ளப் படும். ஒவ்வொரு கிராமத்திலும் இந்தக் குழுக்கள் அடிப்படையாக அமைந்தனவாகும். அத்துடன் கூடுமான வரை பரந்த அளவில் இளைஞர் சங்கங்களை அமைக்க சிறப்பாக முயற்சி எடுத்துக்கொள்ளப்படும். இந்த வேலையில் முன்னேற்றம் காண மேலும் பல சமூக அமைப்பாளர்கள் தேவைப்படுவார்கள். மாநில அரசாங்கம் அவசியத்தை ஒட்டி இந்தத் தேவையை ஈடு செய்யும்.

[கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1962-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண். 328-ன் சுருக்கம்.]

—0—

பஞ்சாயத்து அபிவிருத்தி—புறம்போக்கு நிலங்கள், மற்ற நிலங்களை ஒப்படைத்தல்—பஞ்சாயத்துத் தலைவர்களால் அடையாளம் காட்டப்படுதல்

Panchayat Development—Vesting/Entrustment of Porambokes and other Lands—Identification, Demarcation etc., by Panchayat Presidents—Detailed Instructions—Issued)

(G.O. Ms. No. 163, R.D. and L.A. dated 18-1-1962)

1960-ம் ஆண்டு எப்ரல் மாதம் 4-ம் தேதியிட்ட கிராம நல, தல நிர்வாகத் துறையின் அரசாங்க ஆணை எண் 608-ல், 1958-ம் ஆண்டு சென்னைப் பஞ்சாயத்துக்கள் சட்டத்தில் சொல்லியுள்ளபடி, சில குறிப்பிட்ட வகையான புறம்போக்கு நிலங்களை பஞ்சாயத்துக்கள் வசம் ஒப்படைத்ததை அரசாங்கம் உத்தரவுகள் பிறப்பித்துள்ளது. அதே ஆணையில், அப்படி ஒப்படைக்கப்படுகிற நிலங்கள் பற்றிய விவரங்கள் அடங்கிய பட்டியல் ஒன்றினை கர்ணம் தயாரித்து அதைப் பஞ்சாயத்து தலைவரிடம் கொடுக்க வேண்டுமென்றும் அரசாங்கம் உத்தரவிட்டது.

2. 1961-ம் ஆண்டு எப்ரல் மாதம் 4-ம் தேதியிட்ட கிராம நல-தல நிர்வாகத் துறையின் அரசாங்க ஆணை எண் 972-ல், மதிப்பீடு செய்யப்பட்ட தரிசு நிலங்கள், நத்தம் புறம்போக்காக உள்ள நிலங்களையும் சேர்த்து சில வகைப்பட்ட நிலங்கள் சபந்தமாக பஞ்சாயத்துக்களுக்கு உள்ள உரிமைகள் பற்றியும் உத்தரவுகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன.

3. அநேகமாக இந்த விஷயத்தில் கர்ணம் பஞ்சாயத்துத் தலைவரிடம் பஞ்சாயத்தினிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலங்களின் சர்வே எண்களைக் கொண்டுள்ள ஒரு பட்டியலைக் கொடுத்திருந்தும், சர்வே சம்பந்தமான எல்லா தஸ்தாவேஜுகளும் கர்ணத்தினிடமே இருப்பதினால், பஞ்சாயத்துத் தலைவரால் நிலங்களை அடையாளம் கண்டு கொள்ள முடியாமல் இருக்கிறது என்ற விஷயமானது அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த நிலங்களை பஞ்சாயத்துக்கள் சரியான முறையில் பயன்படுத்திக்கொள்வதில் எந்த விதமான சிரமமும் இருக்கக்கூடாது. பஞ்சாயத்தினிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலங்களை பஞ்சாயத்துத் தலைவர் சுலபமாக சிரமமின்றி அடையாளம் கண்டுகொண்டால்தான்இது முடியும். அப்படிப்பட்ட நிலையை உருவாக்குவது மிகவும் அவசியமாகிறது.

4. **ஆரம்ப வேலையாக, கர்ணமும் பஞ்சாயத்துத் தலைவரும் கூட்டாக ஒன்று சேர்ந்து கிராமம் பூராவுமாக சுற்றிப்பார்க்கவேண்டும். புறம்போக்கு நிலங்களின் வகைகள், பஞ்சாயத்தில் உள்ள மதிப்பீடு செய்யப்படாத தரிசு நிலங்கள் 1961ஆம் ஏப்ரல்மீ 4உயிட்ட அரசாங்க ஆணை எண். 972ன்படி பஞ்சாயத்துக்களிடம் ஒழுங்குபடுத்துவதற்காகவும், உபயோகப்படுத்துவதற்காகவும் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலங்கள் ஆகிய இவைகள் உட்பட பஞ்சாயத்துக்கு ஏதாவது அக்கரை உள்ள எல்லா நிலங்களையும் கர்ணம் பஞ்சாயத்துத் தலைவருக்கு அடையாளம் தெரியுமாறு காட்டவேண்டும்.**

5. ஒவ்வொரு வகையான நிலங்களையும் கர்ணம் பஞ்சாயத்துத் தலைவருக்கு சுத்தமாகவும் சரியாகவும் அடையாளம் காட்டவேண்டும். (அ) ஒப்படைக்கப்பட்டது (ஆ) கிராமத்தில் உள்ள மற்ற பொது நிலங்கள் இவற்றை கிராமப் படத்தின் பிரதி ஒன்றில் அவர் குறிப்பிட்டுக் காட்டவேண்டும். அதன் பிறகு, அரசாங்கம் பிறப்பித்துள்ள இவ்விரு ஆணையின் கீழ் வருகின்ற நிலங்கள் பற்றிய பட்டியல் ஒன்றினை கர்ணம் தயாரிக்கவேண்டும். பஞ்சாயத்துக்களிடம் முழுதும் ஒப்படைக்கப்பட்டவை, ஒழுங்குபடுத்துவதற்காக அவைகளிடம் ஒப்படைக்கப் பட்டவை என்றுள்ள நிலங்கள் பற்றிய விவரங்களை அந்தப் பட்டியில் கர்ணம் தெளிவாகக் குறிப்பிடவேண்டும். அந்தப்பட்டியலை, மேலே சொல்லியுள்ளபடி விவரங்களை பதியப்பட்டுள்ள கிராமப் படத்துடன் பஞ்சாயத்துத் தலைவரிடம் பஞ்சாயத்தினிடம் நிரந்தரமாக வைத்துக்கொள்ளப்பட வேண்டிய தஸ்தாவேஜாக வைத்துக்கொள்வதற்காக, கொடுக்கவேண்டும். அவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னால், பஞ்சாயத்துத் தலைவரானவர், அவரும் கர்ணமும் கிராமத்தைச் சுற்றிப் பார்த்தபொழுது கர்ணம் குறிப்பிட்டுக் காட்டியுள்ள விவரங்களுடன் ஒத்துப்போகின்ற முறையில் கர்ணம் கொடுத்துள்ள தேசப்படத்தில் குறிப்பிட்டுக் காட்டியுள்ள விவரங்களும், பட்டியலும் உள்ளனவா, அவை ஒழுங்கான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்று பரிசீலனை செய்து பார்த்து அதன் பிறகு தான் அவற்றை கர்ணத்தினிடமிருந்து பெறவேண்டும்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1962-ம் வருடம் ஜனவரி மாதம் 18-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 163)

—o—

நூல்கள்—வெளியீடுகள் : மக்கள் தொகை. எல்லை முதலிய விவரங்கள் அடங்கிய பஞ்சாயத்துக்கள் பட்டியல்—மாவட்டக் கலெக்டர்கள் அச்சிடல்

(Books and Publications—Up to date List of Panchayats with particulars regarding Jurisdiction, Population, etc., Printing of by District Collectors—ordered)

[G.O. Ms. No. 353 R.D. and L.A. dated 14-2-62.]

1950-ம் ஆண்டில் மக்கள் தொகை, எல்லைகள் முதலான விவரங்களுடன் கூடிய பஞ்சாயத்துக்களின் பட்டியில் மாவட்ட வாரியாக தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்டது. இந்தப் பட்டியலை இன்றையவரை, திருத்தமாக, டிவிஷனல் பஞ்சாயத்து அதிகாரி, நகர மன்றத்துக்குள் ஸ்தல ஸ்தாபனங்களின் பகுதி மேற்பார்வையாளர் (Regional Inspector of Municipal Councils and Local Boards) ஆகியோரைக் கலந்தாலோசித்து, நகர மன்றங்கள்-ஸ்தல ஸ்தாபனங்கள் மேற்பார்யாளர் இரண்டாம் பதிப்பாக அச்சிட்டு வெளிக்கொணரக் கேட்டுக்கொள்ளப் படுகிறார்.

2. இன்றைய வரை, திருத்தமாக அச்சிட்டு வெளியிடுவதில் சில தொல்லைகள் இருப்பதாக நகர மன்றங்கள்—ஸ்தல ஸ்தாபனங்களின் மேற்பார்வையாளர் கூறுகிறார் மாநிலத்திலுள்ள 12,000-த்துக்கு மேற்பட்ட பஞ்சாயத்தைப்பற்றி டிவிஷனல் பஞ்சாயத்து அதிகாரி அனுப்பி வைக்கும் விவரங்களை எல்லாம் சரியானவையா, முழுமையானவையா, இன்றையவரை திருத்தப்பட்டவையா என்பதைப் பரிசேதனை செய்ய வேண்டும். இந்த வேலையை, "பஞ்சாயத்துக்களின் மேற்பார்வையாளர்" என்றமுறையில் கலெக்டர்கள் செய்வது பொருத்தமாகவும் வசதியாகவும் இருக்குமென்று நகர மன்றங்கள்-ஸ்தல ஸ்தாபனங்களின் மேற்பார்வையாளர் கருதுகிறார்.

3. அரசாங்கம், நகர மன்றங்கள்-ஸ்தல ஸ்தாபனங்களின் மேற்பார்வையாளரின் யோசனையை ஒப்புக்கொள்ளுகிறது. 1958-ம் வருடத்திய, தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் கீழ் அமைந்த புதிய பஞ்சாயத்து நிர்வாக அமைப்பில் 'பஞ்சாயத்துக்களின் மேற்பார்வையாளர்' என்ற முறையில் கலெக்டர்கள் இடம் பெருகின்றனர். அவர்கள், தங்கள், தங்கள் மாவட்டம் சம்பந்தப்பட்டமட்டில், பஞ்சாயத்துக்கள் பட்டியல் தயாரித்து அச்சிட அரசாங்கம் ஆணையிடுகிறது. அந்தப் பட்டியல் இணைப்பில் கூறியுள்ளபடி அமையவேண்டும். அந்தப் பட்டியல் மாவட்டத்தில் உள்ள அபிவிருத்தி மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு ரிவின்யூ கோட்டத்தில்உள்ள, பஞ்சாயத்து யூனியன் வாரியாக அமையவேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் எத்தனை புத்தகங்கள் அச்சிடவேண்டும் என்பதை (i) கலெக்டர்கள், ரிவினியூ டிவிஷனல் அதிகாரிகள், மற்ற அரசாங்க அதிகாரிகள் ஆகியோரின் உபயோகத்துக்கு (ii) பஞ்சாயத்துக்கள்—பொது மக்கள் ஆகியோருக்கு விற்க—எத்தனை பட்டியல் புத்தகங்கள் வேண்டும் என்பதைக் கலெக்டர் முடிவு செய்யலாம். இந்த ஆணையின் இணைப்பில் கூறப்பட்டபடி) பட்டியல் தயாரித்து அச்சிட கலெக்டர்கள் 1962 ஜனவரி "கிராம நல" இதழின் விசேஷ அனுபந்தமாக வெளியிடப்பட்டிருக்கும் "தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் பட்டியல்" என்ற வெளியீட்டை அடிப்படையாகக் கொள்ளலாம்.

4. ஒவ்வொரு மாவட்டத்துக்கும் தனித்தனியாக பஞ்சாயத்துக்கள் பட்டியலை, கலெக்டர்களிடமிருந்து விளக்கம் வந்ததும், அச்சிடுமாறு எழுதுபொருள்-அச்சக ஆணையாளர் (The Controller or Stationery and Printing, Madras) கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

இணைப்பு

அபிவிருத்தி மாவட்டம்

ரெவினியூ கோட்டம்

பஞ்சாயத்து யூனியன்

வரிசை எண்.	பஞ்சாயத்தின் பெயர்.	கிராமம் (அ)	எல்லை.	மக்கள் தொகை.	தபால் நிலையம்.	இரயில்வே நிலையம்.	அமைப்பு என் தேதி.	இடங்கள் ஒதுக்கப் பட்டது.	ஒதுக்கப் படாதது.	மொத்தம்.	பரப்பு.	வருவாய்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)

வார்டுகளின் எண்ணிக்கை.	நிர்வாக அதிகாரிகளை நியமித்து விளம்பரப் படுத்திய தேதி.	பஞ்சாயத்துக்கு கடைசிப் பொதுத் தேர்தல் நடந்த தேதி.
(14)	(15)	(16)

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1962-ம் வருடம், பிப்ரவரி மாதம் 14 தேதியிட்ட அரசாங்க ஆணை 353)

பஞ்சாயத்து யூனியன் பகுதிகளில் புதிய பள்ளிகளைத் திறத்தல்—இருக்கின்ற பள்ளிகளில் மேலும் பல பிரிவுகளைத் தொடங்குதல் பற்றிய ஆணைகளை அனுப்பி வைத்தல்–கல்வித்துறை இயக்குநரின் நடைமுறை அறிக்கை—பிரதி அனுப்பப்பட்டது.

[Proceedings of the Director of the Public Instructions R. Dis. No- 5588/61. dated 13-9-1961.]

2. ஒரு மைல் தொலைவுக்குள் பள்ளிகள் இல்லாத இடங்களிலும், ஜனத்தொகை 300-க்குக் குறையாத அளவு இருக்கும் இடங்களிலும் மட்டிலுமே, பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் கல்வித்துறையின் யோசனையைக் கேட்காமல் புதிய ஆரம்பப் பள்ளிகளைத் திறக்குமாறு—பார்த்துக்கொள்ளும்படி மாவட்டக் கல்வி அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

3. 1961-ம் ஆண்டு ஜுன் மாதம் 30-ந் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 47606-ன்படி, கீழ் நிலை ஆரம்பப் பள்ளிகளை உயர் தரத்திற்கு உயர்த்தும் விஷயத்தில், பஞ்சாயத்து யூனியன்களால் மாவட்டக் கல்வி அதிகாரிகள் கலந்தாலோசிக்கப்படவேண்டும் என்ற போதிலும், டிவிஷனல் இன்ஸ்பெக்டர் அனுமதி அளிக்கவேண்டும் என்று இப்பொழுது இருக்கும் விதிகள். அமுலில் இருக்கும் என்பது மாவட்டக் கல்வி அதிகாரிகளுக்கு அறிவிக்கப்படுகிறது.

* * *

I

பஞ்சாயத்து யூனியன் பகுதிகளில் புதிய பள்ளிகளைத் திறத்தல்—ஏற்கெனவே இருக்கும் பள்ளிகளில் மேலும் பிரிவுகளைத் தொடங்குதல்

[Elementary Education–Opening of new schools and opening of additional sections in existing schools in Panchayat Union areas–Orders issued]

[Education & Public Health Department, G. O. Ms. No. 790 (Education), dated 11-4-61].

(a) அங்கீகாரம், (b) ஆரம்பக் கல்விகளுக்கு உதவி—மானியத்திற்கான இப்போதைய விதிகளின்படி, கல்வித் துறையின் முன் அனுமதி இன்றி, ஒரு மைல் சுற்றளவில் பள்ளியில்லாத பகுதியாகவும், 300-க்குக் குறையாத மக்கள் தொகையுள்ள பகுதியாகவும்—இருக்கின்ற இடங்களில் மாவட்டக் குழுக்கள்— ஆரம்பிக்கலாம். இது, எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில், மாவட்டக் கல்வி அதிகாரிக்கு அறிவிக்கப்படலாம். பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் தோன்றிய உடனே அந்தந்தப்பகுதியில் மாவட்டக் கழகங்கள் செயல்படுவது நின்றுவிடும். ஆகவே மாவட்டக்கழகங்கள் ஆரம்பப்பள்ளிகளைத் திறப்பது சம்பந்தப்பட்ட இந்த விதிகள் திருத்தப்படவேண்டியது அவசியமாகிறது. அதனால் கீழ்க்கண்ட ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன :

2. பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் மாவட்டக்கழகங்களுக்குப் பதில்—அந்த இடத்தில் செயல்படும் அமைப்புகளாகும். ஆகையால் பஞ்சாயத்து யூனியன் மன்றம், மாவட்டக் கழகங்களைப் போன்றே, கல்வித்துறையைக் கலந்தாலோசிக்காமல், ஒரு மைல் சுற்றளவில் பள்ளியில்லாததும், 300-க்கு மேற்பட்ட ஜனத்தொகை உள்ளதுமான பகுதியில், புதிய பள்ளியை எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் அறிவித்துவிட்டு—ஆரம்பிக்கலாம்.

3. 1958-ம் வருடத்திய, தமிழ் நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் 65(e) பிரிவின் கீழ், பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள், அரசாங்க உதவி பெறும் பள்ளிகளுக்கு (Aided Schools) மானியங்கள் வழங்கச்சட்ட பூர்வமான பொறுப்பளிக்கப்பட்டுள்ளன. ஆகவே பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள், அவை நடத்தும் பள்ளிகளின் பராமரிப்புக்குத் தேவையான நிதி வசதிகள் செய்துகொள்வதுடன், உதவிபெறும் பள்ளிகளுக்கு மானியங்கள் வழங்கவும் நிதி வசதி செய்துகொள்ளவேண்டும்.

ஆகவே உதவி பெறும் பள்ளிகளைத் (Aided Schools) திறப்பதற்கு, பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் ஒப்புதலும் தேவையாகிறது. அவ்வாறு ஒப்புதலை ஒரு தீர்மானத்தின் வாயிலாக அளித்தால் மட்டுமே பஞ்சாயத்து யூனியன் மன்றம், உதவி பெறும் பள்ளிகளுக்கு மானியங்கள் வழங்கக் கடமைப்பட்டதாகும். இந்த விதிகள், உதவிபெறும் பள்ளிகளில் புதிய பிரிவுகளைத் தொடங்குகின்ற விஷயத்திலும் மேலும் ஆசிரியர்களை அமர்த்தும் விஷயத்திலும் பொருந்துவனவாகும்.

* * * * *

II

பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் புதிய ஆரம்பப் பள்ளிகளைத்—திறத்தல்ஏற்கெனவே இருக்கும் பள்ளிகளில் புதிய வகுப்புக்களைத் தொடங்குதல்—ஆகிய விஷயங்களில், சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து கலந்தாலோசிக்கப்படவேண்டும். இது பற்றிய கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு, ஜுன் மாதம் 19-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை 1718-ஐப் படிக்கவும். (இந்த ஆணையின் தமிழ் மொழிபெயர்ப்பு 1961, ஜூலை மாத கிராம நல இதழ் பகுதி II—பஞ்சாயத்து அரசினர் இதழ், பக்கம் XV-ல் வெளியிடப்பட்டிருக்கிறது.)

* * * * *

பஞ்சாயத்து யூனியன்கள், கல்வித் துறையைக் கலந்தாலோசிக்காமல் ஆரம்பப்பள்ளிகளை உயர்தர ஆரம்பப் பள்ளிகளாக மாற்றுதல்

(Elementary Education–Panchayat Unions–Conversion of Elementary Schools into Higher Elementary Schools without consulting Education Department)

(Education and Public Health Department Memorandum No. 47606 dated 30-6-1961]

1958-ம் வருடத்திய, தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம், 65-வது பிரிவின் கீழ், பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள், ஆரம்பக்கல்வி பரப்பப் பொறுப்பளிக்கப்பட்டுள்ளன. ஆகவே, பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள், மாவட்டக் கழகங்களைப் போன்றே, கல்வித்துறையின் முன் அனுமதியின்றி, ஒரு மைல் சுற்றளவுக்கு பள்ளியில்லாததும், 300-க்கு மேற்பட்ட ஜனத்தொகை உள்ளதுமான பகுதியில் புதிய பள்ளியைத் தொடங்கிவிட்டுப் பிறகு மாவட்டக் கல்வி அதிகாரிக்கு அறிவிக்க அனுமதிக்கப்படுகின்றன.

ஆரம்பப் பள்ளிகளைத் தரமுயர்த்துகின்ற விஷயம் முழுதும் வேறுபட்ட செயல்முறையை உடையதாகும். ஒரு பகுதியில் உயர்தர ஆரம்பப் பள்ளியின் தேவை, சுற்றுப்புறத்திலுள்ள ஆரம்பப் பள்ளிகளில் 5-வது வகுப்பு எண்ணிக்கை, சுற்றுப்புரத்தில்—அண்மையில் வேறு உயர்தர ஆரம்பப் பள்ளி இருக்கிறதா என்பது, இட வசதி, ஊர் மக்களின் ஆர்வம் ஆகிய பல்வேறு உண்மைகளைச் சார்ந்துள்ளன. இந்த விஷயங்களெல்லாம் கல்வித் துறையினுல் பரிசீலனை செய்யப்பட வேண்டும். ஆகவே, ஆரம்பப் பள்ளிகளைத் தரம் உயர்த்தும் விஷயத்தில், கோயமுத்தூர் மாவட்டக் கலெக்டர், மாவட்டக் கல்வி அதிகாரிகளை கலந்தாலோசிக்க வேண்டும் என்று அறிவிக்கப்படுகிறுர்.

மாதர் நலம்--பஞ்சாயத்து யூனியன் பிரதேசங்களில் மாதர்—குழந்தை நலத் திட்டங்களை ஆரம்பித்து செயல்படுத்துதல்--அதிகார சார்பில்லாத உறுப்பினர்களுக்குப் பயிற்சி அளித்தல்

Women's Welfare–Implementation of Women and Children's Welfare Programmes in Panchayat Unions–Training of non-official members

[G.O. Ms. No. 3369, R. D. L. A., dated 22-12-1961.]

ஒரு சில இடங்களில் தவிர, தமிழ்நாட்டில் உள்ள எல்லாப் பிரதேசங்களிலும், 1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தை அமுலாக்கி வைக்கின்ற வேலையானது, ஒரேயடியாக ஒரே சமயத்தில் அல்லாமல், பல நிலைகளில் செயல்படுத்துகின்ற முறையில் செய்து முடிக்கப்பட்டுவிட்டது. 1961-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ம் தேதி முதல் மாநிலத்தில் இருந்த பதினெரு மாவட்டக் கழகங்களும் செயலற்றுப்போய்விட்டன. அவைகளுக்குப் பதிலாக பஞ்சாயத்துக்கள்—பஞ்சாயத்து யூனியன்கள் என்ற அமைப்புக்கள் அடங்கிய உள்ளாட்சி முறையில் ஒரு புதிய நிர்வாக அமைப்பு முறையானது அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. அவைகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள ஊர் நல, அபிவிருத்தி சம்பந்தமான கடமைகளை நிறைவேற்றி வைக்கின்ற வேலையானது இந்தப் புதிய உள்ளாட்சி நிறுவனங்கள் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

2. 1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் 65 (சி) பிரிவின்கீழ், மகப்பேறு, குழந்தை நலப் பணிகளை அபிவிருத்தி செய்கின்ற பொறுப்பானது பஞ்சாயத்து யூனியன்கள் வசம் விடப்பட்டுள்ளன. சமுதாய அபிவிருத்தியின் தேசிய வளர்ச்சிப் பணிகளின்கீழ், தாய், சேய் நலப் பணிகள் சம்பந்தமான வேலைத் திட்டங்களை செயல்படுத்தி வைப்பது சம்பந்தமான கடமைகளை, அதே சட்டத்தின் 66-வது பிரிவு பஞ்சாயத்து யூனியன்கள் வசம் ஒப்படைக்கப்படுகிறது.

3. பஞ்சாயத்து யூனியன்கள் இக் கடமைகளை திருப்திகரமான முறையில் நிறைவேற்றி வைக்க வேண்டி, 1961-ம் ஆண்டு மே மாதம் 20-ம் தேதியிட்ட கிராம நல, தல நிர்வாகத் துறையின் ஆணை எண் 1433-ல் தாய், சேய் நல பணி அமைப்புக்கள் பலவற்றையும் ஒன்றுபடுத்தியும், திருத்தி அமைத்தும் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இந்த வேலைத் திட்டங்களை சரிவர நடைபெறுகின்றனவா என்பதை மேற்பார்வை செய்வதற்காக, வட்டார மாவட்ட அளவுகளில் மாதர் நலக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும் என்றும் அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

4. தாய்—சேய் நலத்திற்காக ஒரு மாதிரி வேலைத் திட்டத்தை அரசாங்கம் உருவாக்கிக்கொண்டு வருகிறது. பஞ்சாயத்து அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் மாதர் குழந்தைகள் நல மானியத்தின் கீழ் தங்களுக்குக் கிடைக்கிற நிதி ஆதாரங்களின்

உதவியைக் கொண்டு மாநிலத்தில் உள்ள எல்லாப் பஞ்சாயத்து யூனியன்களிலும் "இம் மாதிரி வேலைத் திட்டமானது" செயல்படுத்தப்பட வேண்டும். இந்த "மாதிரி வேலைத் திட்டம்" வெகு விரைவில் தயாரித்து முடிக்கப்பட்டு அதுபற்றிய தகவல்கள் எல்லாப் பஞ்சாயத்து யூனியன்களுக்கும் தெரியப்படுத்தப்படும்.

5. 1961-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23-ம் தேதியிட்ட கடித எண் 2173/எ-2/61 என்ற தன்னுடைய கடிதத்தில் மாதர் நலத் துறை இயக்குனர் மாநில சமூக நல போர்டின் சிபார்சினை அரசாங்கத்திற்குத் தெரிவித்துள்ளார். பஞ்சாயத்துக்களில் உள்ள பெண் அங்கத்தினர்கள், பஞ்சாயத்து யூனியன் மன்றங்களில் சேர்க்கப்பட்ட/தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் அங்கத்தினர்கள் தங்கள் தங்கள் பஞ்சாயத்துப் பிரதேசங்களில் மாதர்-குழந்தைகள் நலப் பணிகள் சம்பந்தமான வேலைத் திட்டத்தை செம்மையான முறையில் செயல்படுத்தி வைக்கவும், கிராம சேவிகைகள், முக்கிய சேவிகைகள் செய்து வருகின்ற வேலைகளைப் புரிந்துகொண்டு செயலாற்றவும் இதற்காக அந்தப் பெண் உறுப்பினர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்பதே அச் சிபார்சாகும். வட்டார அளவில், இதற்காக பயிற்சி முகாம்களை ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் மாதர்நலத் துறை இயக்குனர் யோசனை கூறியுள்ளார்.

6. அரசாங்கம் இந்த சிபார்சுகளை போதிய கவனத்துடன் பரிசீலித்த பிறகு மாநில சமூக நல போர்டு, மாதர் நலத் துறை இயக்குநர் ஆகியவர்களின் சிபார்சுகளை ஒத்துக்கொள்கிறது. பஞ்சாயத்துக்களின் எண்ணிக்கை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் இரண்டுக்கும் மேற்படாத அளவில் பயிற்சி முகாம்கள் நடத்த அரசாங்கம் உத்தரவிடுகிறது. ஒவ்வொரு முகாமும் மூன்று நாட்கள் என்ற அளவில் நடைபெற வேண்டும். சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்களில் உள்ள பெண் அங்கத்தினர்கள், பஞ்சாயத்து யூனியன் மன்றங்களில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள/சேர்க்கப்பட்டுள்ள பெண் அங்கத்தினர்கள், பஞ்சாயத்துக்களிலும் பஞ்சாயத்து யூனியனிலும் உள்ள மாதர் நலக் குழுக்களில் உள்ள பெண் அங்கத்தினர்கள் இந்தப் பயிற்சி முகாம்களில் பயிற்சி பெற வேண்டும். நலப் பணிகளில் ஆர்வமும் அக்கறையும் காட்டுகின்ற மற்ற பெண்களும் இந்தப் பயிற்சி முகாம்களில் பயிற்சி பெறலாம். இந்த ஆணையுடன் இணைக்கப்பட்டுள்ள பாட அட்டவணையில் கண்டுள்ளபடி (இது இங்கே பிரசுரிக்கப்படவில்லை) பயிற்சி முகாம்களில் பயிற்சிகள் சொல்லிக் கொடுக்கப்பட வேண்டும். பயிற்சி முகாம்களை நடத்துகின்ற வேலை மாநிலத்தில் உள்ள எல்லா வட்டாரங்களிலும் உடனே எடுத்துக்கொள்ளப்பட்டு, 1962 ஜனவரி மாதம் முடிவதற்கு முன்னால் இந்த வேலை முடிக்கப்பட வேண்டும் என்று அரசாங்கம் உத்தரவிடுகிறது.

7. பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள், சம்பந்தப்பட்ட மாவட்ட மாதர் நல அதிகாரிகள் இந்தப் பயிற்சி முகாம்களை நடத்தி வெற்றிகரமாக ஆக்குவதற்கு கூட்டுப் பொறுப்பாளிகள் ஆவார்கள். இப்படிப்பட்ட பயிற்சி முகாம்களை நடத்த ஆரம்பச் செலவுக்கென்று ரூபாய் நூறுக்கு மேற்படாத தொகை அனுமதிக்கப்படுகிறது. சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியனின் மாதர், குழந்தைகள் மானியத்திலிருந்து இந்தத் தொகையை எடுத்துக்கொள்ளலாம். ஆரம்பத்தில் செலவுத் தொகையானது சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியனின் நிதிகளிலிருந்தே சமாளிக்கப்பட வேண்டும். சம்பந்தப்பட்ட ரெவின்யூ டிவிஷனல் அதிகாரிக்கு மாதாந்தர செலவு அறிக்கையினைச் சமர்ப்பிப்பதன் மூலம் இந்தச் செலவுத் தொகை திருப்பி கொடுக்கப்படும். வேலை முடிந்த பிறகு பணம் அளிக்கப்படுகிற முறையில், அரசாங்கத்தினால் தரப்படுகிற மாதர், குழந்தைகள் நல மானியத்திற்கு எதிராக இது கணக்கில் வைக்கப்படும். இப்படிப்பட்ட பயிற்சி முகாம்களை நடத்த ரூபாய் நூறுக்கு மேல் செலவாகுமேயானால்—அந்த அதிகப்படியான செலவுத் தொகையாதை பிரதேச நன்கொடைகள்மூலம் சமாளிக்கப்பட வேண்டும்.

(கிராம நல, தல நிர்வாகத் துறையின் 22-12-1961 தேதியிட்ட அரசாங்க ஆணை எண். 3369)

நீர்ப்பாசனம்: சிறிய நீர்ப்பாசன ஆதாரங்களை, காத்து, பராமரித்து குடிமராமத்து வேலை செய்ய பஞ்சாயத்து யூனியன் மன்றங்களிடம் ஒப்படைத்தல்—ஸ்தல நீர்ப்பாசன மானியம் வழங்குதல் பற்றிய விளக்கம்

[Irrigation—Transfer of Minor Irrigation sources to Panchayat Union Councils for protection and maintenannce and execution of Kuddimaramat-Local Irrigation Grant-Payment of—Clarification—issued.]

(Memorandum No. 217768, R. D. and L. A. dated 1—1—1962.)

கிராம நல—தல நிர்வாகத்துறையின் 1961ம் வருஷம் ஆகஸ்ட்டு மாதம் 9-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 2228-ன் பாரா 11-ல், பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுக்கு ஸ்தல நீர்ப்பாசன மானியத்தை, சம்பந்தப்பட்ட ரெவினியூ டிவிஷனல் அதிகாரிகள், வேலை நிறைவேற்றத்திற்குப் பின்னர் அளிக்கப்படும் மானியம் என்ற முறையில் வழங்குவார்கள். இருந்தபோதிலும், வருவாய்த்துறையின் (Revenue Department) 1961 ம் வருஷம் அக்டோபர் மாதம் 12ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 4459-ல், மேற்படி மானியம் கலெக்டர்களால் ஒவ்வொரு அரையாண்டின் தொடக்கத்திலும் முன் பணமாகவே வழங்கப்படும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த ஆணைகள் ஒன்றுக்கொன்று முரண்பட்டு இருப்பதால், பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஸ்தல நீர்ப்பாசன மானியம் வழங்குவதில் கைக்கொள்ளவேண்டிய சரியான முறைபற்றி, வடார்க்காடு, தஞ்சை மாவட்டக் கலெக்டர்கள் விளக்கம் கேட்டிருக்கின்றனர். இது சம்பந்தமாய், வடார்க்காடு மாவட்டக் கலெக்டர் கீழ்க்கண்ட விஷயங்களையும் விளக்கும்படி அரசாங்கத்தைக் கேட்டுள்ளார் :—

விஷயம் I.—பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுக்கவேண்டிய ஸ்தல நீர்ப்பாசன மானியத் தொகையை—கஜானுவிலிருந்து பஞ்சாயத்து யூனியன்களுக்கு வழங்கும் அதிகாரம் எந்த அதிகாரிக்கு உண்டு. என்பது—

விஷயம் II.—ஸ்தல நீர்ப்பாசன மானியத் தொகையைக்கொண்டு, பஞ்சாயத்து யூனியன்களில் முடிக்கப்படாமல் இருக்கும் வேலைகளுக்கு ஆகும் செலவுகளை ஈடு செய்யலாமா அல்லது தனியாக இந்த மானியம் செலவு செய்யப்படவேண்டுமா என்பது.

2. அரசாங்கம் மேற்படி விஷயங்களை நன்கு பரிசீலனை செய்தபின்னர், கீழ்க்கண்ட விளக்கங்களை வெளியிடுகிறது.

ஸ்தல நீர்ப்பாசன மானியத்தை வழங்குவதற்குக் கைக்கொள்ளவேண்டிய முறை :

வருவாய்த் துறையின் 1961 அக்டோபர் மாதம் 12-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 4459-ல் அரசாங்கம், ஒவ்வொரு அரையாண்டின் தொடக்கத்திலும் ஸ்தல நீர்ப்பாசன மானியம், ஒரு முன்பண மானியமாக வழங்க ஆணைகள் பிறப்பித்திருக்கிறது. இந்த ஆணைகளின்படி, கிராம நல தல நிர்வாகத் துறையின் 1961 ஆகஸ்ட் மாதம் 9-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 2228-ன் பாரா 11 ஸ்தல நீர்ப்பாசன மானியத்தைப் பொறுத்த மட்டில் திருத்தப்பட்டதாகக் கருதப்படவேண்டும். ஏற்கனவே ரிவின்யூ டிவிஷனல் அதிகாரியால் வழங்கப்பட்டுவிட்ட மானியம் ஏதாவது இருந்தால், வருவாய்த் துறையின் 1961 அக்டோபர் மாதம் 12-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 4459-ன் படி முன்பண மானியம் அங்கீகரிக்கப்படும்பொழுது அதையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

விஷயம் 1.—வருவாய்த் துறையின் 1961 அக்டோபர் மாதம் 12-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 4459-ல் பிறப்பிக்கப்பப்பட்ட ஆணைகளின்படி, அந்த அந்த மாவட்டங்களின் பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுக்குக் கலெக்டர்கள் மானியத்தை வழங்குவார்கள். மேற்படி ஆணைப்படி, ஸ்தல நீர்ப்பாசன மானியத்தைப் பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுக்கு—கஜானுவிலிருந்து செலுத்தும் அதிகாரத்தை அரசாங்கம் கலெக்டர்களுக்கு அளிக்கிறது. இந்த ஆணையின் இணைப்பில் கூறப்பட்டபடி மானியத்தொகையை அங்கீகரிக்க வேண்டும். ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் சேர வேண்டிய மானியத் தொகையை கஜானுவில், பஞ்சாயத்து யூனியன் கணக்கில் சரிக்கட்டிக்கொள்வதன் மூலம் வரவு வைத்துக்கொள்ளப்படும். பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் ஒரு பலவகைப் பட்டியல் (Bill) அனுப்புவதன் மூலம் மானியத்தொகையைக் கேட்டுப்பெறலாம்.

விஷயம் 11.—இந்த வேலைகளுக்கு ஆகும் செலவுகள் "ஸ்தல நீர்ப்பாசன மான்யத்"திலிருந்துதான் ஈடு செய்யபட வேண்டுமேதவிர தனிப்பட்ட நிதி வசதிகள் செய்யப்படமாட்டா.

இணைப்பு

எண் : . . . . . கலெக்டர் அலுவலகம்,

. . . .

கலெக்டரிடமிருந்து.

கிளை கஜானு அதிகாரிக்கு,

சென்னை கஜானு சட்டம் பாகம் I, கஜானு விதி 17, விளக்கம் 2-ன்படி, நான் இதன்மூலம் . . . . . . பஞ்சாயத்து யூனியன் கமிஷனருக்கு (i) பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் ரூ. (. . . . . .

ரூபாய் மட்டும்)-க்கு அனுப்பிவைத்த பலவகைச் சீட்டு (Miscellaneous) (ii) இந்தத் ஆணை ஆகியவற்றின் அடிப்படையில் பணம் செலுத்த உமக்கு அதிகாரம் அளிக்கிறேன்.

2. இந்தத் தொகை உங்கள் கஜானாவில் அல்லது துணை கஜானாவில் வைக்கப்பட்டுள்ள பஞ்சாயத்து யூனியனின் எல்.எப். முன்பண கணக்கு எண் 1 என்ற கணக்குப் புத்தகத்தில் சரிக்கட்டுவதன் மூலம் செலுத்தப்படவேண்டும். ரொக்கமாக இந்தத் தொகையை வழங்கக்கூடாது. பஞ்சாயத்து யூனியன்களுக்கு செலுத்தத்தக்க இந்தத் தொகை . . . . . அரையாண்டு முடிவுக்கான ஸ்தல நீர்ப்பாசன மானியத்தின் முன்பணமாக, "18. நீர்ப்பாசனம்—சாதாரண வருவாய்களிலிருந்து செலவிடப்படும் இதர வருவாய்—நீர்ப்பாசன வேலைகள்—வேலைகள் (வாணிபத்தன்மையற்றது) சிறிய நீர்ப்பாசனம்—வருவாய்த் துறை—(1) உதவி மானியம், (2) பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஸ்தல நீர்ப்பாசன மானியம்" என்ற தலைப்பில் பற்று வைக்க வேண்டும்.

3. தொகை செலுத்தி சரிக்கட்டப்பட்ட விஷயம் சென்னை தலைமைக் கணக்குத் தணிக்கை அதிகாரிக்கு (Accountant General, Mardas) பணம் செலுத்தியதற்கான கஜானா அதிகாரியின் சான்றிதழுடன்—தெரிவிக்கப்பட வேண்டும். அது இந்த அலுவலகத்துக்குத் தெரியப்படுத்தி நடக்க வேண்டும்.

கலெக்டர்.

இதன் பிரதிகள் :

. . . . பஞ்சாயத்து யூனியன் கமிஷனருக்கு சென்னை தலைமைக் கணக்குத் தணிக்கை அதிகாரிக்கு,

குறிப்பு 1.—சென்னை கஜானா சட்டம் பாகம் 1 கஜானா விதி 17-ன் 2-வது விளக்கத்தின்கீழ், இந்த மானியக் கணக்குச் சரிக்கட்டுதல்—இந்த அனுமதியின் பேரில் செய்யப்பட வேண்டும். சென்னை தலைமைக் கணக்குத் தணிக்கை அதிகாரியின் அனுமதி தேவையில்லை.

2. இந்த மானியம், கஜானா அதிகாரிகளிடமிருந்து வேறு அனுமதி எதுவுமின்றி கீழ்க் கஜானா அதிகாரிகளாலேயே சரிக்கட்டப்படலாம்.

3. பஞ்சாயத்து யூனியன் கமிஷனரின் இந்தத் தொகையைக் கோரும் பல்வகைச் சீட்டு (Miscellaneous Bill) முத்திரை இடப்படவேண்டிய தேவையில்லை.

(கிராம நலதல நிர்வாகத் துறையின் 1-1-62 தேதியிட்ட அறிக்கை எண் 217768.)

பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுக்கு ரெவினியூ டிவிஷனல் அதிகாரிகள் கிராம வேலைகள் திட்ட உதவி மானியம் அங்கீகரித்தல்—மாதாந்தரச் செலவு அறிக்கை—வரையறுத்தல்

(Planning Commission—Village Works Programme—Sanction of grant in aid to the Panchayat Union Councils by the Revenue Divisional Officers—Monthly Statement of Expenditure—Prescribed.)

(Memo. No. 1346, R.D. & L.A. dated 2nd January 1962.)

கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1961 ஜூலை மாதம் 23-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 2103, கிராம நலத் துறை கணக்குப் பிரிவின் 1961 செப்டம்பர் மாதம் 5-ம் தேதி அறிக்கை 154036, ஆகியவற்றின்படி, பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுக்கு கிராம வேலைகள் திட்டத்தின்கீழ் நடக்கும் வேலைகளுக்காக அளிக்கப்படும் உதவி மான்யங்கள், சம்பந்தப்பட்ட வெவினியூ டிவிஷனல் அதிகாரியால் அங்கீரிக்கப்படுகிறது. இந்த அங்கிகாரம், பஞ்சாயத்து யூனியன்களால், வேலைகளுக்குச் செலவு செய்யப்பட்டு, பின்னர் அனுப்பப்படும் மாதாந்தரச் செலவு அறிக்கையின் அடிப்படையில் வழங்கப்படும். இதற்காக, இந்த அறிக்கையின் இணைப்பு I-ல் கொடுக்கப்பட்டுள்ள மாதிரி-மாதாந்தரச் செலவு அறிக்கையைப் போல் செய்யப்பட்ட செலவுகளின் அறிக்கை தயாரித்து சம்பந்தப்பட்ட ரெவினியூ டிவிஷனல் அதிகாரிக்கு அனுப்பி வைக்கும்படி பஞ்சாயத்து யூனியன்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன. இந்த அறிக்கை ரெவினியூ டிவிஷனல் அதிகாரிக்கு, அடுத்த மாதம் 10 தேதி அல்லது அதற்கு முன் சேரும்படி அனுப்பிவைக்க வேண்டும்.

2. இந்த அறிக்கையின் இணைப்பு II, III, IV-ல் கொடுத்துள்ள மாதிரியில், ஒவ்வொரு மாதமும் பல்வேறு பஞ்சாயத்து யூனியன்களுக்காக வாங்கி வழங்கிய உதவிமானியத் தொகை பற்றிய விவரங்களை அடுத்த மாதம் 15-தேதி அல்லது அதற்கு முன் அரசாங்கத்துக்கு வந்து சேரும்படி அனுப்ப ரெவினியூ டிவிஷனல் அதிகாரிகளும் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். ரெவினியூ டிவிஷனல் அதிகாரி தம்மால் அங்கீகரிக்கப்பட்டு வழங்கப்படும் மானியத் தொகைகள், கஜானாக் கணக்குடன் சரிபார்க்கப்பட்டு, அவ்வாறு சரிபார்க்கப்பட்ட தொகைகளே மேற்படி அறிக்கையில் இடம் பெற வேண்டும்.

இணைப்பு I.

கிராம வேலைகள் மானியம் சம்பந்தமாக பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களால் செய்யப்பட்ட செலவுத் தொகைகளை ரெவின்யூ டிவிஷனல் அதிகாரியிடமிருந்து கேட்டுப் பெருகின்ற மாதாந்தர அறிக்கை :—

1. பஞ்சாயத்து யூனியனின் பெயர் : 2. யூனியனின் வகை : 3. பஞ்சாயத்து யூனியன் அமைந்துள்ள டிவிஷனும் மாவட்டமும். 4. மாதம்.

வேலையின் பெயர்.	வேலையின் வகை.	வேலையின் உத்தேசச் செலவு.	வேலைக்காகச் சேர்க்கப்பட்ட நன்கொடை				மாதத்தில் செய்யப்பட்ட மொத்தச் செலவு.	6-வது பத்தியில் சொல்லப்பட்டது உட்பட்ட நன்கொடை.	உதவி மானியத்தில் ஈடு செய்யப்பட வேண்டிய நிகரத் தொகை.	மாத முடிவு வரை செய்யப்பட்ட முன்னேற்றச் செலவு.	மாத முடிவு வரை பெறப்பட்ட உதவி மானிய மொத்தத் தொகை.	குறிப்பு.
			பணம்.	பொருள்கள்.	உழைப்பு.	மொத்தம்.						
(1)	(1எ)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)

கமிஷனர்,

............பஞ்சாயத்து யூனியன்.

....................ரெவினியூ டிவிஷனல் அதிகாரிக்கு,

இணைப்பு II

கிராம வேலைகளுக்கு (அங்கீகரிக்கப்பட்ட இனங்களின் கீழ்வரும் புதிய வேலைகள்) ரெவினியூ டிவிஷனல் அதிகாரியால் அங்கீகரிக்கப்பட்ட உதவி மானியங்களைக் காட்டும் அரசாங்கத்துக்கு அனுப்பப்படவேண்டிய மாதாந்தர அறிக்கை.

ரெவினியூ டிவிஷனின் பெயர் : மாவட்டத்தின் பெயர் : மாதம் :

பஞ்சாயத்து யூனியனின் பெயரும் வட்டாரத்தின் வகையும் (A,B C, அல்லது D).	வேலையின் மொத்த உத்தேசச் செலவு.	பெறவேண்டிய நன்கொடை.	மாதத்தில் நடந்த வேலையின் மதிப்பு.	வசூலித்த நன்கொடை.	உதவி மானியம் அங்கீகரிக்கப்பட்டதற்கான பங்கு விவரங்கள்.			பற்று வைக்க வேண்டிய கணக்குத் தலைப்பு.	Vr. எண்ணும் தேதியும்.	குறிப்பு.
					உதவி மானியமாகப் பெற்ற நிகர தொகை (5-வது பத்தியிலிருந்து 4-வது பத்தியைக் கழித்தத் தொகை	மத்திய நிதி 4வது பத்தியில் 50-வது விகிதம் அல்லது L. D. வேலையைப் பொருத்தமட்டில், ரூ. 10,000 வரையில்.	மாநிலத்தில் பங்கு (7-வது பத்தி மொத்தத்திலிருந்து 6-வது பத்தியைக் கழித்தது)			
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	10)	(11)

குறிப்பு :—மாதிரி வட்டாரம், வரப்போகும் வட்டாரம், முதல் நிலை, இரண்டாம் நிலை வட்டாரம் ஆகிய வற்றிற்குத் தனித் தனி அறிக்கை அனுப்பவேண்டும். ஒவ்வொரு அறிக்கையும், R.W.S. வேலைகள், இணைப்புப் பாதை வேலைகள், பள்ளி வேலைகள் ஆகியவற்றைத் தனித் தனி குறிக்கவேண்டும்.

இணைப்பு III.

கிராம வேலைகளுக்கு (அங்கீகரிக்கப்பட்ட இனங்களின்கீழ் தொடரும் வேலைகள்) ரெவினியூ டிவிஷனல் அதிகாரியால் அங்கீகரிக்கப்படும் உதவி மானியங்களைக் காட்டும் (அரசாங்கத்துக்கு அனுப்பப்படவேண்டிய) மாதாந்தர அறிக்கை.

ரெவினியூ டிவிஷனின் பெயர் : மாவட்டத்தின் பெயர் : மாதம் :

பஞ்சாயத்து யூனியனின் பெயரும், வட்டாரத்தின் வகையும் (A, B, C, அல்லது L).	வேலையின் மொத்த மதிப்பு.	பொது மக்கள் நன் தொகை	மாதத்தில் நடந்த வேலையின் மொத் மதிப்பு.	பொருள்கள், உழைப்பு, உருவில் வந்த நன்கொடையின் பணமதிப்பு.	உதவிமானியமாகப் பெற்ற நிகர செல செலவு (5–வது பத்தியிலிருந்து 4–வது பத்தியைக் கழித்தது).	அங்கீகரிக்கப்பட்ட உதவி மானியத்தின் பங்கு விவரங்கள்: பத்தி (4)-ன் 50 சதவிகிதம் மத்திய பங்கு L. D. W. திட்டத்தைப் பொருத்த வரை ரூ. 10,000-க்கு உட்பட்ட தொகை.	அங்கீகரிக்கப்பட்ட உதவி மானியத்தின் பங்கு விவரங்கள்: மாநிலத்தின் பங்கு (பத்தி 1-ல் பத்தி 6-ஐக் கழித்தது).	பற்றுவைக்க வேண்டிய கணக்குத் தலைப்பு.	Vr. எண்ணும் தேதியும்.	கஜானாவில் பொது நன்கொடைத் தொகையை செலுத்திய சீட்டின் (Chalan) எண்ணும் தேதியும்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)

குறிப்பு :— 1. மாதிரி வட்டாரம், வரப்போகும் வட்டாரம், முதல் நிலை, இரண்டாம் நிலை வட்டாரங்களுக்குத் தனித் தனி அறிக்கை அனுப்பவேண்டும்.
2. R.D.W. இணைப்புப் பாதைகள், பள்ளிக் கட்டடம் ஆகிய அங்கீகரிக்கப்பட்ட வேலைகளை ஒவ்வொரு அறிக்கையும் தனியாகக் குறிக்கவேண்டும்

இணைப்பு IV.

கிராம வேலைகளுக்கு (அங்கீகரிக்கப்படாத இனங்களின்கீழ் தொடரும் வேலைகள்) ரெவினியூ டிவிஷனல் அதிகாரியால் அங்கீகரிக்கப்படும் உதவி மானியங்களைக் காட்டும் மாதாந்தர அறிக்கை : (கிராம நலத் துறை, கணக்குப் பிரிவின் 1961-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5-ம் தேதியிட்ட அறிக்கை 154036-ஐப் பார்க்கவும்)

ரெவினியூ டிவிஷனின் பெயர் : மாவட்டத்தின் பெயர் : மாதம் :

பஞ்சாயத்து யூனியனின் பெயர்.	வேலையின் உத்தேச மொத்த மதிப்பு.	பொதுமக்கள் நன் கொடை.	மாதத்தில் நடந்த வேலையின் மொத்த மதிப்பு.	பொருகளை உழைப்பு நன் கொடையின் பண மதிப்பு.	உதவி மானியமாக அங்கீகரிக்கப்பட்ட நிகர செலவுகள் (பத்தி 5-லிருந்து பத்தி 4-ஐக் கழித்தது).	உதவி மானியத்தின் பங்கு விவரம்: 4வது பத்தியின் 50 சதவிகிதம் மத்திய பங்கு (அல்லது L,D.W.ல் ரூ. 10,000க்கு உட்பட்ட தொகை.	உதவி மானியத்தின் பங்கு விவரம்: மானிலப் பங்கு (பத்தி 7ல் பத்தி 6–ஐக் கழித்தது).	பற்றுவைக்க வேண்டிய கணக்குத் தலைப்பு.	Vr. எண்ணும் தேதியும்.	பொது நன்கொடையை கஜானாவில் கட்டிய சீட்டின் (Chaolan) எண்ணும், தேதியும்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)

(கிராமநல–தல நிர்வாகத் துறையின் [கணக்குப் பிரிவு] 2—1—1962 தேதியிட்ட அறிக்கை 1346ன் இணைப்பு).

அவசரம் : நேர்முகக் கவனத்திற்குரியது

அடிப்படையான முக்கியப் புள்ளி விவரங்கள்—கிராமப் பகுதிகளிலே 1962-ம் ஆண்டு மத்தியில் மக்கள் தொகை மதிப்பீடு—தனிப்பட்ட முறையில், மக்கள் தொகை கணக்கெடுத்தல்—விதி முறைகள்—வெளியிடப்படுகின்றன.

[Vital Statistics—Estimating mid-year population of rural areas in 1962—Conduct of ad hoc census—Instructions issued]

[Education and Public Health Department. G.O. No. 939, dated 4th April 1962].

பொங்கல் நாளாகிய 14–1–1962 முதல் 30-6-1962 வரையுள்ள கால அளவில், கிராமப் பகுதிகளில் நிகழ்ந்த பிறப்பு இறப்புக்களின் புள்ளிவிவரக் கணக்கை, தனிப்பட்ட முறையில் எடுக்கவேண்டுமெனவும், பஞ்சாயத்து, வட்டார அபிவிருத்தி வெளித்துறைப் பணியாளர்கள் இப்புள்ளி விவரங்களைச் சேகரிக்க வேண்டுமெனவும், இப்பகுதிகளில் 1962-ம் ஆண்டின் நடுப்பகுதியில், மக்கள் தொகைக் கணக்கைச் சரியாக மதிப்பிடுவதற்காக இப்படிச் செய்ய வேண்டுமெனவும் அரசினர் முடிவு செய்துள்ளனர். அரசினர், இதற்காகச் சிறப்புக் குழு ஒன்றை நிருவி உள்ளனர். இக் குழுவில், அடியிற்கண்டவர்கள் அங்கம் வகிப்பர். மக்கள் தொகைக் கணக்கெடுக்கும் பணியயைச் செவ்வனே நடத்தித் தருவது, இவர்களது பொறுப்பாகும் :—

1 செயலாளர், கல்வி-பொதுச் சுகாதாரத் துறை.	தலைவர்.
2 வேலைத் திட்ட துணைச் செயலாளர், கிராம அபிவிருத்தி-தல நிர்வாகத்துறை.	உறுப்பினர்.
3 (சுகாதார) துணைச் செயலாளர், கல்வி-பொதுச் சுகாதாரத்துறை.	உறுப்பினர், செயலாளர்.
4 நெறியாளர், புள்ளிவிவரத் துறை. (Director of Statistics.)	உறுப்பினர்.
5 மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, துணைக் கண்காணிப்பாளர், (Deputy Superintendent Census operations)	உறுப்பினர்.
6 புள்ளி விவர ஆய்வர், பொதுச் சுகாதாரத் துறை. (Statistician, Public Health Department)	உறுப்பினர்.

மக்கள் தொகைக் கணக்கெடுப்புக்கு வேண்டியவற்றைச் செய்து, அவ்வேலையைச் செவ்வனே நடத்தி முடிப்பதுடன், இக்குழுவினர் இந்த வேலையின் விளைவுகளை மதிப்பிட்டு, 1962 செப்டம்பர் 15-ம் தேதிக்குள் அரசினருக்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும். மக்கள் தொகைக் கணக்கெடுப்பதற்காக விரிவான விதிமுறைகளை இக்குழுவினர் வகுத்துள்ளார்கள். இவ்விதிமுறைகளுக்கு இணங்க மக்கள் தொகைக் கணக்கெடுக்க வேண்டுமென அரசினர் கட்டளையிடுகிறார்கள். மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் பல்வேறு நிலைகளுக்கும் அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கும் நிச்சயித்துள்ள தேதிகளைக் கணடிப்பாய் அனுசரித்து நடப்பது அவசியமாகும்.

இணைப்பு

ஒவ்வொரு வட்டாரத்திலும் உள்ள கிராமப் பகுதியிலே-1962 ம் ஆண்டு நடுவில் உள்ள மக்கள் தொகையைக் கணக்கெடுப்பதற்காக, பிறப்பு-இறப்பு புள்ளி விவங்களைச் சேகரிப்பதற்குரிய விதிமுறைகள்.

* * * *

1. மக்கள் தொகை மதிப்பிடும் முறை

ஒரு பிரதேசத்தின் மக்கள் தொகை, பிறப்பாலும், குடியேறுவதாலும் அதிகரிக்கும், இறப்பாலும் மக்கள் அயல்நாட்டுகளுக்கு வெளியேறுவதாலும் குறையும். எனவே, ஒரு பிரதேசத்தின் ஆண்டு நடுவில், மக்கள் தொகையை, அடியிற்கண்ட கணக்கு சூத்திரம் மூலம், நிச்சயித்து அறியலாம் :

முந்திய கணக்கெடுப்பில் அப் பிரதேசத்தின் மக்கள் தொகை, அதிலிருந்து இந்த ஆண்டு நடுப்பகுதியிவரையில் பிறந்தவர்களின் எண்ணிக்கை, புதிதாகக் குடியேறியவர்களின் எண்ணிக்கை ஆகியவற்றைக் கூட்டிக்கொள்ளவேண்டும். இக்கால அளவில் இப்பிரதேசத்தில் இறநதவர்களின் எண்ணிக்கை, அப்பிரதேசத்திலிருந்து வெளியேறியவர்களின் எண்ணிக்கை ஆகியவற்றை, முதலில் சொன்ன மொத்த எண்ணிக்கையிலிருந்து கழித்துவிட வேண்டும். இப்படிச் செய்தோமானல், ஆண்டின் நடுப்பகுதி மக்கள் தொகைக் கணக்குக் கிடைக்கும். கடைசியாக,

எடுத்த மக்கள் தொகை கணக்கு விவரம், அதன்பின் அப்பிரதேசத்தில் பிறந்தவர், இறந்தவர்களின் புள்ளி விவரம், வெளியேறியவர்களின் விவரம் ஆகியவை சரிவரக் கிடைத்தால்தான், இந்த மதிப்பீடு சரியாக இருக்கும். ஒவ்வொரு வட்டாரத்திலும் உள்ள கிராமப் பகுதியில், 1962-ம் ஆண்டு நடுப்பகுதியில் மக்கள் தொகையைக் கணக்கிட இந்த முறையை மேற்கொள்ள உத்தேசித்துள்ளோம். வெளியேறியவர்கள் பற்றிய விவரம் கிடைக்கவில்லை. மேலும் கிராமப் பகுதிகளில் இவர்களால் மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் அதிக மாற்றம் ஏற்பட்டுவிடாது. எனவே வெளியேறியவர்களின் எண்ணிக்கையைக் கவனிக்க வேண்டியதில்லை. சென்ற முறை எடுத்த மக்கள் தொகைப் புள்ளி விவரம் நமக்குத் தெரிந்ததுதான். எனவே, கடைசியாக மக்கள் தொகை கணக்கெடுத்த தேதியாகிய 1961 மார்ச் 1-ந் தேதி முதல், 1962 ஜூன் 30-ந் தேதி வரையில், பிறந்தவர்கள், இறந்தவர்கள் எண்ணிக்கையை எடுப்பதே, நாம் செய்யவேண்டிய வேலை. இது மிக நீண்ட இடை வெளியாகும். இந்த நீண்ட கால அளவில் ஏற்பட்ட எல்லா முக்கிய நிகழ்ச்சிகளையும் மக்கள் ஞாபகத்தில் வைத்திருப்பார்களெனக் கூறுவதற்கில்லை. எனவே, ஆறு மாத கால அளவில் பிறந்தவர்கள், இறந்தவர்கள் எண்ணிக்கையை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து, நம்பகமான மதிப்பீடு ஒன்று பின்னர்த் தயாரிக்கப்படும். பொதுவாக மக்கள் ஏதாவது ஒரு முக்கிய பண்டிகை நாளினை அடிப்படையாக வைத்துக்கொண்டு, அது முதல் ஏற்பட்ட நிகழ்ச்சிகளை நினைவில் வைத்துக் கொள்ளுகிறார்கள். எனவே, பொங்கல் நாளாகிய 14-1-1962 முதல் 30-6-1962 வரையுள்ள கால அளவில் பிறந்தவர்கள், இறந்தவர்கள் எண்ணிக்கையைக் கண்டறிய உத்தேசித்துள்ளோம். இந்தப் புள்ளி விவரத்திலிருந்து 1-3-1961 முதல் 30-6-1962 வரையுள்ள அளவில் பிறந்தவர்கள், இறந்தவர்கள் எண்ணிக்கையைக் கணக்கிட்டுக்கொள்ளலாம்.

பிறப்பு—இறப்பு கணக்கெடுக்கும் திட்டம்

II. புள்ளி விவர சேகரிப்புப் பணியாளர்—

எத்தனை பேர் பிறந்துள்ளனர். எத்தனை பேர் இறந்துள்ளனர் என்ற புள்ளி விவரம், பிறப்பு-இறப்புப் பதிவேட்டிலிருந்து கிடைக்க வேண்டும். ஆனால், இந்தப் புள்ளி விவரம் சரிவர பதிவாவதில்லை என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயம். எனவே, கிராமப் பகுதிகளில் ஏற்படுகிற இறப்புகளையும் பிறப்புகளையும் ஒன்று கூட விடாமல் பதிவு செய்வதற்காகப் புதிய நடைமுறை ஒன்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1961 நவம்பர் 24-ந் தேதியன்று கிராம அபிவிருத்தி-தல நிர்வாகத் துறையில் வெளியான 3142-எண் அரசாங்க ஆணையில் இந்த நடைமுறை விவரிக்கப்பட்டுள்ளது. பஞ்சாயத்துக்கள், இப்போது பிறப்பு, இறப்புக்களைப் பதிவு செய்யும் யூனிட்டுகளாக உள்ளன. பஞ்சாயத்துத் தலைவர்களும், பஞ்சாயத்தார்களும், தத்தம் பகுதிகளில் ஏற்படுகிற பிறப்புகளையும் இறப்புகளையும் பதிவு செய்யும் வேலையில் தீவிரக் கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். இவர்கள் பிறப்பு-இறப்புப் பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ள பிறப்புகளையும் இறப்புகளையும் ஒவ்வொரு மாதமும் முதல் கூட்டத்தில், பரிசீலனை செய்யவேண்டும். பிறப்பு, இறப்பு எதுவாகிலும் விடப்பட்டு இருப்பதாகத் தங்களுக்கு தெரிய வந்தால், அதை அறிவிக்கவேண்டும். தற்போதைய மக்கள் தொகைக் கணக்கெடுப்பிற்கு இவர்களின் சேவையைப் பயன்படுத்த உத்தேசித்துள்ளது.

III. திட்டம் செயல் படுதல்; பஞ்சாயத்தார்கள் செய்ய வேண்டிய வேலை :—

சராசரி மக்கள் தொகை 1,500 ஆக உள்ள ஒரு பஞ்சாயத்துக் கிராமத்தில் 300 குடும்பங்களும் 10 பஞ்சாயத்தார்களும் இருக்கக்கூடும். ஒரு பஞ்சாயத்துக் கிராமத்தில் ஏற்படக் கூடிய மொத்த பிறப்பு, இறப்புகளில் 70 சத வீதம் முதல் 80 சத வீதம் வரை உள்ள வற்றை, பிறப்பு, இறப்புப் பதிவாளர் பதிவு செய்யக் கூடும். பதிவாகாமல் உள்ள பிறப்புகளையும் இறப்புகளையும் கண்டுபிடித்துப் பதிவு செய்விப்பது, பஞ்சாயத்தார்களின் பொறுப்பாகும். ஒவ்வொரு பஞ்சாயத்துக் கிராமத்திலும் இவ்வாறு பதிவாகாமல் விடப்பட்டிருக்கும் எண்ணிக்கை ஒரு மாதத்திற்கு 2 அல்லது 3-க்கு மேற்பட்டிருக்காது. பஞ்சாயத்துத் தலைவர் பஞ்சாயத்துப் பிரதேசத்திலுள்ள குடும்பங்களைப் பஞ்சாயத்தார் ஒவ்வொருவரும் இத்தனை குடும்பங்களைப் பார்த்து மக் கொள்ள வேண்டுமென்று தகுந்த முறையில் வகுத்துச் கொடுக்கலாம். ஒவ்வொரு பஞ்சாயத்தாருக்கும் இவ்வாறு பிரித்துக்கொடுக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை, 30 முதல் 40 வரை இருக்கலாம். ஒவ்வொரு குடும்பத்தலைவரிடமிருந்தும் அல்லது வேறு நபரிடமிருந்தும் அடியிற்கண்ட தகவல்களை, பஞ்சாயத்தார் விசாரித்து அறிய வேண்டும். அக்குடும்பத்தில் 14-1-1962 முதல் 30-6-1962 வரையில் உள்ள கால அளவில் பிறப்பு அல்லது இறப்பு ஏதேனும் உண்டா என்பதை விசாரிக்க வேண்டும். எவரேனும் அப்பஞ்சாயத்துப் பிரதேசத்துக்கு வெளியில் பிறந்திருந்த அல்லது இறந்திருந்து பின்னர் அப்பஞ்சாயத்துப் பிரதேசத்திற்குள் கொண்டுவரப்பட்டு இருந்தால், அதை விட்டு விட வேண்டும். இந்த விசாரணையை பஞ்சாயத்தார்கள் 4 அல்லது 5 நாட்களில் செய்து முடித்து விடலாம். ஒரு பஞ்சாயத்தார் தமக்கு வகுத்துக் கொடுக்கப்பட்டுள்ள எல்லாக் குடும்பங்களுக்கும் நேரில் சென்று விசாரிக்க முடியாவிட்டால், அவர் போய்ப்பார்த்த குடும்பங்களின் எண்ணிக்கையையும், அவருக்கென வகுத்துக் கொடுத்த குடும்பங்களின் எண்ணிக்கையையும், அவர் "C" பாரத்தில் குறிப்பிட வேண்டும்.

ஒரு பஞ்சாயத்து கிராமத்தின்/நகரத்தின் ஒவ்வொரு பிறப்பு-இறப்புப் பதிவாளரும், பிறப்புக்கள் பற்றிய ஓர் அறிக்கையையும் இறப்புக்கள் பற்றிய மற்றோர் அறிக்கையையும் முறையே A, B நமூனுக்களின்படி (இவற்றின் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது)

தயாரிக்க வேண்டும். இதனால் பஞ்சாயத்தார்களின் வேலையும் குறையும். அதை அவர்கள் செய்வதும் எளிதாயிருக்கும். அந்த அறிக்கையில் 1962-ம் ஆண்டு ஜனவரி மாதம் 14-ம் தேதி முதல் 1962-ம் ஆண்டு ஜூன் மாதம் 30-ம் தேதி வரையுள்ள கால அளவில், பதிவு செய்த பிறப்புக்கள், இறப்புக்கள் பற்றிய விவரங்கள் கண்டிருக்க வேண்டும். 1962-ம் ஆண்டு ஜூலை மாதம் 1-ம் தேதியில் பதிவாளர் A, B நமூனைக் களின்படிக்கான இந்த அறிக்கைகளுக்கு, எத்தனைப் பஞ்சாயத்தார்கள் இருக்கிறார்களோ அத்தனை நகல்கள் எடுத்து, ஒவ்வொரு பஞ்சாயத்தாரிடமும் ஒரு நகல் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு பஞ்சாயத்தாரும் தமது விசாரணையின்போது நமக்கு ஒதுக்கியுள்ள குடும்பங்களில் ஏற்பட்டதாகப் பதிவு செய்துள்ள பிறப்புகள், இறப்புகள் பற்றிய பதிவுகளைச் சரிபார்க்க வேண்டும். பதிவு செய்யப்படாமலுள்ள பிறப்பு அல்லது இறப்பு கண்டு பிடிக்கப்பட்டால், அவர் தமக்கு வழங்கப்பட்டுள்ள பூர்த்தி செய்யப்படாத C, D நமூனைக்களில் (இதன் நகல் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளது) அதுபற்றிய விவரங்களை எழுதவேண்டும். பஞ்சாயத்துத் தலைவர் 1962-ம் ஆண்டு ஜூலை மாதம் 7-ம் தேதியில் ஒரு விசேஷக் கூட்டத்தைக் கூட்டுவார். பிறப்பு-இறப்புப் பதிவாளரும் (Registrar of Births and Deaths) அக் கூட்டத்திற்கு வந்திருப்பார். பின்னர் பஞ்சாயத்தில் பதிவான பிறப்புகளையும் இறப்புகளையும் பரிசீலனை செய்து, பதிவாகாமலுள்ளவையென தாம் கண்டுபிடித்துள்ள பிறப்புகள், இறப்புகள் இவற்றின் விவரங்கள் அடங்கிய C, D அறிக்கைகளை, பிறப்பு-இறப்புப் பதிவாளரிடம் கொடுப்பார்.

IV. பிறப்பு-இறப்புப் பதிவாளரின் கடமைகள்.—முந்திய பாராவில் சொல்லியுள்ளபடி, பிறப்பு-இறப்புப் பதிவாளர், 1962-ம் ஆண்டு ஜனவரி மாதம் 14-ம் தேதி முதல் 1962-ம் ஆண்டு ஜூன் மாதம் 30-ம் தேதி வரையுள்ள கால அளவில் பதிவு செய்துள்ள பிறப்புகள் பற்றிய ஓர் அறிக்கையையும் இறப்புகள் பற்றிய மற்றோர் அறிக்கையையும் முறையே A. B. நமூனைக்களின்படி (இவற்றின் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.) 1962-ம் ஆண்டு ஜூலை மாதம் 1-ம் தேதியில் தயாரிப்பார். மேலும், ஒவ்வோர் அறிக்கைக்கும் தேவையான அளவுக்கு நகல்களை எடுத்து, ஒவ்வொரு பஞ்சாயத்தாருக்கும் ஒரு நகல் அனுப்புவார். இந்த அறிக்கைகளைத் தயாரிக்கும் போது, பதிவாளர், ஒரு ரெவினியு கிராமம் சம்பந்தப் பட்ட எல்லாப் பதிவுகளையும் முதலில் எழுதவேண்டும்; பின்னர் மற்றொரு கிராமத்திற்கான பதிவுகளை எழுத வேண்டும். இதுபோலவே எழுதிச் செல்ல வேண்டும். அவ்வாறு செய்தால் பஞ்சாயத்தார்கள் விசாரணைக் காகச் செல்லும்போது, பட்டியலில் பதிவு செய்யப்பட்ட பிறப்பு அல்லது இறப்பைச் சுலபத்தில் கண்டுபிடிக்கலாம். அந்தக் கால அளவில் பஞ்சாயத்து கிராமத்தில்/நகரத்தில் பதிவான எல்லா பிறப்புகளும்-இறப்புகளும், ஷ அறிக்கையில் கண்டுள்ளன என்று அவர் ஒவ்வொரு நகலிலும் சான்று கூறவேண்டும். ஒரு பஞ்சாயத்துக் கிராமத்தில்/நகரத்தில் ஒரு ரெவினியு கிராமத்துக்கு மேற்பட்ட கிராமங்கள் அடங்கியிருப்பின், மேற்சொன்ன கால அளவில் பஞ்சாயத்தில் அடங்கியுள்ள எல்லா ரெவினியு கிராமங்களிலும் பதிவான பிறப்புகளும்-இறப்புகளும் ஷ அறிக்கையில் அடங்கியுள்ளன என்றுகூட, அவர் சான்று கூற வேண்டும்.

மேற்சொன்னபடி 1962-ம் ஆண்டு ஜூலை மாதம் 7-ம் தேதியில் நடக்கும் பஞ்சாயத்துக் கூட்டத்திற்கு, பிறப்பு-இறப்புப் பதிவாளரும் வந்திருக்கவேண்டும். அப்போது பஞ்சாயத்தார்கள் கேட்கும் விஷயங்களுக்கு விளக்கம் தந்து, பதிவாகாத பிறப்புக்கள், இறப்புகள் பற்றிய அறிக்கைகளைப் பெற்றுக்கொண்டு, பதிவாகாத பிறப்புகளையும் இறப்புகளையும் பற்றிய விவரங்களைச் சரிபார்த்து, அவற்றை உடனடியாகப் பதிவு செய்ய வேண்டும். E நமூனைப்படியுள்ள (இதன் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது) ஓர் அறிக்கையைத் தயாரித்து, சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் ஆணையாளருக்கு இரட்டைப் பிரதிகளில் 1962-ம் ஆண்டு ஜூலை மாதம் 14-ம் தேதிக்குள் அனுப்பி விடவேண்டும்.

V. பஞ்சாயத்துத் தலைவர்கள் பஞ்சாயத்து யூனியன்களின் தலைவர்கள் ஆகியோரது கடமைகள்.—பஞ்சாயத்து யூனியன்கள் ஒவ்வொன்றின் தலைவர்களும் யூனியனில் உள்ள எல்லாப் பஞ்சாயத்துக்களின் தலைவர்களும், 1962-ம் ஆண்டு ஜூன் மாதம் 5, 6-ம் தேதிகளில் ஒரு கூட்டம்போட வேண்டும். அப்போது சுகாதார இன்ஸ்பெக்டர், பிறப்புகள், இறப்புகள் கணக்கெடுப்புத் திட்டத்தை, அவர்களுக்கு விளக்கிக் கூறுவார். பின்னர், பஞ்சாயத்துத் தலைவர்கள், 1962-ம் ஆண்டு ஜூன் மாதம் 10, 11-ம் தேதிகளில், அதே போன்று பஞ்சாயத்தார்களின் கூட்டம் ஒன்றைக் கூட்ட ஏற்பாடு செய்து, இத் திட்டம் பற்றி விளக்கிக் கூறவேண்டும். இப்பயிற்சியின்போது, பஞ்சாயத்தார்கள் விசாரணை செய்யும் பொருட்டு, பஞ்சாயத்துக் கிராமத்தில்/நகரத்தில் உள்ள குடும்பங்களை அவர்களிடையே, பஞ்சாயத்துத் தலைவர், சரிசமமாகப் பங்கிடுவார்; இந்தக் கணக்கெடுப்பில், எந்தக் குடும்பமும் விடுபடாமல் இருக்குமாறு, பார்த்துக் கொள்வார்.

VI. பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்களின் கடமைகள்.—அந்தந்த வட்டாரத்திலுள்ள எல்லாப் பஞ்சாயத்துக் கிராமங்களின்/நகரங்களின் பிறப்பு-இறப்புப் பதிவாளர்களிடமிருந்தும் பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர் E நமூனைப்படி உள்ள அறிக்கைகளைப் பெறவேண்டும். அறிக்கையில் கொடுத்துள்ள பிறப்புகள், இறப்புகள் பற்றிய புள்ளி விவரங்கள் F நமூனாவின்படி (இதன் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது) தொகுக்கப்பட

வேண்டும். பொதுச் சுகாதாரத் துறை [நெறியாளருக்கு (Director of Public Health) 1962-ம் ஆண்டு ஜூலை மாதம் 21-ம் தேதிக்குள் போய்ச் சேரும்படி அவர் அதை அவருக்கு நேரடியாக அனுப்பவேண்டும். பதிவாளர்கள் அனுப்பிய E நமூனாவின் இரண்டாவது பிரதிகளையும், அத்துடன் சேர்த்தனுப்ப வேண்டும். இதற்கென, பஞ்சாயத்து யூனியனின் சுகாதார இன்ஸ்பெக்டரது சேவை முழுவதும் பயன் படுத்திக் கொள்ளப்பட வேண்டும்.

சென்னை மாவட்ட முனிசிபாலிட்டிகள் சட்டத்தின் பொருத்தமான ஷரத்துகளை விஸ்தரிப்பதன் மூலம், பிறப்பு-இறப்புப் பதிவு வேலையை எடுத்துக்கொண்டுள்ள பஞ்சாயத்து நகரங்களைப் பொறுத்தவரையில், பஞ்சாயத்து கிராமத்துக்காக/நகரத்துக்காக மேலே விவரித்துள்ள அதே நடைமுறையை அனுசரிக்க வேண்டும்.

VII. **மேற்பார்வை (Supervision).**—1962-ம் ஆண்டு ஜூலை மாதம் முதல் வாரத்தில், பஞ்சாயத்தார்கள், விசாரணை நடத்துவர். இவ்வாறு அங்கங்கே நடைபெறும் வெளித்துறை வேலையை, மேற்பார்வையிடுவது அவசியமாகும். பஞ்சாயத்து யூனியன் தலைவர்களும், பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்களும், ஒரு பஞ்சாயத்துக் கிராமத்துக்குப் போகும் வாய்ப்பு இருந்தால், டி திட்டம் சரிவர அமலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதா என்பதைப் பார்க்க வேண்டும். மாவட்ட குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்ட அலுவலர்கள் ஒவ்வொருவரும், (District Family Planning Officer) பஞ்சாயத்து யூனியன்களின் சுகாதார இன்ஸ்பெக்டர்கள், (Health Inspector of Panchayat Union) ஒவ்வொருவரும் 5 பஞ்சாயத்துக்களுக்காவது சென்று, பஞ்சாயத்தார்களின் வேலையைச் சரிபார்த்து, தாம் சென்ற பஞ்சாயத்துக்கள் ஒவ்வொன்றிலும் கண்டு பிடித்த குறைகள் இவை, இன்னல்கள் இவை என்பதை, 1962-ம் ஆண்டு ஜூலை மாதம் 10-ம் தேதிக்குள், பொதுச் சுகாதாரத் துறை நெறியாளருக்கு, அறிக்கை ஒன்றைச் அனுப்ப வேண்டும்.

VIII. **பணியாளர்களுக்குப் பயிற்சி.**—இந்தப் பிறப்பு-இறப்புக் கணக்கெடுப்புத் திட்டத்தைச் சரிவர அமுலுக்குக் கொண்டுவரும் பொருட்டு, சம்பந்தப்பட்ட பணியாளர்களுக்கு, அவசியமான பயிற்சி அளிக்க வேண்டும். பொதுச் சுகாதாரத்துறையைச் சேர்ந்த புள்ளி விவரப் பணியாளரும், சென்னைப் புள்ளி விவரத் துறை நெறியாளரும், மக்கள் தொகைக் கணக்கெடுப்பு வேலைகளின் துணைக் கண்காணிப்பாளரும், கிராமப் பகுதிகளில் பிறப்புகளையும் இறப்புகளையும் பதிவு செய்யும் வேலையைப் பற்றியும் இத்திட்டத்தின் நோக்கம் பற்றியும், விளக்கிக் கூற வேண்டும். இக் கணக்கெடுப்பு வேலையை மேற்பார்வையிடுவதற்காக மாவட்டக் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்ட அதிகாரிகளின் சேவை, பயன்படுத்திக் கொள்ளப்படும். எனவே, அவர்களுக்கும் இவற்றை விளக்கிக் கூற வேண்டும். ஏற்கெனவே, மருத்துவத் துறையினர் (Medical Department) 1962-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6-ம் தேதி முதல், அவர்களுக்குப் பயிற்சி வழங்க உத்தேசித்துள்ளனர். அந்தப் பயிற்சி காலத்தில் கற்றுத் தரப்படும் பாடமுறையில், இந்த விஷயமும் (அதாவது, பிறப்பு-இறப்புக் கணக்கெடுத்தல்) சேர்க்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டக் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்ட அலுவலரும், 1962 -ம் ஆண்டு மே மாதம் 1-ம் தேதி முதல் 1962-ம் ஆண்டு மே மாதம் 10-ம் தேதி வரையில், இரண்டு அல்லது மூன்று தொகுதிகளில், பஞ்சாயத்து யூனியன்களின் சுகாதார இன்ஸ்பெக்டர்களுக்கு, இது விஷயமாகப் பயிற்சியளிப்பார். சுகாதார இன்ஸ்பெக்டர்கள், 1962-ம் ஆண்டு மே மாதம் 15-ம் தேதி முதல் 1962-ம் ஆண்டு மே மாதம் 31-ம் தேதி வரையில், மூன்று தொகுதிகளில், கிராமத் தலைவர்களுக்குப் பயிற்சி அளிப்பர். தொகுதி சுகாதார இன்ஸ்பெக்டர்களுக்கும் அல்லது கிராமத் தலைவர்களுக்குமான பயிற்சி ஒவ்வொன்றும், 1 அல்லது 2 தினங்கள் நடைபெறும்.

IX. **நமூனாக்களை அச்சிட்டு வழங்குதல்.**—இத் திட்டத்துக்கென நிர்ணயித்துள்ள நமூனாக்களை, சென்னை அரசாங்க அச்சக மேற் பார்வையாளரிடம் அச்சிட்டு, பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்கள் மூலமாக அவற்றை பஞ்சாயத்துத் தலைவர்களுக்கும் பஞ்சாயத்தார்களுக்கும், பிறப்பு-இறப்புப் பதிவாளர்களுக்கும் வழங்குவதற்கு, ஏற்பாடுகள் செய்யப்படும். பொதுச் சுகாதாரத் துறை நெறியாளர், இதற்குப் பொறுப்பாளியாவார். மேற் சொன்னவர்களுக்கு, 1962-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30-ம் தேதிக்குள் அவை போய்ச் சேரும்படி அனுப்ப வேண்டும்.

[4-4-62 தேதியிட்ட கல்வி—பொதுச் சுகாதாரத் துறையின் அரசாங்க ஆணை எண் 939.]

பிறப்புகள்.		இறப்புகள்.
உயிருடன் பிறந்தவை.	இறந்து பிறந்தவை.	

பஞ்சாயத்தார்கள் சரி பார்ப்பதற்கு முன் பதிவான எண்ணிக்கை.

பஞ்சாயத்தார்கள் அறிவித்த எண்ணிக்கை .. ..

மொத்தம் ..

பஞ்சாயத்திலுள்ள குடும்பங்களின் மொத்தம் .. ..

பஞ்சாயத்தார்கள் சென்று பார்வையிட்ட குடும்பங்களின் மொத்தம்.

பிறப்பு, இறப்புப் பதிவாளரின் கையொப்பம்.

பெறுவோர் :

ஆணையாளர்,
பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்,
..............பஞ்சாயத்து யூனியன்,
....

நமூனா F

......................பஞ்சாயத்து யூனியனிலுள்ள ஒவ்வொரு பஞ்சாயத்துக் கிராமத்திலும்/நகரத்திலும் 14-1-1962 முதல் 30-6-1962 வரையுள்ள கால அளவில் பதிவான பிறப்பு, இறப்புக்களைக் காட்டுகின்ற அறிக்கை.

மாவட்டம்.
வட்டம்.

பஞ்சாயத்து யூனியனின் பெயர்.

பஞ்சாயத்துக் கிராமத்தின்-நகரத்தின் பெயர்.	பஞ்சாயத்துக் கிராமத்தின்-நகரத்தின் இடக்குறி எண் (Location code number).	உயிருடன் பிறந்தவற்றின் எண்ணிக்கை		இறந்து பிறந்தவற்றின் எண்ணிக்கை		இறப்புகளின் எண்ணிக்கை	
		பதிவாளர்கள் பதிவு செய்தவை.	பஞ்சாயத்தார்கள் அறிவித்தவை.	பதிவாளர்கள் பதிவு செய்தவை.	பஞ்சாயத்தார்கள் அறிவித்தவை.	பதிவாளர்கள் பதிவு செய்தவை.	பஞ்சாயத்தார்கள் அறிவித்தவை.
(1)	(2)	(3a)	(3b)	(4a)	(4b)	(5a)	(5b)

வட்டாரத்தின் மொத்தம்.

பஞ்சாயத்து-யூனியன் ஆணையாளரின் கையொப்பம்.

Printed by the Controller of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Secretary, Rural Development and Local Administration Department, Government of Madras.

புதிய பஞ்சாயத்து ஆட்சியில், மாதர் முன்னேற்றத்தை மையமாகக் கொண்டு, பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. பிரசவ வசதிகள் செய்து தருவதோடு, குழந்தைகளை ஆரோக்கியமாக வளர்ப்பதற்கான சூழ்நிலையை உருவாக்கவும், தமிழ்நாடு அரசாங்கம் சமீபத்தில் வழி செய்துள்ளது.

நல்ல பாதைகள், வளமான எதிர்காலத்திற்கு மிகவும் அவசியமானவை. கிராமப் பொருளாதாரம் பெருக, புதிய பஞ்சாயத்து ஆட்சி நல்ல பாதைகள் அமைக்கும் வேலையை தலையாயக் கடமை மேற்கொண்டு பணியாற்ற வேண்டும்.

Regd. No. M. 7277

©
தமிழ்நாடு அரசாங்கம் 1962

தமிழ் நாட்டில் செயலாற்றப்பட்டு வரும் மதிய உணவுத் திட்டம்' உலகப் புகழ் பெற்றுவிட்டது. அனைவரும் அதனை "அருமையான திட்டம்" என்று பாராட்டுகின்றனர் "ஒவ்வொரு கிராமத்திலும் இந்தத் திட்டத்தை நிரந்தரமாக்குவதற்காக வேண்டி, ஐந்து எக்கர் நிலம் இதற்கென்று தானமாகக் கிடைக்கும் வகையில் தரும சிந்தனையாளர்கள் அனைவரும் பாடுபட வேண்டும்" என்று கல்வி அமைச்சர் திரு. பக்தவத்ஸலம், சமீபத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.